பக்கங்கள் : 20+VIII=28

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 28 ஞாயிற்றுக்கிழமை (10.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :135




## இலங்கை–இந்திய உடன்பாடு தமிழர் நலனுக்கு எதிரானது!

### மீண்டும் வைகோ தெரிவிப்பு

புதுடில்லி.ஏப்.10

இலங்கையுடன் இந்தியா பாதுகாப்பு உடன்படிக்கை எதனையும் செய்துகொள்ளக் கூடாது என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை வெள்ளிக்கிழமை டில்லியில் சந்தித்து நீண்ட ஆலோசனை நடத்தினார் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

கடந்த இரு வாரங்களில் இரண்டாவது முறையாக பிரதமரைச் சந்தித்துப் பேசியுள்ள வைகோ, இலங்கையுடன் இந்தியா இராணுவ ஒத்துழைப்புத் தொடர்பான உடன்பாடு எதையும் செய்துகொள்ளக்கூடாது என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமரை அவரது இல்லத்தில் சந்தித்து, நதிநீர் இணைப்புத் திட்டம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து சுமார் 40 நிமிடங்கள் பேசினார் வைகோ.

சில மாதங்களுக்கு முன்பு இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் டில்லி வந்திருந்தார். அப்போது பலாலி விமானத் தளத்தை இந்தியா சீரமைத்துத் தருவது தொடர்பாகவும், பழுதடைந்த இலங்கைக் கப்பலை

(18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதிக்குள் நடமாடிய சிப்பாய் கைது!

திருகோணமலை.ஏப்.10

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - தங்கநகர் என்னும் இடத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் நடமாடிய படைச்சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிறிவர்த்தன என்ற அந்தச் சிப்பாய் வசம் துப்பாக்கி ஒன்றும் திசையறிகருவியும் இருந்தன என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் திருகோணமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார். (ஜ-3-151)

# இலங்கை நிலைமையை இந்தியா உன்னிப்பாக அவதானிக்கின்றது

## கிளிநொச்சியில் செவ்வாயன்று கண்டனப் பேரணி

கிளிநொச்சி, ஏப்.10

விடுதலைப் புலிகளின் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்து கிளிநொச்சியில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலி

(18ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியிலும் செவ்வாயன்று பேரணி

தென்மராட்சி, ஏப்.10

தென்மராட்சியிலும் எதிர்வரும் செவ்வாயன்று கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை விடுதலைப் புலிகளிடம் வழங்கக் கோரியும் சுனாமி மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக் கோரியும் இந்தப் பேரணி நடத்தப்பட உள்ளது.

தென்மராட்சி பொது அமைப்புகளால் நடத்தப்படவிருக்கும் இந்தப் பேரணி காலை 10 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

பேரணியின் முடிவில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பணிமனையில் மகஜர் கையளிக்கப்படும். (ஜ-117)

### கல்விச்சுடர் செவ்வாய்க்கிழமைகளில்.....

5 ஆம் தர மாணவருக்கான புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாளை உள்ளடக்கிய 'கல்விச்சுடர்' செவ்வாய்க்கிழமை தோறும் உதயனுடன் வெளியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கல்விச்சுடரின் மேலதிக பிரதிகளை தனியாகப் பெற விரும்புவோர் செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாள்களில் 'உதயன்' அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## எதிர்க்கட்சித் தலைவர் ரணிலிடம் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவிப்பு

புதுடில்லி,ஏப்ரல் 10

**இலங்கையில் சமாதான நிலைமையை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்திருக்கிறார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.**

புதுடில்லிக்குச் சென்றிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை - இந்திய இருதரப்பு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் கண்காணிப்புக் குழுவுடன் புலிகள் சந்திப்பு

திருகோணமலை.ஏப்.10

திருகோணமலையில் இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சம்பூரில் நேற்றுக்காலை 9.30மணிக்கு நடந்த இந்தச் சந்திப்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்ட பிரதித்தலைவர் ஷெல்வே விடுதலைப் புலிகளின் திருகோண

(18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல் குழு தென்னாபிரிக்காவில்!

கேப்ரவுண்,ஏப்.10

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை நிறைவுசெய்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் நேற்று முன்தினம் தென்னாபிரிக்கா போய்ச் சேர்ந்தனர்.

தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியா நகருக்குப் போய்ச் சேர்ந்த அரசியல் குழுவினரை அந்நாட்டின் துணை அதிபரின் மூத்த ஆலோசகர் இப்ராகிம் வரவேற்றார். அவருடன் தென்னாபிரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரெயில் மேயர், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு அதிகாரி ஆன்ட்ரோ ஜாய்மன் ஆகியோரும் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை வரவேற்றனர்.



அரசியல் உயர் மட்டக் குழுவினர் தென்னாபிரிக்க அதிகாரிகளுடன் காணப்படுகின்றனர்.

தங்களின் ஐரோப்பிய விஜயத்தின் நோக்கங்கள் குறித்து தமிழ்ச்செல்வன் குழுவினர் தென்னாபிரிக்க அதிகாரிகளுக்கு விளக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் தமிழர் தாயகப் பிரதேசங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பின் அவசியம் குறித்தும் தமிழ்ச்செல்வன் விளக்கினார். (ஜ-3)

## ஜனாதிபதி - பிரதமர் முரண்பாடு உச்சத்தில்

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான முரண்பாடுகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் உள்ள நெடுஞ்சாலைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளைத் தமக்கு சமர்ப்பிக்கும்படி அந்த அமைச்சின் செயலாளரிடம் ஜனாதிபதி ரகசியமாகக் கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)


இதோ யாழ் மக்களே!

மகாநதி புடைவையகம்

வெற்றிகரமாக தனது 10ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் முகமாக 1.04.2005 - 14.04.2005 வரை வாடிக்கையாளர்கட்கு என்றும் எங்கேயும் இல்லாதவாறு விசேட கழிவு வழங்கப்படும்

சாறிபிளவுஸ் பீஸ் காட்சியறை

இல 16, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

எமது வெற்றிக்கு ஆதரவளித்த அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது இனிய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு :– சாறிபிளவுஸ் பீஸ் வகைகளுக்கு கழிவு வழங்கப்படமாட்டாது.

முகூர்த்தப் பட்டு புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம்

மகாநதி புடைவையகம்

இல 4, நவீன சந்தை

இல 16, நவீன சந்தை யாழ்ப்பாணம். ☎-2552





யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த மக்கள் வங்கியின் பதில் பொதுமுகாமையாளர் ரி.கருணசேனவும் மற்றும் வங்கி உயர் அதிகாரிகளும் ஊர்வலமாக அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் 'பீப்பிள்ஸ் லீஸிங்' நிறுவனக் கிளையை கருணசேன நாடா வெட்டித் திறந்துவைப்பதை அடுத்துள்ள படத்திலும், இந்த நிறுவனத்தின் பிரதான நிறை வேற்று அதிகாரியான டி.பி.குமாரகே, 'அசோக் லேலண்ட்' தமிழகப் பொதுமுகாமையாளர் முத்து சுப்பிரமணியன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். *(படங்கள் : பிரபா)*

## சிறுவர் பாடசாலை விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.10

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இளந்தொண்டர் சபை முன்றிலில் நடைபெறவுள்ளது.

இளந்தொண்டர் சபையின் செயலாளர் கி.அஜந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வலி.தெற்கு பிரதேச செயலர் செல்வி ரி.மஞ்சுளாதேவி பிரதம விருந்தினராகவும், சுவிஸ் சைவநெறிக் கூட அமைப்பாளர் தி.சிவகீர்த்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-13)

## மக்கள் வங்கி அதிகாரிக்கு நகரில் நேற்று வரவேற்பு

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்ப்பாணத்தில் 'பீப்பிள்ஸ் லீஸிங்' நிறுவனத்தின் கிளை அலுவலகத்தைத் திறந்து வைப்பதற்காக நேற்று வருகைதந்த மக்கள் வங்கியின் பதில் பொது முகாமையாளர் ரி. கருணசேனவுக்கு நகரில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் இருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க கருணசேனவும் உயர் அதிகாரிகளும் அழைத்து வரப்பட்டனர்.

வழிநெடுகிலும் பூரண கும்பம் வைத்து மலர் மாலை அணிவித்து வாடிக்கையாளர்களும் வர்த்தகர்களும் அவருக்கு வரவேற்பு அளித்தனர்.

கன்னாதிட்டியில் உள்ள மக்கள் வங்கித் தலைமையகத்துக்கு அழைத்துவரப்பட்ட அவரை வாசலில் வைத்து ஊழியர்கள் வரவேற்றனர்.

அதைத் தொடர்ந்து நிறுவனத்தின் கிளையை கருணசேன திறந்துவைத்தார். அதன் பின்னர் அங்கு நடந்த கூட்டத்தில் பிரமஸ்ரீ சிவசாமிக் குருக்கள், வண. ஜெயசேகரம் அடிகள், யாழ். நாக விகாராதிபதி ஆகியோர் ஆசியுரை வழங்கினர். அரச அதிபர் கே.கணேஷ் வாழ்த்துரைகளை வழங்கினார். (ஐ-3)

## 'பயில் நிலம்' மாத இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.10

கொழும்பில் வெளியிடப்பட்டுவரும் 'பயில் நிலம்' மாத இதழின் ஏழாவது இதழ் வெளியீட்டு வைபவம் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று மாலை 4.30மணிக்கு இந்த வெளியீட்டு வைபவம் இடம்பெறும்.

இதழ்தொடர்பான மதிப்பீட்டுரைகளைத் தொடர்ந்து 'விடியலின் பாதைக்கே விழிப்பு' என்னும் தலைப்பில் கவியரங்கு இடம்பெறும். (ஐ)

## பாகிஸ்தான் வென்றது!

புதுடில்லி,ஏப்.10

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் 106 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

ஜாம்ஷெட்பூரில் நேற்றுக்காலை போட்டி ஆரம்பமாகியது. முதலில் பாகிஸ்தான் ஆட ஆரம்பித்தது. அப்ரிடியும் சல்மான் பட்டும் ஆரம்ப ஆட்டக்காரர்களாக களம் இறங்கி விளையாட ஆரம்பித்தனர்.

ஆறாவது ஓவரில் நெக்ரா வீசிய பந்தில் அப்ரிடி 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சல்மான் பட்டும் சொஹைப் மாலிக்கும் இணைந்து அதிரடியாக 145 ஓட்டங்களைக் குவித்தனர்.

அதன்பின் கப்டன் இன்ஸமாம் அதிரடியாக ஆடியபோதும் 23 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

அதன்பின் சல்மான் பட 101 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த யுகானா 31 பந்துகளில் 43 ஓட்டங்களைக் குவித்தார்.

50 ஓவர்கள் முடிவில் பாகிஸ்தான் 319 ஓட்டங்களைப் பெற்றது.

320 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி கடகடவென விக்கெட்டுக்களை இழந்தது.

ஷேவாக் 29 ஓட்டங்களுடனும் டெண்டுல்கர் 6 ஓட்டங்களுடனும் கங்குலி 4 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழந்தனர்.

அடுத்துக் களமிறங்கிய டோனி 28 ஓட்டங்களையும் ட்ராவிட் 28 ஓட்டங்களையும் ஹைப் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்தியா 213 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பாகிஸ்தான் வீரர் நவீத் உல் ஹசன் சிறப்பாகப் பந்து வீசி 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (ஐ-3)

## தீவக விளையாட்டு கழகங்களுக்கு கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.


சம்பந்தப்பட்ட அனைவரையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் கேட்டுள்ளார். (எ)



வெற்றிக்களிப்பில் பாக். அணி வீரர்கள்

## லாரா அபார ஆட்டம்

கயானா,ஏப்.10



மேற்கிந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி நேற்று ஸ்பெய்னில் ஆரம்பமானது.

முதலில் களமிறங்கிய மேற்கிந்திய அணியின் துடுப்பாட்ட வீரரான பிரையன் லாரா அபாரமாக ஆடினார்.

230 பந்துகளில் 20 பவுண்டரிகளுடன் 159 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழக்காமல் உள்ளார் லாரா. ஆட்ட நேர முடிவில் மேற்கிந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்க அணிவீரர்களான நிற்னி 4 விக்கெட்டுக்களையும் ஆந்த்ரே நெல், போஜே ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (ஐ-3)

## எல்லைப் படை மாவீரர் உதைபந்தாட்டம்; இன்றைய ஆட்டங்களில் மோதும் அணிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.10

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப்பிரிவின் ஆதரவுடனும் உதயன் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் லீக் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு :-

★ பிற்பகல் 4 மணி - வட்டக்கச்சி வி.க. எதிர் கரணவாய் மத்தி வி.க.

★ மாலை 5 மணி - யாழ். பல்கலைக் கழக வி.க. எதிர் யங்ஹென்றீசியன்ஸ் வி.க.

நேற்று நடைபெறவிருந்த இந்த ஆட்டங்கள் ரத்துச்செய்யப்பட்டு இன்று இடம்பெறுகின்றன. (3-86)

## மேஜர் மாறன் நினைவாக கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

கிளிநொச்சி,ஏப்.10

தமிழீழ விளையாட்டுத் துறையின் ஏற்பாட்டில் மேஜர் மாறன் நினைவாக கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி முதல் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அணிகளுக்கிடையிலான 'செற் அப்' போட்டிகளும் கழக அணிகளுக்கிடையிலான 'செற் அப்' போட்டிகளும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஓவர் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த அணிகள் கலந்துகொள்ளலாம் என்றும் -

போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் அனுப்பப்படவேண்டும் என்றும் - தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் அ.இன்பன் தெரிவித்தார்.

விண்ணப்பப்படிவங்களை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளரிடம் அல்லது விளையாட்டுத்துறை நடுவப்பணியகத்தினிடம் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (3)

## யாழ். வலய வலைபந்தாட்டம் நாளை இந்து மகளிர் கல்லூரியில்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ். வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 3ஆம் இடத்துக்கான ஆட்டமும் இறுதியாட்டமும் நாளை திங்கட்கிழமை காலை 8 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

★ 3ஆம் இடத்துக்கான ஆட்டம் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் எதிர் வேம்படி மகளிர் கல்லூரி.

★ இறுதியாட்டம் - யாழ். இந்து மகளிர் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

★ 3ஆம் இடத்துக்கான ஆட்டம் - யாழ். கன்னியர் மடம் பாடசாலை எதிர் யாழ். இந்து மகளிர் கல்லூரி.

★ இறுதியாட்டம் - கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

★ அரையிறுதியாட்டம் - வேம்படி மகளிர் கல்லூரி எதிர் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி.

★ இறுதியாட்டம் - வெற்றிபெறும் அணி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி. (3)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் பல்கலைக்கழக வெற்றிக் கிண்ணத்துக்காக அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் துடுப்பாட்டப் போட்டியில் இன்று பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ காலை 8.30 மணி - யங்ஸ்ரார் வி.க. எதிர் பற்றீஸியன்ஸ் வி.க.

★ நண்பகல் 1மணி - சென்றலைட் வி.க. எதிர் யாழ்.பல்கலைக்கழக வி.க. (3-86)

● ● ●

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்ப்பாணம் 51ஆவது படைப்பிரிவின் அனுசரணையுடன் 514ஆவது படையணியால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

இப்போட்டியைக் கண்டுகளிக்கவரும் சிறுவர்களுக்கு நுழைவாயிலில் வைத்து இலவசமாக பிரவேசச்சீட்டு வழங்கப்படும் என்றும் -

ஆட்டமுடிவில் அந்தப் பிரவேசச்சீட்டுகள் குலுக்கப்பட்டு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அதிர்ஷ்டசாலிக்கு சைக்கிள் பரிசாக வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (3)

● ● ●

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தால் வி.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்காக அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஜொனியன்ஸ் வி.கவும் பற்றீசியன்ஸ் வி.கவும் மோதுகின்றன. (3-190)

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.


## பொறுப்புணர்ந்து பணியாற்ற வைத்தியர்கள் முன்வரவேண்டும்

மாகாண சுகாதார சேவைகளின் யாழ்.மாவட்டப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் சுட்டிக்காட்டியிருக்கும் - அழைப்பு விடுத்திருக்கும் - ஒரு விடயம் மனதை நெருடுகின்றது.

பல்லாயிரக்கணக்கில் மருத்துவர்களை உருவாக்கி விட்ட யாழ்.மாவட்டம், இன்று தனது சொந்தப் பிரதேசத்துக்கு மருத்துவர்கள் இல்லாமல் அல்லாடுகின்றது.

யாழ்.குடாநாட்டில் உள்ள ஆறு லட்சம் மக்களுக்குச் சேவையாற்ற - அவர்களின் மருத்துவ அவலங்களைத் தீர்க்க மருத்துவர்கள் இல்லை என்ற தகவல் நம்மை வேதனையில் ஆழ்த்துகின்றது.

லண்டனில் மட்டும் ஆயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமான வடபகுதி மருத்துவர்கள் பணி புரிகின்றார்கள் என்கின்றன புள்ளிவிவரங்கள். இது தவிர, உலகம் முழுவதிலும் பல்லாயிரக்கணக்கான நம்மவர்கள் மருத்துவர்களாகச் சிறப்புற்று விளங்குகின்றனர். இலங்கையிலும் தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு வெளியில் பல நூறு தமிழ் மருத்துவர்கள் சிறப்பாகப் பணி புரிந்து மெச்சப்படுகின்றார்கள்.

கடந்த இரண்டு தசாப்த காலத்துக்குள் ஆயிரத்துக்கும் அதிகமான மருத்துவர்களை நமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் உற்பவித்து உயர்வித்து வெளியே அனுப்பியிருக்கின்றது.

இவ்வாறு வளத்தையும் வளர்த்த குடாநாடுதான் இன்று தனக்குப் போதிய வைத்தியர்களின்றி அந்தரிக்கின்றது.

இது கேவலத்திலும் கேவலம் அன்றோ?

யாழ்.மாவட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வெளியே உள்ள அரச வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்கு நூறு வைத்திய அதிகாரிகள் தேவை. ஆனால், பணியில் இருப்பவர்கள் ஆக 9 பேர் மட்டுமே. இந்த 9 பேரிலும் கூட ஐவர் பெரும்பான்மை இனத்தவர்கள். மேலும் மீள நியமன அடிப்படையில் பணியாற்ற இணங்கிய நல்ஜீவன்களான 6 வைத்திய அதிகாரிகளின் உதவியோடு 'யானைப் பசிக்கு சோளப் பொரி போல' மருத்துவ சேவை தொடர்கின்றது.

யாழ்.மாவட்டத்துக்குப் பதிவு உதவி மருத்துவர்கள் 58 பேர் தேவை. ஆனால், இருப்பவர்களோ ஆக 17 பேர் மட்டுமே. மீள் நியமனங்களின் அடிப்படையில் சிலரைப் போட்டு நிரப்பினாலும் வைத்தியர்களின்றிப் பல மருத்துவ நிலையங்கள் மூடப்பட்டுக் கிடக்கும் பரிதாப நிலை. பணியாற்றும் பதிவு - உதவி வைத்தியர்களின் நிலையோ பரிதாபம். காலை ஒரு மருந்தகத்தில், மாலை ஒரு வைத்திய நிலையத்தில் என்று ஓடி ஓடிப் பணி செய்தாலும் வைத்தியரின்றி மருத்துவ மையங்களை மூடும் நிலைமை தவிர்க்க முடியாததாகியிருக்கின்றது. கஷ்டப் பகுதிகளில் நீண்டகாலம் பணியாற்றியோர் அதிலிருந்து மீளமுடியாத இக்கட்டு.

1970 களிலும், 1980 களிலும் மருத்துவ சேவையிலும், தரத்திலும் முன்நின்ற நமது மாவட்டம், இன்று மக்களுக்கான மருத்துவ வசதியில் கேவல நிலையில் தடுமாறுகின்றது.

யாழ்.மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும் குடாநாட்டு மருத்துவர்கள் அல்லது குடாநாட்டில் கணிசமான காலம் பணிபுரிந்த மருத்துவர்கள் தமது மேற்படிப்புக்காக வெளியூர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் போவது தப்பல்ல. தமது எதிர்கால வாய்ப்பு, வசதி, வருமானம், குடும்ப நிலைக்காக அந்தப் பிரதேசங்களில் அவர்கள் நிலையாகத் தங்கியிருப்பதையும் நாம் குறைகூற வரவில்லை.

ஆனால், மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் இந்த இனத்தின் உரிமைக்காகவும் போராட்டங்களைச் சந்தித்து, அதன் வடுக்களைச் சுமந்து, இழப்புகளை எதிர்கொண்டு அல்லற்பட்ட நமது யாழ்.மண், எங்களின் சொந்த மண் - இன்று வைத்திய வசதிகளின்றி - மருத்துவ நிபுணர்களின் சேவையின்றி - கஷ்டப்படுகின்றது. இந்த மண்ணிலிருந்து ஊற்றெடுத்த, விருட்சமான உடன் பிறப்புகளுக்கு இந்த மண்ணுக்கு ஆற்ற வேண்டிய கடமையை இந்நேரத்தில் சுட்டிக்காட்டுவது நமது கடமையாகின்றது.

வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் வைத்தியர்களாகப் பணிபுரியும் நம்மவர்கள் தமது கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து தமது மண்ணுக்காக சில காலமாவது - குறிப்பிட்ட இடைவெளிகளின் அடைப்படையிலாவது - பணியாற்ற முன்வரவேண்டும். இது அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சமூகப் பொறுப்பு; இனக்கடமை என்பதை உணர்ந்து தாமாகவே பணியாற்ற அவர்கள் முன்வரவேண்டும்.

குடாநாட்டுக்கான வைத்திய சேவைக்கு முன்வரும் அனைத்துத் தகுதி பெற்ற ஆள்களையும் கட்டித் தழுவி வரவேற்க நமது மண்ணும் -

அதற்கான வசதிகள், வேதனங்கள், வாய்ப்புகளை வழங்க தென்னிலங்கை அரசும் கூட -

தயாராக இருக்கும் போது, அதை நிறைவு செய்வதற்கு நமது உடன்பிறப்புகளான வைத்திய கலாநிதிகள், மருத்துவ பட்டதாரிகள், தேர்ந்த மருத்துவர்கள் மறுப்பது அவர்களுக்கு மட்டுமல்ல நமக்கும் நமது இனத்துக்கும் இழிவுதான். இதனை அவர்கள் தமது ஆழ் மனதைத் தொட்டுக் கேட்டுத் திருந்துவார்களா?

# தரக்கணிப்பு முறையில் சம்பள உயர்வு: அடுத்த வருடத்துக்கு ஒத்திவைப்பு

### கல்வி அமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிவிப்பு

அச்சுவேலி.ஏப்.10

ஆசிரியர் செயலாற்றுகைத் தரக் கணிப்பு செயன்முறையின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு வருடாந்தச் சம்பள உயர்வு வழங்கும் நடைமுறை ஒரு வருடத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இதுவிடயமாக, கல்வியமைச்சு புதிய சுற்றறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள முக்கிய விடங்கள் வருமாறு:-

ஆசிரியர் செயலாற்றுகைத் தரக் கணிப்பின்படி வருடாந்த சம்பள உயர்வு வழங்கும் நடைமுறை 2005 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டுக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

ஆசிரியர் செயலாற்றுகைத் தரக்கணிப் பீட்டின் முதலாம் பிரிவின் 6:2 ஆம் பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள 'சுயமாக முன் வந்து பொறுப்பேற்ற கடமைகள்' என்ற விடயத்தை வருடாந்த சம்பளம் ஏற்றிச் சிபார்சுக்கு கருத்தில் கொள்ளக்கூடாது என்றுள்ளது.

கல்வி அமைச்சின் 2003/39 சுற்றறிக்கையின்படி ஆசிரியர்களின் வருடாந்த சம்பள உயர்வினை அதிபர்கள், அதிகாரிகள் சிபார்சு செய்வதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளில் தவறுகள் - துஷ்பிரயோகங்கள் ஏற்படலாம் என ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதை அடுத்தே சுற்றறிக்கையில் பெரியளவில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதோடு, பின்பற்ற வேண்டிய காலமும் பிற்போடப்பட்டிருப்பதாக அறிய வருகின்றது.

புதிய நடைமுறையின் படி, 2006 ஆம் ஆண்டிலிருந்து 6:1 பிரிவில் உள்ளடக்கப்பட்டிருக்கும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் அன்றேல் பொறுப்பான பிரதான துறைகள் என்பதை மட்டும் அடிப்படையாக வைத்து வருடாந்த சம்பள உயர்ச்சிக்கான சிபார்சினை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-11)

# அனுமதி பெறாமல் மரங்கள் தறிப்பதை மக்கள் தாமாக உணர்ந்து நிறுத்த வேண்டும்

### வனவளத்திணைக்களத்தின் மாவட்ட அலுவலர் அறிவுறுத்து

மண்டைதீவு.ஏப்.10

மரங்கள் அனுமதியின்றித் தறிக்கப்படுவதை பொதுமக்கள் தாமாக உணர்ந்து நிறுத்தாதுவிட்டால் குடாநாடு வனாந்தரமாக மாறுவதை எவராலும் தடுக்கமுடியாது.

வனவளத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலர் மு.பிரபாகரன் இதனைத் தெரிவித்தார்.

இதுவிடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடந்து முடிந்த யுத்தத்தினால் குடாநாட்டின் பனை மரங்களும், தென்னை மரங்களும் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் தற்பொழுது விறகு மற்றும் கட்டடம், தளபாடத் தேவைகளுக்காக முதிர்ச்சியடையாத ஏனைய மரங்கள் தறிக்கப்படுகின்றன.

இவை வனவளத் திணைக்களத்தின் அனுமதி இன்றியே தறிக்கப்படுகின்றன. மரங்கள் தறிப்பதாயின் சம்பந்தப்பட்ட பகுதியின் கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரின் சிபார்சின் அடிப்படையில் வனத் திணைக்களத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

இந்த விடயத்தில் மரத்தின் வயதும், உரிமையாளர் பெயர், விலாசம் என்பனவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தீவுப்பகுதி, தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் காணி உரிமையாளர்களுக்குத் தெரியாமலே மரங்கள் வெட்டி அகற்றப்படுகின்றன. இதைப் பொது அமைப்புகள் முன் வந்து தடை செய்ய வேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-88)

# புலோலி பௌராணிகரின் மூன்று நூல்கள் இன்று புற்றளை ம.வியில் வெளியீடு

வடமராட்சி.ஏப்.10

புலோலி தெற்கு பௌராணிகர் ஆ.ச.க. சுப்பிரமணியம் எழுதிய திருத்தொண்டர் புராணவசனம், இரண்டாம் சைவ வினா விடை, திருவாதவூரர்புராண ஆய்வுரை ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்குப் புற்றளை மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர் சே.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறும் இந்த வெளியீட்டுவிழா மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம் என்பவற்றுடன் ஆரம்பமாகும்.

நிகழ்வில் ஆசியுரையை புற்றளை சித்தி விநாயகர் ஆலயப் பிரதம குரு சோ.ஜெய்பால சுந்தரக்குருக்கள் வழங்குவார். வரவேற்புரையை யாழ்.மாவட்ட முன்னாள் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் சு.கதிர்காமத்தம்பி நிகழ்த்துவார்.

தொடர்ந்து நூல்களின் வெளியீட்டுரையை பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் நிகழ்த்துவார். தொடர்ந்து நூல்களின் முதற்பிரதிகளை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் பெற்றுக்கொள்வார்.

நூல்களின் ஆய்வுரையை யாழ். மாவட்டச் செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திப்பிள்ளை நிகழ்த்துவார். தொடர்ந்து சிறப்பு விருந்திரனாகக் கலந்துகொள்ளும் யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா சிறப்புரை ஆற்றுவார்.

இதனைத் தொடர்ந்து நூலாசிரியர் ஆ.ச.க.சுப்பிரமணியம் பதிலுரை ஆற்றுவார்.

(எ-173)

# பாண்விலை குறைப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.10

பாணின் விலை 20 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை முதல் அமுல் படுத்தப்படும் இந்த விலைக்குறைப்பில் பாணின் விலை 22 ரூபாவிலிருந்து 20 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. மாவின் விலையில் மாற்றம் ஏற்படும்போது பாணின் விலையிலும் மாற்றம் ஏற்படுமென்றும்-

மா தேவையான வெதுப்பகங்கள் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் மேற்படிச் சங்கம் தெரிவித்துள்ளது.(து-202)

# கூடாரங்களின் கீழ் கல்விகற்கும் மாணவர்கள் மழையினால் அவதி

### மணற்காடு - குடத்தனைப் பகுதியில்!

வடமராட்சி.ஏப்.10

சுனாமி கடற்கொந்தளிப்பு காரணமாக பாடசாலைகளை இழந்து நிர்க்கதியாகியுள்ள வடமராட்சி கிழக்கு மாணவர்கள் தற்காலிக கூடாரங்களின் கீழ் இருந்து கல்வி கற்று வருகின்றனர். தற்போது பெய்து வரும் மழை காரணமாக அந்த மாணவர்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

வடமராட்சி கிழக்கில் பெரிதும் பாதிக்கப்பட்ட மணற்காடு கிராமத்தில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, குடத்தனை மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியன தற்காலிக இடங்களில் அரசசார்பற்ற நிறுவனங்களின் கூடாரங்களுக்குள்ளேயே இயங்கிவருகின்றன. இந்த நிலையில் தற்போது மழை பெய்து வருவதால் மாணவர்கள் அதற்குள்ளிருந்து கல்வி கற்க முடியாது பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இம் மாணவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை கருத்திற்கொண்டு அவர்கள் தமது கல்வியை சுமுகமாகத் தொடர சம்பந்தப்பட்டவர்கள் உதவிபுரிய முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(து-36-173)

# மானிப்பாய் வர்த்தக நிலையங்களில் அதிகரித்த விலையில் பால்மா விற்பனை

### விலைக் கட்டுப்பாட்டுப் பகுதி எச்சரிக்கை

யாழ்ப்பாணம்.ஏப்.10

ஆனைக்கோட்டை, மானிப்பாய்ப் பகுதிகளில் இயங்கும் விற்பனை நிலையங்களில் குழந்தைகளுக்கான பால்மா வகைகள் மற்றும் பாவனைப் பொருள்கள் குறிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க அதிகரித்த விலையில் விற்பனைசெய்யப்படுகின்றன என யாழ். மாவட்ட விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

இத்தகைய நடவடிக்கைகளால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர் என்று விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குறிக்கப்பட்ட விலையிலும் பார்க்க அதிகரித்த விலையில் பால்மாவை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

குழந்தைகளுக்கான பால்மாவை அதிகரித்த விலையில் விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள் பற்றி பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் - என்றுள்ளது.

(எ-204)

### நாளை

பங்குனி 29

திங்கட்கிழமை

11.04.2005

திதி : திருதியை

பின்னிரவு 02.00 வரை

நட்சத்திரம் : பரணி

நண்பகல் 11.58 வரை

கார்த்திகை விரதம்

சுபநேரம் : 12.06 - 01.36

ராகுகாலம் : 07.36 - 09.06

(யாவும் பழைய நேரப்படி)

# 12 அடி நீளமான மலைப்பாம்பு சாவகச்சேரியில் பிடிபட்டது

சாவகச்சேரி.ஏப்.10

சாவகச்சேரி, கற்குழிப் பகுதியில் 12 அடி நீளமான மலைப்பாம்பு அப்பகுதி இளைஞர்களால் தடம் போட்டுப் பிடிக்கப்பட்டது.

இந்தப் பாம்பு கடந்த 7 ஆம் திகதி கற்குழிப்பகுதியில் பற்றைகள், முட்புதர்கள் அடர்ந்த பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. பன்னிரண்டு அடி நீளமான இப்பாம்பு ஓர் அடி அகலமான சுற்றளவைக் கொண்டதாகக் காணப்பட்டது.

இப்பாம்பின் நடமாட்டத்தை அவதானித்த இளைஞர்கள் பற்றைகள், முட்புதர்களை வெட்டி அழித்து பாம்பைத் தேடிக் கண்டுபிடித்தனர்.

பகுத்த சிரமத்தின் மத்தியில் தடம் போட்டு அதனைப் பிடித்தனர். பின்னர் இப்பாம்பு கோடரியால் கொத்திக் கொல்லப்பட்டது.

பாம்பினுள் பல முட்டைகள் இருந்தது. இதனால், இப்பாம்பு பெண்பாம்பு எனவும் அடையாளம் காணப்பட்டது.

இந்தப் பாம்பினை பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் பார்வையிட்டனர். பல இடங்களில் மக்கள் பார்க்கக் கூடியதாக வைக்கப்பட்டிருந்தது.

தென்மராட்சியில் பல காணிகளில் காணப்படும் பற்றைகளில் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (து-31-117)

### உதயவாக்கு

தனக்குத் தெரிந்த விடயங்களை மட்டும் மனிதன் பேசுவானாகில், உலகில் பூரண அமைதி பிறக்கும்.

- பெர்னாட்ஷா.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள 'GODREJ' இந்தியத் தயாரிப்பு தமிழ் தட்டெழுத்து இயந்திரம் விற்பனைக்குண்டு. உறுதிகள் தயாரிப்பதற்குகந்தது. தொடர்பு: மு.தியாகராசா, சத்தியப பிரமாண மொழி பெயர்ப்பாளர், பஸ் நிலையம் அருகில், பிரதான வீதி, சங்கானை. (43970)

நல்ல நிலையிலுள்ள Singer தையல் மெசின் (Folding Model) புதிய மொடல் இரண்டு லாச்சிகள் உள்ளன. Hero Ladies சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு.தொடர்பு: மா.திருச்செல்வம், லோட்டன் றோட், மானிப்பாய். (44051)

புதிய சோபா செற்றிகள், கங்கர்கள், பாவித்த ஜெனரேட்டர்கள் (டீசல், பெற்றோல்), பேப்பர் அமர்த்தும் இயந்திரம், தட்டச்சு இயந்திரங்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: த.குமாரசாமி. 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(44039)

குளிர்சாதனப் பெட்டி Double Door (General, made in Japan) நல்ல நிலையிலுள்ள Sony T.V, G14" Q2 -95 E32 Barand New (Green Box) தொடர்பு:- 83, மணியகாரன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் (தந்தை இல்லம்). (44055)

## நாய்க்குட்டி விற்பனை

நல்ல சுத்தமான Original Great Dane நாய்க்குட்டிகள் (2 மாதம்) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (43951)

31 நாள்கள் நிறைந்த ஜேர்மன் செபட் கறுப்பு நிறம் கொண்ட அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம. மார்க்கண்டு, M.S.லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (43984)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் 1Kg - 170/-, சுத்தம் செய்தது - 1Kg 255/- மற்றும் புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்., New R.S.K Farm, மானிப்பாய் வீதி, பெரிய மதவடி, உடுவில். (43840)

புறொயிலர் இறைச்சிக்கோழிகளும் மற்றும் விறாத்துக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (43997)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 11.04.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெலலியடிக் கிளையிலும் சுட்டி பாம் வட்டுக்கோட்டை., சந்நிதி பாம் தொண்டைமானாறு., ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி., முருகன் - சாவகச்சேரி., நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.(43743)

## வீடு விற்பனைக்கு

இல.55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மேல்மாடியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன் 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (43819)

யாழ்ப்பாணம், நந்தாவில், கொக்குவிலில் (செம்பியன் வீதியில்) ஒன்றரைப் பரப்புக் காணியில் நான்கு படுக்கை அறைகள் கொண்ட நவீன மாடிவீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: அ.முத்துலிங்கம் T.P.: 021 222 3837, யாழ்ப்பாணம்., 0044 2085532202, 0044 7962059886 லண்டன். (சி-42162)

அரியாலை, முள்ளி ஒழுங்கையில் அமைந்துள்ள வீடு (3 அறைகள், சமயலறை, களஞ்சிய அறை, இணைந்த மலசலகூடம், இரண்டு வரவேற்பறை) விற்பனைக்குண்டு. தொடர்பு: 150,நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். T.P.: 222 - 2894 சனி, ஞாயிறு நாள்களிலும், கிழமை நாள்களில் மாலை 5 மணிக்குப் பின்பும் பார்வையிடலாம் (43956)

பலாலி வீதியில் 1¾ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 6146307, 077 6696081. (44037)

## கார் விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பில் உள்ள 15 ஸ்ரீ XXX தொடரிலக்கமுடைய Fiat Lada A/C பொருத்தப்பட்ட கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.07, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். T.P.: 0777 244466 (44020)

நல்ல நிலையில் உள்ள 5 ஸ்ரீ, 3ஸ்ரீ தொடர் இலக்கங்களை உடைய மைனர் கார்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/7 வைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். T.P.: 222 5849 பார்வையிடும் நேரம் ஞாயிறு காலை 7 தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை. (44002)

## VAN விற்பனைக்கு

251 தொடரிலக்கமுடைய Super GL 113 Dual A/C Hiace Van விற்பனைக்குண்டு தொடர்பு: T.P: 077587121, 0777 733681, 222 7214.(44053)

## கமரா போன் விற்பனைக்கு

3 மாதங்கள் பாவித்த மிக நல்ல நிலையில் உள்ள Nokia 7610 இலக்க போன் விற்பனைக்குண்டு. (MP3 Video, Video Editor, Winzip, word, bluetooth போன்ற பல நல்ல நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கியது குறிப்பிடத்தக்கது). USB Cable Memory Card உம் உண்டு. தொடர்பு: 0777-570131. (44036)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு, உப தபாலகத்திற்கு அண்மையில் கே.கே.எஸ். வீதியில் (இரண்டாவது கிணற்றுப் பங்குடன் கூடிய) இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0712-355145. (43889)

இராச வீதியில் நவற்கிரி சந்திக்கு அருகில் வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் கிணற்றுடன கூடிய 16பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 222 3772. (44018)

சுன்னாகம், சூராவத்தை முத்துமாரி அம்மன கோயிலுக்கு அருகில் வீடு கட்டக் கூடிய (4பரப்பு 2 குளி) சதுரக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: K.சுபாகரன் வைரவர் கோயில் வீதி, மானிப்பாய். T.P 0777 - 570221 (43992)

பருத்தித்துறை, கற்கோவளம் 'Ice Factory'க்கு முன்னால் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை ஒரு பரப்பு ஒரு லட்சத்திற்கு மேல். மேலதிக தொடர்புகளுக்கு திருமதி சிவமலர் கதிர்காமசோதி, சட்டத்தரணி, 144, உட்துறைமுகவீதி, திருகோணமலை. (சி.42155)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பம், 1975ஆம் ஆண்டு பிறந்த, அனுஷம் 3ஆம் பாதம் பாவக்கிரகம் 31¼, 12இல் செவ்வாயுள்ள U.K., P.R. உள்ள அழகான மணமகனுக்கு நல்ல அழகான சிவந்த மணமகள தேவை. இங்கு வந்து திருமணம் செய்வார். தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43732)

யாழ்.இந்து கௌரவ, குடும்பத்தைச் சேர்ந்த மூல நட்சத்திரம் கிரகபாவம் 14½, வயது 32 கனடாவில் பிரஜாவுரிமை உடைய மணமகனுக்கு நல்ல படித்த, பண்புள்ள, அழகான மணமகளைப பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: கு.தங்கேஸ்வரன் 'வசந்த வாசம்' ஸ்ரேசன் றோட், கொக்குவில், யாழ்ப்பாணம். (43991)

1975, காப்புறுதி உத்தியோகத்தர், கிரகபாவம் ஐம்பது 63 அங்குலம் உயரமுள்ள மணமகனுக்கு அழகான, தொழிலுள்ள இந்து கௌரவ குடும்பத்து மணப்பெண் தேவை. தொடர்பு: 0776140273. (43913)

SLAS அதிகாரி 1975, லக்கின பாவம் பூச்சியம், சகலபாவம் பதினேழு, 1976 கல்வியியல் கல்லூரி ஆசிரியர், உதயத்து சனி, செவ்வாய் கிரகபாவம் எண்பத்தினான்கு, சகோதரர்களுக்கு தொழிலுள்ள படித்த குடும்பத்து அழகான இந்து கௌரவ குடும்பத்து மணப்பெண்களை பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: 0776140273. (43912)

1964, கொழும்பு வர்த்தகர், கிரகபாவம் இருபது, 1965 வலிகாமத்து வர்த்தகர், கிரகபாவம் நாற்பது, 1968 Electronic வர்த்தகருக்கும் கிரகபாவம் இருபத்தைந்து இவர்களுக்கு அழகான தொழிலுள்ள இந்து கௌரவ குடும்பத்து மணப்பெண்கள் தேவை. தொடர்பு: 077 6140273 (43911)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகம் பார்க்கும் திருமணமாகி வாழ்விழந்த மணமகனுக்கு நற்பண்புள்ள மணமகள் தேவை. (வாழ்விழந்தவர்களும் விரும்பத்தக்கது) சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. வயது 30-45 தொடர்பு: விளம்பர இல. 2553 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (44047)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பம், 1977ஆம் ஆண்டு, அச்சுவினி நட்சத்திரம், முதலாம் பாதம், கிரகபாவம் (13) உள்ள மிகவும் அழகான சிவில் என்சினியா வேலை பார்க்கும் மணமகளுக்கு என்ஜினியர், டாக்டர், எக்கவுண்டன் மணமகன் தேவை. உடன தொடர்புகொள்க: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43734)

கௌரவ குடும்பம், 1972ஆம் ஆண்டு, பூரட்டாதி நட்சத்திரம், 3ஆம் பாதம் 29¼ பாவக்கிரகம், B.A. பட்டதாரி அழகான ஆசிரியைக்கு உயர் அரச உத்தியோகம் அல்லது பட்டதாரி ஆசிரியா மணமகன் தேவை. (மாமிசபோசனம் அற்றவர் விரும்பத்தக்கது) தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43733)

கௌரவ குடும்பம், 1973ஆம் ஆண்டு, 12இல் செவ்வாய், புனர்பூசம் நட்சத்திரம் 4ஆம் பாதம், பட்டதாரி ஆசிரியைக்கு நல்ல அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. தொடர்பு: M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் கோயில் பின் வீதி, சாவகச்சேரி. (43735)

1973 பூச நட்சத்திரம் 4இல் செவ்வாய், கிரகபாவம் 9 கொழும்பில் பிரபல பாடசாலையில் கணனி விரிவுரையாளராகக் கடமையாற்றும் மணமகளுக்கு வெளிநாட்டில் உள்ள பொருத்தமான மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: விளம்பர இல. மே/பா உதயன், யாழ்ப்பாணம். (44021)

### சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு. கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம். இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு:

**BIO TEC INTERNATIONAL**

இல.131/2, பலாலி வீதி (விவசாயப் பண்ணைக்கு எதிராக OPPOSITE FARM SCHOOL) திருநெல்வேலி. T.P.: 021-4590907.

(43790) (21-11-17)

### தேவை

மருத்துவமனையில் உதவியாளராகப் பணிபுரிவதற்கு பெண் ஒருவர் உடன் தேவை (வயது 45 க்கு உட்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது) (தங்குமிடவசதி, உணவு வழங்கப்படும்).

தொடர்பு : விள. இல். 2551, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(44045) (21-11-17)

## மணமக்கள் தேவை

இந்து அழகான ஒரே மகள் மிகச் சிறந்த சீதனமுடையவருக்கு 38 இற்கும் 46இற்கும் இடைப்பட்ட வயதுடைய மணமகனும், இளைய சகோதரன் இங்கிலாந்துப் பிரஜை இங்கிலாந்து முகாமைத்துவ பட்டதாரிக்கு 28 இற்கும் 35 இற்கும் இடைப்பட்ட வயதுடைய மணமகளும தேவை. தயவு செய்து விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2546 மே/பா உதயன். (43855)

## காணி தேவை

கிளிநொச்சிக்கும் பரந்தனுக்கும் இடையேயான ஏ-9 நெடுஞ்சாலையில் நான்கு ஏக்கருக்குக குறையாமல் காணி தேவைப்படுகின்றது. காணி விற்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு விவரங்களை அனுப்பி வைக்கவும். த.பெ.எண் 23, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (சி/42161)

## காணி குத்தகைக்கு

கிளிநொச்சி மாவட்டம் பிரதான வீதியிலுள்ள புராதன உறுதிக் காணி (1940, 1950 களில் மாடு, ஆடு பெரிய பண்ணை, நீர்ப்பாசன முடையது) நிறுவனங்களுக்கோ தனியொருவருக்கோ பலவருட குத்தகைக்கு ஒப்பந்தத்தில் வழங்கப்படும். தகைமை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 2545 மோ/பா உதயன், யாழ்ப்பாணம். (43856)

## அறை தேவை

N.G.O வில் வேலை செய்பவருக்கு (உணவுடன்) கோயில் வீதிக்கு அருகில் அறை தேவை. தொடர்பு: T.P.066 222 4836. (சி-42203)

## பணிப்பெண் தேவை

அரச உத்தியோகத்தில் பணிபுரியும் குடும்பத்தைப் பராமரிப்பதற்கு பண்புள்ள பணிப்பெண் தேவை. தங்குமிட வசதி, உணவு என்பன வழங்கப்படும். தொடர்பு: விளம்பர இல. 2552 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (44046)

### PERSONAL MATHS CLASS

தரம் 8,9,10,11 வரையிலான மாணவர்களுக்கு தனிப்பட்ட ரீதியாகவும், குழு ரீதியாகவும் (Visiting Class) கணிதம் கற்பிக்கப்படும், மீள் பரீட்சார்த்திகளும் தொடர்பு கொள்ளலாம்.

(44045)(21-38-11-17)

தொடர்புகளுக்கு: 021 222 3957, 0714 - 838387.

### வாழ்த்துக்களுடன் வகுப்புகள்

கல்விக் கடலில் இன்றும் என்றும் கலங்கரை விளக்கம் **'அட்வான்ஸ்ட் அம்பிசஸ் அக்கடமி'**யின் வழிகாட்டலில் 2004 க.பொ.த. (சா.த) பரீட்சையில் 72%இற்கு மேற்பட்ட சித்தி பெற்று க.பொ.த உயர்தர வகுப்பிற்குத் தயாராகியுள்ள மாணவர்களை நிறுவன ஆசிரியர்களும், சக மாணவர்களும் ஆசி கூறி வாழ்த்துகின்றார்கள்.

- 2005 G.C.E. (O/L) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புகள் (Day Classes) **நாளை (11.04.05) திங்கள்** காலை 9.00 மணிக்கு ஆரம்பம்
- G.C.E. (A/L) 2007 மாணவர்களுக்கான கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகள் **13.04.05 புதன்** காலை 9.00மணிக்கு ஆரம்பம்

குறிப்பு: 2004 O/L பரீட்சையில் எமது நிறுவனம் தனது ஓராண்டு பூர்த்தியிலும் கூட கணித பாடத்தில் 100% சித்தியைப் பெற்று பெருமையடைகின்றது.

**அட்வான்ஸ் அம்பிசஸ் அக்கடமி**

ஓடக்கரை வீதி, சங்கானை.

(43995)(21-11-17)

### நூல் வெளியீட்டு விழா

'நவசக்தி ஹோமம்' என்ற நூலின் வெளியீட்டுவிழா இன்று மாலை 4 மணிக்கு நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

நீர்வேலி வாய்க்காற் றரைவைப் பிள்ளையார் ஆலயத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ஆ.சந்திரசேரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை பிரம்ஸ்ரீ ப. சிவானந்தசர்மாவும், மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறைப் பேராசிரியர் பா.கோபாலகிருஷ்ண ஐயரும் நிகழ்த்துவார். (எ-110)

### இலவசம்

**இளைஞர்களுக்கான பயிற்சி**

150 நாடுகளில் பயிற்சி நடத்தும்

(வாழும் கலைப்பயிற்சி அறநிலையம் இந்துகலாசார அமைச்சின் அனுசரணையுடன் அளிக்கிறது)

இதில் கிடைக்கும் பயன்கள்:

- ★ மன இறுக்கம் மன உளைச்சல் நீக்கி, ஆத்ம சக்தியை உணர்ந்து ஆன்மீகவழியில் ஊக்கம்கொண்டு செவ்வனே பணிசெய்ய
- ★ நினைவாற்றல் பெருக
- ★ உடல் ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் பெற
- ★ நேர்மை, வாய்மை, மனிதநேயத்துடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள

18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட இருபாலருக்கும் 16.04.2005 ஆம் திகதி முதல் 22.04.2005 ஆம் திகதிவரை 7 நாள்களுக்கு காலை 7.30 மணிமுதல் மாலை 7.00 மணிவரை. இலவச காலை, மதிய, மாலை உணவுடன் சாவகச்சேரி, யா.நகர், சுழிபுரம், நெல்லியடி ஆகிய நான்கு முகாம்களில் பயிற்சி நடக்கும். குறைந்த இடமே உள்ளதால் இலவச அனுமதிச் சீட்டு பெற்றுக்கொள்ள உடன் தொடர்புகொள்ள:

**பதிவு இடம் நேரம்**

| | |
|---|---|
| யா/ ஹறிபேக் கல்லூரி சாவகச்சேரி<br>நெல்லியடி மத்திய ம. வி, நெல்லியடி.<br>தினமும் காலை 9.00 முதல் மாலை 1.00 வரை | பாடசாலை அபிவிருத்திச் சங்கம்<br>யா/வேலாயுதம் ம.வி.,<br>பருத்தித்துறை.<br>காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை. திங்கள் முதல் வெள்ளி வரை. |
| அன்னதான மண்டபம் பராளாய் முருகன் கோவில் சுழிபுரம். 8. 4. 05 முதல் 11. 4. 05 வரை காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரை | |

குறிப்பு: ஒவ்வொரு முகாமிலிருந்தும் திறமைமிக்க பத்து நபர்கள் மேற்பயிற்சிக்காக வெளிநாடு அனுப்பப்படுவர். பரீட்சை எதுவும் இல்லை. காலை, மதிய, மாலை உணவு இலவசம்.

### 13 ஆவது ஆண்டு இதய அஞ்சலி



**அமரர் கந்தையா தம்பிப்பிள்ளை J.P.**

(முன்னாள் தலைவர், கைதடி - நாவற்குழி கிராம சபை உபதலைவர், கைதடி வீரகத்திப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபை, உரிமையாளர். நியூ லீலாவதி ஸ்ரோர்ஸ், கைதடிச்சந்தி, கைதடி)

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
சேவையே செய்து வாழ்ந்த செம்மலே!
புனித வாழ்வு வாழ்ந்தே புண்ணியர் கழல் சேர்ந்தீர்
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி.

மகன், மகள்மார், மருமகன்மார், மருமகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(44014)(21-11-17)

# நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை நோக்கி

## வடபுனரமைப்புத்திட்டம்

### கடற்றொழில் புனரமைப்புக்கான உடனடி உதவித்திட்டம்

போரினால் பாதிக்கப்பட்ட மீன்பிடித்துறையை முன்னேற்றுவதற்காக, ஏற்கனவே மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களைக் கருத்திற் கொண்டு, கடற்றொழில் புனரமைப்புக்கான உடனடி உதவித்திட்டத்தின் கீழ் (Fisheries Emergency) அரை மில்லியன் யூரோ செலவில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்திசெய்வதற்கான கட்டிடங்கள், தளபாடங்கள், நவீன உபகரணங்கள் என்பன யாழ்ப்பாண நகரம், வேலணை, வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களில் உள்ள 3 கடற்றொழிலாளர் சங்க சமாசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்கான வைபவ நிகழ்வு கடந்த ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி வேலணையில் நடைபெற்றது. தேவை மதிப்பீட்டு ஆய்வின் அடிப்படையில் துறைசார்ந்த வெளியாரின் பரிந்துரைகளை உள்ளடக்கியதாக இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதியை ஜேர்மன் சமஸ்டிக் குடியரசின் பொருளாதார ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான அமைச்சும், உலகஉணவு விவசாய நிறுவனமும் வழங்கியுள்ளன.

இத்திட்டத்தின் பங்காளர்களாக யாழ். மீனவர் கூட்டுறவுச் சங்கச் சம்மேளனத்தின் அங்கத்தவர்களான யாழ். நகர பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வடமராட்சி வடக்குப் பிரதேச கடற்றொழிலாளர், வேலணைப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகிய மூன்று கூட்டுறவு சமாசங்கள் தெரிவுசெய்யப்பட்டன. இச்சமாசங்களின் கடந்த காலச் செயற்பாடுகள், கணக்குபேணும் முறைகள், அங்கத்தவர் எண்ணிக்கை, இச்சங்கங்களுக்கு ஏற்பட்ட போரின் தாக்கம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு இந்தத்தெரிவு இடம்பெற்றது. இது ஒரு முன்னோடித்திட்டமாகும்.

இலங்கையின் வடபகுதியில் உள்ள மீனவர்களுக்கு வெளிமாவட்டங்களின் சந்தைவாய்ப்பு அறவே கிடைக்கவில்லை. போர்க்காலச் சூழ்நிலையும், அதனைத் தொடர்ந்து நிலவுகின்ற சூழல் கட்டமைப்பு காரணமாக இராணுவ சோதனைச் சாவடிகளைக் கடந்து தமது உற்பத்திகளை வெளிப்பிரதேச சந்தைகளுக்கு அவர்களால் கொண்டு செல்லமுடியவில்லை. இந்த மீனவர்கள் இடைத்தரகர்களின் தயவிலேயே தங்கியிருக்க நேர்ந்துள்ளது. இதனால், உத்தரவாதமுள்ள சிறந்தவிலையை அவர்களால் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. வடபகுதி மீனவர்களிடம் இடைத்தரகர்கள் மீன்களைக் கொள்வனவு செய்வதற்கும், அவை வெளிச்சந்தையில் விற்பனை செய்வதற்கும் இடையில் பாரிய விலை வித்தியாசம் காணப்படுகின்றது. இடைத் தர்கர்களின் இந்தச் சுரண்டலைப் போக்கி, தனிப்பட்ட மீனவரும் அதிகரித்த சந்தை வாய்ப்பையும் உத்தரவாதமுள்ள அதிகரித்த சந்தை விலை நிர்ணயத்தையும் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இந்தத் திட்டத்திற்கு நீரியல்வளத்துறைத் திணைக்களத்தின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது.

பிடிக்கப்பட்ட மீன்கள் வெளிச்சந்தையைச் சென்றடையும் வரையில் பழுதடையாமல் பாதுகாப்பது, சுகாதாரமான முறையில் நுகர்வோருக்கு மீன்களை வழங்குதல், தனிப்பட்ட மீனவரும் சிறந்த சந்தைவிலையைப் பெறுதல், வெளி மாவட்ச் சந்தைகளிலும் வடபகுதி மீனவர்கள் இடம் பிடிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவது, மீனவ சமூகப் பெண்களுக்கும் நிர்வாகக் கட்டமைப்பில் முன்னுரிமை வழங்குதல், ஒவ்வொரு சமாசத்திலும் தலா 10 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற நேரடியான நன்மைகள் இந்தத் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்குக் கிடைத்துள்ளன.

மீனவர் சமாசங்களைச் சேர்ந்தவர்களுக்குத் தொழில்தகைமைகளுக்கான பயிற்சி, நேரமுகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், தலைமைத்துவப் பண்பு, தொடர்பாடல், திட்டமிடல், செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரித்துச் சமர்ப்பித்தல் போன்ற பல்வேறு மறைமுக நன்மைகளும் இந்த முன்னோடித் திட்டத்தின் மூலம் கிடைத்திருக்கின்றன.

அலுவலகக் கட்டிடங்கள், மீன்களைப் பாதுகாத்து வைப்பதற்கான குளிரூட்டப்பட்ட அறைகள், 12.5 கிலோ வோட்ஸ் கொண்ட மின்பிறப்பாக்கிகள், மீன்களைப் பழுதடையாமல் ஏற்றிச்செல்வதற்கான குளிரூட்டப்பட்ட வாகனங்கள், தலா 400 குளிரூட்டிப் பெட்டிகள், பிளாஸ்டிக் பெட்டிகள், கையுறைகள், காலுறைகள், மீன் சுத்திகரிப்புக்கான மேசைகள், குருகப் வாகனம் (Crew Cab vehicle), ஒவ்வொரு சமாசத்திற்கும் தலா இரண்டு மேசை நிறுவை இயந்திரங்கள் ஆகியவை இந்தத் திட்டத்தின்கீழ் மீனவக் கூட்டுறவுச்சங்க சமாசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் தனிநபர் வாழ்க்கைத் தரத்தை மேம படுத்துவதற்காக அங்கத்தவர்கள் சுழற்சிக்கடன் முறையில் பெறத் தக்கதாக மீன்பிடி வலைகள், வெளியிணைப்பு மோட்டார் இயந்திரங்களும் வழங் கப்பட்டுள்ளன.

இந்தப் பொருட்கள் வழங்கப்பட்ட வைபவத்தில் ஜி.ரி.சற் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ரோலண்ட் ஸ்ரைரர், உலக உணவு, விவசாய நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி மார்ஸ்லான் யூசூவ், ஜி.ரி.சற் நிறுவனத்தின் ஆசிய பசபிக், லத்தீன் அமெரிக்க பகுதிகளுக்கான பணிப்பாளர் நாயகம் குன்ரர் ட்ரஸ்ல்ஸ், உதவிப் பணிப்பாளர் நாயகம் ஜனா கேர்ன், ஜேர்மனி சமஸ்டி அமைச்சின் உணவு பாதுகாப்பு, அவசரத் தேவைப்பிரிவின் பொருளாதார கூட்டுறவு மற்றும் அபிவிருத்திக்கான பிரதி பொறுப்பதிகாரி ட்ரோடல் கொலர், ஜி.ரி.சற். என்.ஆர்.பி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் வுல்வ் கங் கரட்வா ஆகியோருடன், பிரதேச செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும், நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகளும், மீனவர் சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள

### ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பொருளாதார ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான அமைச்சரின் யாழ். விஜயம்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காக இலங்கைக்கு வருகை தந்த ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பொருளாதார ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான அமைச்சர் ஹைதமாரி விக்சோரிக் ஸொயில் (Heidemarie Wieczorek-Zeul - Federal Minister for Economic Cooperation and Development) பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்து, சுனாமியினால் ஏற்பட்ட சேதங்களை நேரில் கண்டறிந்தார்.

யாழ்ப்பாணத்தில் சுனாமியினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மணற்காடு கிராமத்திற்குச் சென்ற அவர் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களிடையே மீனவ கூட்டுறவுச் சங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு 15 மீன்பிடிப் படகுகளையும் வலைகளையும் வழங்கினார். அங்கு வருகை தந்திருந்த யாழ்.ஆயருடனும், யாழ். அரச அதிபர் உட்பட அதிகாரிகளுடனும் சுனாமி நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார். பின்னர் சாவகச்சேரிக்கு விஜயம் செய்த அவர், கே.எவ். டபிள்யு நிறுவனமும், ஜி.ரி.சற் நிறுவனமும் இணைந்து புனரமைத்து வரும் போரினால் பாதிக்கப்பட்ட றிபேர்க் கல்லூரியைப் பார்வையிட்டார். அங்கு கல்விபயிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விளையாட்டுப் பொருள்கள் அடங்கிய பொதிகளை அன்பளிப்புச் செய்தார். போரினாலும், சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட மாணவர்கள், சிறுவர்கள், மற்றும் பொது மக்களுக்கு உளவளத்துணை வழங்கிவரும் யாழ் சாந்திகத்தின் மூன்று மகளிர் உறுப்பினர்கள் கொண்ட குழுவினரையும் அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடினார்.போரினாலும் சுனாமியினாலும் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களின் வாழ்க்கையை மறுசீரமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்கு நாட்டில் அமைதிநிலை தொடர்ந்து நிலவ வேண்டியது இன்றியமையாதது என்று யாழ் விஜயத்தின்போது ஜேர்மன் சமஸ்டிக் குடியரசின் பொருளாதார ஒத்துழைப்புக்கும், அபிவிருத்திக்குமான அமைச்சர் ஹிதமேரி விக்சோரிக் ஸொயில் கருத்துச் தெரிவித்தார். ஜேர்மன் அரசும் அந்த நாட்டுமக்களும் இலங்கைமக்களின் நல்வாழ்க்கையில் அதிக ஆர்வம் கொண்டிருக்கின்றார்கள் என்றும் அதன் காரணமாகவே இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு ஜேர்மன் அரசு பல உதவித் திட்டங்களை இங்கு மேற்கொண்டு வருகின்றது என்றும் அவர் கூறினார். அத்துடன் ஜேர்மனியில் உள்ள ஒரு கிராமத்து மக்களின் உதவியோடு, அவர்களுடைய கிராமத்தைப் போல சுனாமியினால் அழிந்துபோயுள்ள மணற்காடு கிராமத்தைக் கட்டியெழுப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அமைச்சர் இங்கு உறுதியளித்தார். அமைச்சருடன் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் ஜூர்கன் வெயத் (Juergen Weerth) மற்றும் முக்கிய அதிகாரிகள், செய்தியாளர்கள் அடங்கிய குழுவினரும் வருகை தந்திருந்தார்கள்

### உணவு உதவி வேலைத்திட்டம் (Food for Work)

போரினால் பாதிக்கப்பட்டு சின்னாபின்னமாகிய யாழ் குடாநாட்டின் புனர்வாழ்வு வேலைத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட மக்களினால் நீண்ட காலமாகக் கைவிடப்பட்ட விளைநிலங்களில் விவசாய முயற்சிகளை மேற்கொள்வதற்கு உதவியாக 30 மில்லியன் ரூபா பெறுமதியில் மூன்றுமாத காலத்தில் செய்து முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டு, உணவு உதவி வேலைத்திட்டம் (Food for Work) மேற் கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் சிறு நீர்ப்பாசனக் குளங்களின் நீர்ப்பாசன வாய்க்கால்கள், விவசாய வீதிகள் என்பவற்றைப் புனரமைக்கவும், குளங்களில் சேற கற்றி குளக்கட்டுக்களைப் புனரமைக்கவும் திட்டமிடப்பட்டது. சாவகச்சேரி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இதற்கான வேலைத்திட்டங்கள் முதலில் இனம்காணப்பட்டன. இதற்கான மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டு இந்த வேலைத்திட்டங்களில் பங்குகொள்ளும் ஏழை விவசாய குடும்பங்களுக்கு வழங்குவதற்கென 20 மில்லியன் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன. நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாய குடும்பங்களை ஊக்குவிப்பதற்காக விதை நெல்லும் வழங்கப்பட்டது. அத்துடன் நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள் போன்ற விவசாய உபகரணங்களும் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆயினும் காலபோக மழை குறுக்கிட்டு வெள்ளம் சூழ்ந்து, தடங்கல் ஏற்பட்டதனால் ஆரம்பிக்கப்பட்ட வேலைகளைத் தொடரமுடியவில்லை. குறிப்பிட்ட காலப்பகுதிக்குள், இந்தத் திட்டத்தை தீர்மானிக்கப்பட்ட பிரதேசங்களினுள் செய்து முடிக்க முடியவில்லை. இதன்காரணமாக இந்த வேலைத்திட்டம் கோப்பாய், வேலணை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மற்றும் வன்னிப்பிரதேசத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க நேரிட்டது. விரைவாக இந்த வேலைத்திட்டத்தைச் செய்து முடிக்கவேண்டிய அவசரத்தேவை இருந்தபோதிலும், மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட பிரதேசங்களில், விவசாயத்துடன் இணைந்த வேலைகளை மேற்கொள்வதில் சில தரப்பினரின் ஒத்துழைப்பைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதன் காரணமாக மார்ச் மாதம் வரையில் இந்த வேலைத்திட்டம் நீண்டு போனது.

வேலணைப் பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்க, புங்குடுதீவில் அரச உதவியுடன் அமைக்கப்பட்டிருந்த பாரதி சனசமூக நிலையத்தைச் சுற்றிலும், பள்ளமாக இருந்த பகுதி மண்போட்டு நிரப்பப்பட்டது. இதன் மூலம் அங்கு வெள்ளம் சூழ்ந்து நிற்பது தடுக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசத்திலும் நீர்ப்பாசன வாய்க்கால்கள், விவசாய வீதிகள் என்பன புனரமைக்கப்பட்டன. மருதங்கேணிப் பிரதேசத்தின் மணற்பாங்கான பகுதிகளில் விவசாயிகள் பயிர்களுக்கு நீர் விடுவதற்கு வசதியாகத் தகரத்திலான பட்டைகள் வழங்கப்பட்டன. யாழ்.மாவட்டத்திலும், வன்னியில் சில பிரிவுகளிலும் இனங்காணப்பட்ட ஆதரவற்ற குடும்பங்களுக்கு உலர் உணவு விநியோகமும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### சுனாமி பாதிப்புக்கான உதவிகள்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மேலும் 3 பாடசாலைகளைப் புனரமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அலம்பில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம் என்பன இதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அத்தடன் சுனாமியினால் அழிந்துள்ள ஒரு கிராமத்தை முழுமையாகப் புனரமைப்பதற்கான திட்டம் குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டுவருகின்றது


### சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பங்கேற்கத்தக்க கற்றல் செய்கைப் பயிற்சி (Participatory Learning and Action)

புனரமைப்பு மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களைத் திட்டமிடுவதிலும், அவற்றைச் செயற்படுத்துவதிலும் பங்காளர்களாகிய பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்பு முக்கிய தேவையாக உள்ளது. புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளில் அவர்களை உள்வாங்கிச் செயற்படுவதன் ஊடாக வேலைத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறை வேறுவதற்கான வாய்ப்பு அதிகமாகும். இது நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்கு இன்றியமையாத அம்சமாக இனங்காணப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பங்கேற்கத்தக்க கற்றல் செய்கை தொடர்பான பயிற்சி கிராமமட்டத்தில் பணியாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென கோப்பாய், தென்மராட்சி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 96 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். நான்கு பிரிவுகளில் தலா 10 நாள்கள் கொண்ட வதிவிடப் பயிற்சியாக இது திட்டமிடப்பட்டு நடைபெறுகின்றது. சமூக பொருளாதார அபிவிருத்திப் பணிகள் தொடர்பான திட்டங்கள், செயற்பாடுகளில் சம்பந்தப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்களை எவ்வாறு உள்வாங்குவது, அவர்களின் உணர்வுகளையும், எதிர்கால நோக்கங்களையும், எவ்வாறு திட்டமிடல் செயற்பாடுகளில் உள்வாங்கி அதற்கூடாக அவர்களின் குரலையும் எவ்வாறு திட்டமிடல செயற்பாடுகளில் ஒலிக்கச்செய்வது, அதறகான வழிமுறைகளை எவ்வாறு இனங்காண்பது என்பன குறித்து, இதன் மூலம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

பாதிக்கப்பட்டவர்களினதும், ஆதரவற்ற குடும்பங்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்குமான வளங்களைப் பெருமளவில் விநியோகம் செய்வதன் மூலம் அவற்றின் முழுமையான பயன்கள் அவர்களுக்குச் சென்றடையும் எனக் கூறமுடியாது. அடிமட்டத்திலிருந்து அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்த அவர்களின் பங்களிப்புடன் செயற்படுத்துவதன் ஊடாக, பொதுமக்களுக்குக் கூடிய பலன்கள் சென்றடைகின்றது என்பதைக் கிராம மட்டத்திலான பணியாளர்களுக்குப் புரிய வைப்பது இந்தப்பயிற்சியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

பொதுமக்களையும் உள்வாங்கி வேலைத் திட்டங்களுக்கான தேவைகளை இனங்காணும் போது, அவர்களின் பலம், பலவீனம், சந்தர்ப்பங்கள், தடைகள் என்ன என்பதை அவர்களுக்குப் புரிய வைப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அபிவிருத்திச் செயற்பாடுகளில் அவர்களின் பலத்தைப் பயன்படுத்தி எவ்வாறு சந்தர்ப்பங்களை உள்வாங்கித் தடைகளைத் தவிர்க்கலாம் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை இதன் மூலம் ஏற்படுத்திக் கொடுக்க முடிகின்றது. சந்தர்ப்பங்களைப் பயன் படுத்துவதன் ஊடாகப் பலத்தைப் பயன்படுத்தி எவ்வாறு தடைகளைக் களையலாம் என்பதையும் அவர்களுக்குப் புரியவைக்க முடிகின்றது. அபிவிருத்தித் திட்டமிடலில் மக்கள் இணைந்து செயறபடும்போது, அந்தப் பிரதேசத்தின் வளங்கள் என்ன, உண்மையான தேவைகள் என்ன, தங்களின் ஆற்றல்கள், திறமைகள் என்ன என்பதை அவர்கள் தெரிந்து கொள்ள முடியும் என்பதை நாங்கள் இந்தப் பயிற்சியின் போது அறிந்து கொண்டோம். அத்துடன், தமது பிரதேசத்தில் காணப்படுகின்ற பொதுமக்களின் முன்னேற்றத்திற்குரிய வாய்ப்புகள் என்ன என்பதையும் அவற்றை எவ்வாறு அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்வது எனப் அவர்களை அறிந்துகொள்ளச் செய்யவும் இந்தப் பயிற்சியின் மூலம் நான் அறிந்து கொண்டேன் என பயிற்சியில் கலந்து கொண்ட பயிலுனர் ஒருவர் தெரிவித்தார். மொத்தத்தில் கிராம மட்டத்திலான எனது பணியின் முக்கியத்துவம், பொதுமக்களையும் உள்ளடக்கி எவ்வாறு செயற்படுவது என்பது குறித்த தெளிவையும் விழிப்புணர்வையும் எனக்குள் இந்தப் பயிற்சி ஏற்படுத்தியுள்ளது என்று இந்தப் பயிற்சியில கலந்துகொண்ட இன்னுமொரு பயிலுனர் கூறினார்.

ஆண்கள், பெண்கள், இளைஞர், பெரியோர் என்ற பேதமின்றிக் கிராமத்தில் உள்ள அனைவரும் தமது பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்கள் பற்றி அறிந்துகொள்ளவும், அவற்றில் அவர்கள் உரிமையோடு பங்கு கொள்ளவும் இந்த நடைமுறை பெரிதும் உதவுகின்றது. வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துகின்ற நிர்வாகமும், பொதுமக்களும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் இது வழிவகுக்கின்றது. கிராமமட்டத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கு இது உதவுகின்றது. இரு தரப்பினரிடையேயும் அப்பிரதேசத்தின் தேவைகள், அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வையும் தெளிவையும் இது ஏற்படுத்துகின்றது. சமூகத்தின் முக்கிய பங்காளர்களாகிய நிர்வாகத்தினர், அபிவிருத்திச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களையும் பொதுமக்களையும் ஒன்றிணைந்துச் செயற்படச் செய்வதற்கான அனுசரணையாளராக வடபகுதியின் புனர்வாழ்வுக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஜி.ரி.சற் இதில் செயற்படுகின்றது.








**WOLFGANG GARATWA,**
சிரேஷ்ட ஆலோசகர்
GTZ, வட புனரமைப்புத் திட்டம்
472. பிரதான வீதி. யாழ்ப்பாணம்.

## மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தாரண வருஷம் பங்குனித்திங்கள் 28 ஆம் நாள் (10.04.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 9.06 மணிமுதல் 10.36 மணிவரையுமுள்ள மேடலக்கின சுபவேளையில்,



**வரதன்**
**லுப்பிறிக்கேசன்& சேவிஸ்ரேசன்**



என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்துத் திறந்துவைக்கவுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

உரிமையாளர்: மு.வரதராசன் (புன்னாலைக்கட்டுவன்)
வரதன் சேவிஸ்ரேசன், வரதன் சர்வதேச தொலைத்தொடர்பு நிலையம், வரதன் பாம்ஸ்.

பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

**இப்போது யாழ் நகரில்.......**

கடந்த 30 வருடகாலமாகத் தமது சேவையை செவ்வன வழங்கி யாழ். மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்களான



**வரதன்**
**லுப்பிறிக்கேசன்& சேவிஸ்ரேசன்**



ஸ்தாபனத்தார்

தமது சேவையை நவீன மயப்படுத்தி மீண்டும் வழங்க முன்வந்துள்ளனர். வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஏழு இயந்திரங்கள் மூலமாக பதின்னான்கு குழாய்களினால் சேவிஸ் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள். அதிகூடிய பாரந் தூக்கிகள், லிப்ட்கள் மூலம் இந்தச் சேவை வழங்கப்படுகிறது. இச்சேவை இரவு, பகல் சேவையாகும்.

T.P.: 077 3222819,
0602212285 (43874)(52-11-17)

பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.


## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.10

மாங்குளம் மக்கள் வங்கியின் முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள சச்சிதானந்தம் ஸ்ரீதரனைக் கௌரவிக்கும் நிகழ்வு அவரது சொந்த இடமான அல்வாய் தெற்கில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு மக்கள் வங்கி முகாமையாளருக்குப் மாலைகள் அணிந்து கௌரவித்தனர். (எ)

## மலேசியாவில் நூல் வெளியீடு

வலி.தெற்கு,ஏப்.10

சித்தன் கேணி பிரம்மஸ்ரீ ச.வாசுதேவக் குருக்கள் எழுதிய 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்ற நூல் வெளியீட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மலேசியா சிறம்பான் பட்டினம் ராஜா ஜெயமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறுகிறது.

சிவஸ்ரீ சி.சந்தான கோபாலக்குருக்கள் தலைமையில் இந்த நூல்வெளியீட்டுவிழா நடைபெறவுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரையினை சிறம்பான் நகர மகளிர் குழுத் தலைவரும் பிரபல சிறுகதை எழுத்தாளருமான திருமதி மீனா நடராசா நிகழ்த்துவார். (த-152)




நவற்கிரி

**ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று சப்பரம் வெள்ளோட்டம்**

இன்று (10-04-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் புதிய சப்பரம் வெள்ளோட்டம் நடைபெறும்.

உருவாக்கம்: விஸ்வப் பிரம்மஸ்ரீ **செல்லையா பாலச்சந்திரன் குழுவினர்**
ஸ்ரீ காளிகா சிற்பாலயம், புத்தூர்.

பிள்ளையார் அடியார்கள் அனைவரையும் அருள்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

உபயம்:
நவற்கிரி, புத்தூர். விநாசித்தம்பி உதயசூரியன் (சுவிஸ்).
(44043)(26-14)



**ஸ்ரீ வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்**
**தாவடி தெற்கு - கொக்குவில்**

எமது ஆலயத்தின்
வருடாந்த மஹோற்சவம்
இன்று 10-04-2005 ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணிக்குக்
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
12 தினங்கள் நடைபெறும்.
தினசரி 8.30 மணி பகல் உற்சவம்
மாலை 5.00 மணி இரவு உற்சவம்

- ரவி ஐயர்.

(44031)(26-14)



**மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை**
**பழைய மாணவர் சங்கம்**
**வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும் - 2005**

தலைவர்: திரு.பொ.சுந்தரலிங்கம்
*(கல்லூரி அதிபர்)*
இடம்: துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம்: 24-04-2005 ஞாயிற்றுக்கிழமை
காலை: 10.00 மணி ஒன்றுகூடல்
பிற்பகல்: 1.30 மணி பொதுக்கூட்டம்

*உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.*

திரு.பொ.சுந்தரலிங்கம், தலைவர்
பா.கிருபாகரன், ம.மணிசேகரன், இணைச்செயலாளர்கள்.

*குறிப்பு:* உறுப்பினராக தகுதியுடையவர்கள் உறுப்புரிமைத் தொகையைக் கூட்ட நேரத்திற்கு முன்னர் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(சி-42202)(26-14)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்மா கந்தசாமி



கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா கந்தசாமி (08-04-2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் ராஜா (கனடா), சந்திரரெட்ணம், ராணி, வசந்தி, நவரட்னம் (கனடா), சாந்தகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் வதனபாஸ்கரி (கனடா), மகேஸ்வரி, Dr.சிறீகரன் (R.A.M.P.) நாகேஸ்வரி (கனடா), ஜோதிராணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் சேந்தன், வசந்தன், சியாமினி, உஷாந்தி, உஷாந்தன், ஜெயரூபன், நிசாந், பிரசாந், சாய்கஜன், சாய் சத்தியா, சாய் சகிஜா, விபீஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-04-2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆனைக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கரையான்பிட்டி இந்துமயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூர்த்தவிநாயகர் கோயிலடி,
ஆனைக்கோட்டை. (44040)(26-14)

தகவல்:
குடும்பத்தினர்.

### நாகலிங்கம் பாலகுமார் (பாலா)

(பிரபல வர்த்தகர்)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் (அனுராதபுரம்) நாகலிங்கம் பாலகுமார் (பாலா) அவர்கள் நேற்று (09-04-2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ராஜகுமார் (மாணவன் - கோண்டாவில் இராமகிருஷ்ணா) அவர்களின் பாசமிகு தந்தையும் நந்தகுமார், விமலாதேவி, காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, செல்வக்குமார் மற்றும் மாலினிதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-04-2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 (பு.நே.) மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி மில்லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (44049)(26-14)

தகவல்:
மனைவி, மகன்.

## வலி.தெற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வலி.தெற்கு,ஏப்.10

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலக திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்ளும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தையடுத்து முற்பகல் 11.30 மணிக்கு விவசாயிகள் குழுக் கூட்டம் நடைபெறும். (த-152)

## புதுவருட தினத்தன்றும் இலங்கை வங்கி திறந்திருக்கும்

சிங்கள - தமிழ் புதுவருடத் தினமான எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8மணியில் இருந்து முற்பகல் 11 மணி வரை இலங்கை வங்கி சுன்னாகம் கிளை புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களுக்காகத் திறந்திருக்கும்.

அன்றையதினம் வாடிக்கையாளர்கள் சகலருக்கும் அடையாள அன்பளிப்புகள் வழங்கப்படும்.

சேமிப்புக் கணக்குகளில் 5 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வைப்புச் செய்தவர்களுக்குச் சீட்டிழுப்பு நடத்தப்பட்டு வெற்றிபெறும் முதல் ஐந்து பேருக்குப் பரிசுகளும் வழங்கப்படவிருக்கின்றன. (த-152)


தற்போது பரபரப்பாக விற்பனையாகிக்கொண்டிருக்கிறது

**A/L வணிகக் கல்வி I**


பரீட்சை வழிகாட்டி வினாப்பத்திரங்கள் 20
இவ்வினாப்பத்திரங்கள்
சிங்களமொழி வினாக்கள், மாதிரி வினாக்கள்
பரீட்சை வினாக்கள், நடைமுறை விடய வினாக்கள்
என்பவற்றை உள்ளடக்கிய 800 வினாக்களைக் கொண்டது.

ஆசிரியர் - **S.MUGUNTHAN.**
*(Former Teacher of Zahira College, Colombo - 10)*

கிடைக்கும் இடங்கள் :
யாழ்ப்பாணத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலை
நெல்லியடியில் சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
பருத்தித்துறையில் பிரியங்கா புத்தகசாலை
சாவகச்சேரியில் பொதிகை புத்தகசாலை


## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
22 - 11 - 1943



விண்ணில்
07 - 04 - 1989

**அமரர் கனகரட்ணம் பரராஜசிங்கம் S.L.A.S**

*(முன்னாள் உதவி அரச அதிபர், குச்சவெளி)*

*திதி: 10-04-2005*

ஆண்டுகள் பதினாறு ஆனபோதும்
ஆறவில்லை எம் இதயங்களின் வேதனை!
அன்போடும் பண்போடும்
எங்களுடன் வாழ்ந்திருந்தீர்
என்றும் உங்கள் நினைவுடனேயே வாழ்கின்றோம்
எங்கள் உயிர் உள்ளவரை மறவோம் உங்களை

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்:

15, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (C/42215)(42-14-26)


மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

# உலகத்தை நேசித்தார் பாப்பரசர்; அவர் காலடியில் நின்றது உலகம்!

உலகில் செயற்கரிய செயல்களைப் புரிபவர்கள் பெரியவர்களாகிறார்கள்.

மனித மேம்பாட்டுக்காக - ஒடுக்கப்பட்டவர்களின் உய்வுக்காக - உயிரையும் உடலையும்கூட அர்ப்பணிப்பவர்கள் மாமனிதர்களாகப் போற்றப்படுகிறார்கள்.

செயற்கரிய செயல்களைப் புரிந்தது மட்டுமன்றி, உலக உய்வுக்காகத் தன்னை அர்ப்பணித்



ஈஸ்டர் பூசைக்குப் பின்னர் எதிர்பாரதவிதமாக வத்திக்கான் ஜன்னல் அருகில் அவர் 10 நிமிடங்கள் தோன்றினார். பேசமுயன்று, முடியாமல் போகவே திரும்பினார்.

துக் கொண்டதோடு, "எதிரியையும் மன்னிப்பாயாக" என்ற தமது சமய வழிகாட்டியான யேசு கிறிஸ்துநாதரின் திருவாக்கினைச் சொல்லிலும் செயலிலும் உணர்வுபூர்வமாகவும் செய்து காட்டி உலக மாந்தரின் உள்ளங்களில் உன்னதமான இடத்தைப் பிடித்துக்கொண்டவர் மறைந்த பாப்பரசர் (ஜோன் போல் 11) இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் ஆவார்.

நவநாகரிக காலத்தில் உலக அமைதிக்காகச சிந்தித்துச் செயலாற்றிய மகான்கள் வரிசையில் முதல் இடத்தைப் பெறுபவர்களில் அவர் முக்கியமானவராகின்றார்.

அவரது வாழ்க்கை பூராகவுமே அற்புதங்களும் அதிசயங்களும் நிறைந்தவையாக இருந்துள்ளன. சமயப் பிரசாரம் என்பது மிக இலகுவான காரியம். ஆனால், பிரசாரம் செய்பவர்கள் எல்லாரும் அதன்படி நடக்கின்றார்களா என்று பார்த்தால் 'உபதேசம் எல்லாம் உலகத்துக்கு மட்டுமே' என்பது போல் அவர்களின் வாழ்க்கை நீள்கிறது. உபதேசம் புரிவதை வெறும் தொழிலாக, வெறும் கடமையாகக் கொண்டவர்களையே பல விடயங்களிலும் காண்கின்றோம். அதுவே நாகரிகமாகவும் மாறிக்கொண்டுவரும் இன்றைய காலகட்டத்தில் இப்பெருமகன் இந்த உலகத்தில் வாழ்ந்துள்ளார். அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழக் கொடுத்துவைத்துள்ளோம் என்று இன்றைய மனித இனம் ஆறுதல் அடையலாம்.

பாப்பரசரின் வாழ்வியல் பணிகளிலிருந்து பாடங்கள் பலவற்றை உலகம் இன்று கற்றுக் கொள்ளவேண்டிய நிலையில் உள்ளது. குறிப்பாகச் சொல்லின் வண்ணம் செயல். இதை பாப்பரசர் கண்ணும் கருத்துமாகப் பேணிவந்துள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர் உலகத்தை-உலக மக்களை நேசித்தார். இறுதிக்காலத்திலும் இந்த உணர்வு அவரிடத்திலிருந்து மறைந்துவிடவில்லை.

அவரது அன்பு, வத்திக்கானோடும் -வத்திக்கான் கத்தோலிக்க சமய மாந்தரோடும் - உலகளாவிய றோமன் கத்தோலிக்கர்களோடும். மட்டும் குறுக்கிக்கொள்ளப்பட்டதன்று. சாதி, சமய, இன, நிறம் மற்றும் நாடு, நகரம், அரசியல் சித்தாந்த பேதங்களுக்கும் அப்பால் வியாபித்து - பிரகாசித்து - பிரவகித்தது.

அதனாலன்றோ, உலகம் முழுவதும் அவரது மறைவையொட்டி கண்ணீர் வடிக்கின்றது.

அவரது இறுதிச்சடங்கில் எந்த நாடு - எந்த சமயம் - எந்த இனம் - எந்த அரசியல் சித்தாந்தம் பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை.

நம் காலத்தில் மிகப்பெரிய அமைதித் தூதுவராக அவர் வாழ்ந்துள்ளார். அமைதிக்காகத் தனது செல்வாக்கைப் பிரயோகித்த மாமனிதராகவும் அவர் திகழ்ந்தார்.

1920 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி பிறந்த அவருக்கு இயற்பெயர் காரோல்




ஜோசெப் வொஜ்டைலா (**Karol Josef Wojtyla**). போலந்து நாட்டவரான அவர் வத்திக்கானை 450 ஆண்டுகளில் ஆளும் முதலாவது இத்தாலியரல்லாதவர் என்ற சிறப்பைப் பெற்றார். பதவியில் இருந்தபடி தனது வெள்ளி விழாவினை (2003 -ஒக்ரோபர் 16) கொண்டாடியவர்.

2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி பாப்பரசர் பதவியில் தமது 26 ஆண்டுகளைப் பூர்த்திசெய்த அவர் வரலாற்றில் அவ்வாறு நீண்டகாலம் பதவியிலிருந்து பணிபுரிந்த மூன்றாவது பாப்பரசரானார்.

சிறுவயதில் விளையாட்டில் பிரியமுள்ளவராகவிருந்து - எதையும் விளையாட்டு வீரர்க்குரிய துணிச்சலுடன் மேற்கொண்டதாலும் அவரது பார்வையில் விளையாட்டு வீரர்களுக்குரிய தீட்சண்யம் காணப்பட்டதாலும் 1978 ஆம் ஆண்டு அவர் பாப்பரசராக முடிசூட்டப்பட்டிருந்த ஆரம்பகாலத்தில் 'இறைவனின் விளையாட்டு வீரர்' (**God's Athlete**) என்று மரியாதையாகக குறிப்பிடப்பட்டுவந்தார்.

### மன்னிப்பு வழங்கினார்

எங்கு சென்றாலும் ஆயிரக்கணக்கான மக்களைக்கவரும் தன்மை அவருக்கு இயற்கையாகவே அருளப்பட்டிருந்தது.

மிகவேகமாகச் செயற்பட்டு வந்த அவரது பணிகள் 1981 ஆம் ஆண்டு ஒரு கொலை முயற்சியின் காரணமாக வேகம் குறைந்தது. அந்த ஆண்டு சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் வைத்து முகமட்அலி அகா என்பவரால் வயிற்றில் சுடப்பட்டார். இரண்டு ஆண்டுகளின் பின்னர் அந்த மனிதனை இத்தாலிய சிறையொன்றில் பார்த்து பாப்பரசர் அவனுக்கு மன்னிப்பு வழங்கினார். அத்தாக்குதலில் இருந்து குணமடைந்துவரும் காலத்தில் போர்த்துக்கலில் வைத்து ஸ்பெயினைச் சேர்ந்த ஜுவான் பெர்னாண்டஸ் குரோக்ன் என்ற மதகுரு துப்பாக்கியில் பொருத்தப்படும் ஈட்டியால் குத்தமுயன்றார். ஆனால், பாப்பரசர் காயமின்றித்தப்பினார்.

பிற்காலத்தில் பார்க்கின்சன் நோய், இடுப்புப் பிடிப்பு மற்றும் முழங்கால் வலியினால் உடல் அளவில் அவர் பலவீனமாகக் காணப்பட்டாலும் மூளை பலத்தில் உறுதியாகவே இருந்தார்.

கருச்சிதைவு, மனித உரிமைகள் போன்ற விடயங்களில் அவர் மிகத் தெளிவான கொள்கையுடனும் உறுதிப்பாட்டுடனும் பேசிவந்தார்.

கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிஸத்தை வீழ்ச்சியுறச் செய்வதில் முக்கிய பங்கினைப் பாப்பரசர் வகித்தார் என்று மேற்குநாடுகள் பாராட்டியிருக்கும் அதேவேளையில், பனிப்போரை முடிவுக்குக்கொண்டுவருவதில் பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் மிக முக்கிய பங்களிப்புச் செய்திருந்தார் என ரஷ்ய அதிபர் புடின் பாராட்டியுள்ளார். விளாடிமிர் புடின் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், "எமது காலத்தில் அவர் ஒரு தனித்துவமான மனிதனாகத் திகழ்ந்தார். அவர் ஒரு ஞானி, பேச்சுக்குரியவராய் இருப்பவர்" என்று தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ மெதடிஸ்த பிரிவைச்சேர்ந்தவரான அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் ஈராக் யுத்தம் தொடர்பாகப் பாப்பரசருடன் முரண்பட்டவர். அவர் விடுத்துள்ள செய்தியில், "கத்தோலிக்க திருச்சபை அதன் மேய்ப்பரை இழந்துவிட்டது. உலகம் மனித விடுதலைக்காகப் பாடுபட்டதொரு வீரரை இழந்துவிட்டது" என்று கூறியுள்ளார்.

உலகின் 101 கோடி கத்தோலிக்கர்களில் அரைவாசி மக்களின் தாயகப் பிரதேசமான லத்தின் அமெரிக்காவெங்கிலும் சோகம் நிறைந்து காணப்பட்டுள்ளது.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அல்பேனியாவில் ஒருநாள் துக்கம் அறிவிக்கப்பட்டது. அதிபர் அல்பிரெட் மொயி

## அமைதிக்காக அரும்பணியாற்றிய மனித குலத்தின் தூதுவர்

ஸியு விடுத்த செய்தியில், "பல ஆண்டுகாலம் கம்யூனிஸ சர்வாதிகாரத்துக்குள் தவித்த எமது நாட்டின் கடவுள் நம்பிக்கையையும் சமய நிறுவனங்களையும் திரும்பப்பெறுவதற்கு பாப்பரசர் உதவினார்" என்று குறிப்பிட்டுள்ளார். எகிப்தில் மூன்றுநாள் துக்கம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தியாவின் பிரதமர் மன்மோகன் சிங் தமது செய்தியில், "மக்களின் பாப்பரசர்" என்று குறிப்பிட்டார்.

கல்கத்தாவில் வாழ்ந்த அன்னை திரேஸாவுக்கு புனிதர் பட்டம் வழங்கியதன் மூலம் இந்தியர்களோடு நெருக்கமாகிவிட்டார் என்றார் இந்தியப் பிரதமர்.

றோமன் கத்தோலிக்கர்களும் - புரட்டஸ்தாந்தர்களும் அடிக்கடி மோதிக்கொள்ளும் வட அயர்லாந்தில் பாப்பரசருக்கான பிரார்த்தனையில் இருபிரிவினரும் ஒன்றாகக் கலந்து கொண்டனர். அமைதியின் தூதுவராகவும், மனித குலத்தின் தார்மீகத் தூணாகவும் அவர் விளங்கினார் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### கியூபாவின் பிடல் காஸ்ரோவின் இரங்கல்

கியூபாவில் மூன்றுநாள் துக்கம் அனுஷ்டிக்கும்படி அதிபர் பிடல் காஸ்ரோ அறிவித்தார். பேஸ்போல் போட்டிகள் மற்றும் விழாக்களை நடித்த மூன்று நாள்களுக்கு அவர் தடைவிதித்தார்.

அங்குள்ள கத்தோலிக்க சபைத் தலைவர்கள் கியூபா அரசின் இந்த நடவடிக்கைகளை ஆச்சரியமாக நோக்கியுள்ளார்கள். ஞாயிறு அன்று கியூபா ஊடகங்களில் முதல் முக்கிய செய்தியாக வெளிவந்திருந்த அதிபர் காஸ்ரோவின் இரங்கல் செய்தியில் அமைதி, நீதி மற்றும் எல்லா மக்களுக்கிடையிலும் ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவதற்காக பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் ஓய்வின்றி உழைத்தார். மனித குலம் உணர்வுபூர்வமாக இதை நினைவில் வைத்திருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

1998 ஆம் ஆண்டு கியூபாவுக்கு பாப்பரசர் விஜயம் மேற்கொண்டதை நினைவு கூர்ந்துள்ள காஸ்ரோ, வத்திக்கான் அரசுக்கும் கியூபாக் குடியரசுக்குமிடையிலான உறவில் மிக ஆழமானதொரு சந்தர்ப்பமாக எமது தேசத்தின் நினைவில் அது பதிந்திருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

### புதிய பாப்பரசரின் தெரிவு: எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள்

உலகின் 101 கோடிக்கும் மேற்பட்ட கத்தோலிக்க சமயத்தவர்களின் அடுத்து வரப் போகிற தலைவர் பாப்பரசர் யார் என்பதைத் தீர்மானிப்பதில் ஈடுபட்டிருக்கும் கர்த்தினால்களின் கவனத்தில் பல சிக்கலான விடயங்கள் அலசப்படும் என்று கூறப்படுகின்றது . உடல் நிறம் தொடக்கம் சமய சம்பிரதாயங்கள், வேத நூல்களின் கருத்துக்கள் எல்லாம் சாங்கோபாங்கமாக ஆராயப்படும் என்று விடயம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

குறிப்பாகப் புதிதாகத் தெரிவுசெய்யப்படவிருக்கும் பாப்பரசரின் பெண்கள் பற்றிய கருத்துக்கள், கருச்சிதைவு மாத்திரைகள், திருமண முறிவு, குருமார் திருமணம் செய்தல், ஓரின சேர்க்கை மற்றும் சமயப் பிரிவுகளுக்கிடையில் கலந்துரையாடல் போன்றவை பற்றிய



மீளாத் துயில் கொள்ளும் காட்சி.

நிலைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படும் என்று தெரிகின்றது.

மேலும், பாரம்பரிய நடைமுறைகளை உடைத்து வளர்முக நாடொன்றிலிருந்து ஒருவரைத் தெரிவுசெய்யலாமா என்றும் அவர்கள் யோசிக்கக்கூடும். நிர்வாகத்திறமையுள்ள ஒருவர் அல்லது உலகத் தலைவர்களுடன் சரளமாகப் பழகக்கூடிய ராஜதந்திரமுள்ளவர் அல்லது மக்களைக் கவரும் மறைந்த பாப்பரசரின் குணங்களைக் கொண்டவர் எனப் பலவாறும் அவர்கள் ஆராய்வார்கள்.

இத்தாலியர் அல்லது நைஜீரியாவைச் சேர்ந்த ஒருவர் தெரிவுசெய்யப்படலாம் என்று ஆரூடக்காரர்கள் எதிர்வுகூறுகிறார்கள்.

ஹொன்டூராவைச் சேர்ந்த ஒஸ்கார்றொட்றிகஸ் மாரடியாகா, ஜேர்மனியைச் சேர்ந்த ஜோசெப் ரட்ஸிங்கர், பிரேஸிலைச் சேர்ந்த கிளவுடியோ ஹம்மஸ் முதலியவர்களின் பெயர்களும் அடிபடுகின்றன.

### கடுமையான விதிகள்

பாப்பரசரின் தெரிவு தொடர்பாக வத்திக்கான் விதிகள் மிகவும் கடுமையானவை. பாப்பரசர் ஒருவர் காலமாகிக் குறைந்தது இரண்டு வாரங்களுக்குப் பின்னரே கர்த்தினால்களின் தெரிவுக்கான சபை, கதவுகள் மூடப்பட்ட மண்டபத்தில் கூடும். அந்த சபையில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டால் அதை எவரும் மாற்றமுயலக்கூடாது. பரிசுத்த ஆவியின் தகவலின் பிரகாரம் இந்தத் தெரிவுநடை பெறும். மேலும் கர்த்தினால் எவரும் தமக்குத் தாமே வாக்களிக்கவும் முடியாது.

### சென்.பீற்றரின் அடக்க அறை

பாப்பரசரின் புனிதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கும் பீற்றர்ஸ் தேவாலயத்தில் ஆறாவது சின்னப்பரின் கல்லறைக்கு அருகில் சென்.பீற்றர் பலிபீடத்துக்கு நேர் கீழே யேசு கிறிஸ்துவின் சீடரும் முதலாவது பாப்பரசருமான புனித இராயப்பரின் அடக்கஅறை இருப்பதாக அகழ்வாராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். சென்.பீற்றர்ஸ் நிலவறை, மண்டபத்தின் கீழே உள்ள முழுப்பகுதியையும் உள்ளடக்கியுள்ளது. இங்கே றோமன் கத்தோலிக்க மதத்தினதும் ஆரம்பகால கிறிஸ்தவ நாகரிகத்தினதும் வரலாறுகள் அடங்கிய ஏராளமான பொக்கிஷங்கள் இருக்கலாம் என்று அவர்கள் நம்புகின்றார்கள்.

9ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாண வேலைகளின்போது கொன்ஸ்ரன்ரைன் மண்டபத்தின் கட்டமைப்புப் பற்றிய சில விவரங்கள் வெளியாகின. குறிப்பாக ஆதாரத்தூண்கள் மற்றும் சுவர்கள் பற்றியவை. நிலவறையின் கீழ் இன்னுமொரு அடுக்கு இருப்பதாகக் கணிக்கப்படுகின்றது. இது ஆதி றோமானியர்களின் காலம் முதற்கொண்ட "இறந்தவர்களின் நகரம்" என்றழைக்கப்படும் பகுதியிருப்பதாகக் கருதப்படுகின்றது. றோமானியர்களின் விதிகள், ஆலயங்கள் மற்றும் பிரமிப்பளிக்கும் சுவரோவியங்களும் உண்டு என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

★ ★ ★

### கறுப்பு கர்த்தினால் பாப்பரசர் ஆவாரா?

ஆபிரிக்கா முழுவதும் பாப்பரசரின் மறைவு பெரும அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. அங்கு மெதுவாகக் கத்தோலிக்கர்கள் ஆறுதல் அடைந்துவரும் அதேவேளை, கறுப்பு இனத்தவர் ஒருவர் இம்முறை பாப்பரசராகும் சாத்தியம் இருக்குமா என்பது பற்றியும் ஆலோசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

நைஜீரியாவின் கர்த்தினால் பிரான்சிஸ் அரின்சே இப்பதவிக்கு பொருத்தமாய் இருப்பார் என்று ஒரு பத்திரிகை எழுதியுள்ளது. ஆனால், ஐரோப்பிய கர்த்தினால்கள் தங்கள் சார்பிலான கர்த்தினால் ஒருவர் தெரிவுசெய்யப்படுவதற்கு எதிராகச் சதி செய்யக்கூடும் என்று அநேக ஆபிரிக்கர்கள் நினைக்கிறார்கள்.

புதிய பாப்பரசராகக் கர்த்தினால் அரின்சே வருவாரானால் நல்லதுதான். ஆனால், அது மிகவும் கஷ்டம். ஏனென்றால், இத்தாலியர்கள் அப்பதவியை 25 வருடங்களாகக் கோட்டைவிட்டு வருகிறார்கள். மீண்டும் அதைப் பெற்றுக்கொள்ளவே அவர்கள் விரும்புவார்கள் என்று நைஜீரிய கத்தோலிக்கரான 30 வயது ரினா அந்தனி என்பவர் கூறியுள்ளார்.

புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதில் வாக்களிக்க 117 கர்த்தினால்களுக்கு அருகதையுண்டு. இம்முறை புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்பட்டதும் அதை அறிவிக்க வழக்கமான வெண்புகை வெளிப்படுத்தலோடு சென்.பீற்றர் தேவாலயத்தின் மணிகளும் ஒலிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### பிரிட்டனில் தேர்தல் 'ஜுரம்' சூடுபிடிக்கிறது

பிரிட்டனில் பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதையடுத்து, அங்கு தேர்தல் ஜுரம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது.

செய்திப்பத்திரிகைகள் பக்கம் பக்கமாகத் தேர்தல் விவரங்களை வெளியிடத்தொடங்கியிருப்பதுடன், இப்போதைய ரொனி பிளேயர் அரசுக்குச் சாதக, பாதகமாகவும் எழுதத் தொடங்கியிருக்கின்றன.

பிரிட்டனில் மே 5ஆம் திகதியை வாக்களிப்புத் தினமாக பிரதமர் ரொனி பிளேயர் அறிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் 51 வீதமே வாக்களிப்பு இடம்பெற்றிருந்ததால் இம்முறை திரளாக வந்து வாக்களிக்கும்படி மக்களைப் பத்திரிகைகள் கேட்டுக் கொண்டுள்ளன.


இந்த அரசை வீட்டுக்கு அனுப்புங்கள் அல்லது ஓர் ஆணையை வழங்குங்கள் என்று ஒரு பத்திரிகை எழுதியுள்ளது. இடதுசாரி கருத்துடைய கார்டியன் பத்திரிகை தனது தலையங்கத்தில் புண்பட்டுப்போன இந்த அரசு வீட்டுக்குப் போக வேண்டிய காலம் வந்து விட்டது என்று எழுதியுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான கொன்சர் வேட்டிவ் கட்சித்தலைவர் மைக்கல் ஹவார்ட், லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சாள்ஸ் கெனடி ஆகியவர்களும் தீவிர தேர்தல் பிரசாரத்தில் குதித்துவிட்டார்கள்.

பொது கருத்துக்கணிப்பின் படி கொன்சர் வேட்டிவ் கட்சியினர் தொழிற்கட்சிக்கு மிக சமீபமாகவே இருக்கின்றார்கள். லிபரல் கட்சி இன்னமும் வெகு தூரத்தில் தான் காணப்படுகின்றது.

ரொனி பிளேயரின் தொழிற்கட்சிக்கு ஈராக் போரில் அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு போருக்குப்போன விடயமே ஒரு பின்னடைவாக இருப்பதாகக் கருதப்பட்டாலும் கொன்சர் வேட்டிவ் கட்சி பதவியிலிருந்திருந்தாலும் இதே முறையில்தான் செயல்பட்டிருக்கும் என்று கூறத்தேவையில்லை. ★

# 43 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 28 |
| 09 | 02 |
| 1914 | 2005 |

## அமரர் நாகப்பர் நாகநாதர்

கடந்த 28.02.2005 திங்கட்கிழமை சிவபதமெய்திய எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.04.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு நெடுந்தீவு மேற்கு, பெரியதுறை தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளன. அன்றைய தினம் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(43914) (39-14-15)

3 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு.

தகவல்: லிங்கன் களஞ்சியம்,
வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

- பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஜனநாயக, சோஷலிச இலட்சியக்காரர்கள் சந்தர்ப்பவாதத் தேவையின் பொருட்டு பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை மீது தாறுமாறாக வெட்டினர்!



மு.திருநாவுக்கரசு

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இப்போது மிக முக்கியமான கட்டத்துக்கு வந்திருக்கிறது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் இருந்து தமிழர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்குச் சமஷ்டி முறையை ஒரு உகந்த தீர்வாகக் கருதினர். அதற்காகப் பல அகிம்சைப் போராட்டங்களை நடத்தினர். ஆனால், ஒற்றையாட்சி என்ற வட்டத்துக்கு வெளியே வருவதற்குச் சிங்கள அரசியல் தலைவர்கள் மறுத்தனர். அதனால், தமிழர்களின் விடுதலைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. இப்போது அவர்கள் பலமான நிலைக்கு வந்துவிட்ட கட்டத்தில், சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவருவது குறித்துச் சற்றுச் சாதகமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர் தெற்கின் தலைவர்கள்.

எனினும், சிங்கள பௌத்த பேரினவாதமோ அதனை எதிர்க்கிறது. ஒற்றையாட்சிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வித்தியாசம் காணக்கூடாது என்று கண்ணைக் கட்டிக்கொண்டு கண்டிக்கிறது; எதிர்க்கிறது.

இதேவேளை, தமிழ் மக்களோ, பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை முன்வைக்கும் அரசியல் விழிப்புணர்வையும் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அடைந்துள்ளனர்.

அது குறித்துத் தமிழ் மக்கள் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டும். சுயநிர்ணய உரிமை குறித்த பூரண அறிவைப் பெறவேண்டும்; விளங்கிக்கொள்ளவேண்டும் என்ற நோக்குடன் -

சிறந்தஅரசறிவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான 'திரு மாஸ்டர்' எனச் செல்லமாக அறியப்படும் மு.திருநாவுக்கரசு எழுதிய 'சமஷ்டியா தனிநாடா' என்ற நூலின் மூன்றாவது அத்தியாயமான 'பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்' என்ற பகுதி தொடர் சிறப்புக் கட்டுரையாக உதயனில் வெளியாகி வருகிறது.

**இவ்வாரம் அதன் ஏழாவது பகுதியை வாசியுங்கள்**

## பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும்

தொடர் சிறப்புக் கட்டுரை 7

ஜனநாயக அடிப்படையில் ஒரு பரந்த அரபு தேசிய அரசை அராபியர்களால் உருவாகக முடியு மேயானால் உலக அரசியலில் ஒரு தனிச் சிறப்பான பாத்திரத்தை அவர்களால் வகிக்கமுடியும் என்பது மேற்குலகிற்கு நன்கு தெரியும். இந்தவகையில், அராபியர்களைப் பிரித்தாள் வதிலும் அவர்களைத் துண்டு துண்டாக வைத்திருப்பதிலும் மேற்குலகிற்கு அதிக ஆர்வ முண்டு. மேற்காசியாவைத் தனது பாரம்பரிய எதிரியாக மேற்குலகம் கருதுகின்றது.

உலகில் முதலாவது பேரரசு மேற்காசியாவிலேதான் எழுந்தது. மேற்காசியாவில் எழுச்சி பெற்றுவந்த பேரரசுதான் தனது படர்ச்சியின் பொருட்டு முதல்முதலில் கி.மு.5ஆம் நூற்றாண்டில் மேற்குடன் யுத்தம் தொடுத்தது. இத்துடன் மேற்கிற்கும் மேற்காசியாவிற்கும் இடையிலான வரலாற்றுப் பகைமை ஆரம்பமானது. பின்பு சிலுவை யுத்தமெனத் தொடர்ந்து இற்றைவரை ஈராக் யுத்தமென விரிந்துள்ளது.

இப்போது துண்டு துண்டாக அராபியர்களை அரசுகளின் அடிப்படையில் அரச தேசியவாதம் (State-Nationalism) என அழைக்கின்றனர். அரபிய அரசுகளில் தேசியப்பண்பு அதிகம் இல்லை. எனவே, அரசுகளின் அடிப்படையிலாயினும் அவற்றைத் தேசியமென அழைப்பது கடினமானது. பொதுவாக ஆசியா முழுவதிலும் அரச நிறுவனவாதம் வளர்ந்திருக்கின்றது தேசியவாதம் வளரவில்லை. இதனை அச்சொட்டாகவும் தெளிவாகவும் அடையாளங்காண மேற்காசியா உதவுகின்றது. தேசியவாதம் என்றதன் பெயரில் அரச நிறுவனவாதந்தான் ஆசியா முழுவதும் இனக்குழுப் பண்புடன் வளர்ந்துள்ளது. ஆசியாவின் ஏனைய இடங்களிலுள்ள பல்லினத் தன்மைக்குள் இத்தகைய பண்பு ஒரு மூடுமந்திரம் போல் இருந்தாலும் மேற்காசியாவின் தொடர் நிலப்பரப்பில் ஒரே இன, மத, மொழிப் பிரிவைக் கொண்ட அராபிய பல அரசுகளாக இருப்பதன் மூலம் அரச நிறுவனவாதமாகிய இப்போக்குத்தான் ஏனைய இடங்களிலும் உள்ளது என்பதை விளங்கிக் கொள்ள உதவுகின்றது. பொதுவாகக் கூறின், மன்னராட்சி மனப்பாங்குள்ளவனுக்கும் தேசியம் எதிரி, எஜமானிய மனப்பாங்குள்ளவனுக்கும் தேசியம் எதிரி, சாதி அபிமானிக்கும் தேசியம் எதிரி, தடம்புரண்ட சோஷலிச வாதிகளுக்கும் தேசியம் எதிரி, ஜனநாயக விரோதிகளுக்கும் தேசியம் எதிரி, இன அபிமானிகளுக்கும் இன வாதிகளுக்கும் தேசியம் எதிரி, அரச நிறுவனவாதிகளுக்கும் தேசியம் எதிரி. ஆனால், இதிலுள்ள விசித்திரம் என்னவெனில் மேற்கூறிய அனைத்துத் தரத்தினரும் தேசியம் பற்றி உச்சாடனம் செய்வதுதான்.

### இஸ்லாமியரே இஸ்லாமியரை ஒடுக்கும் வழக்கம்

பொதுப் பிரதேசத்தைக் கொண்டிருக்கும் அராபியர்கள் ஒருபுறம் பொதுத்தேசியமாக வளராது இருப்பதைப் பார்த்தோம். மறுபுறம் அராபியரோ அல்லது இஸ்லாமியரோ ஏனைய இஸ்லாமியப் பிரிவினரை அல்லது இனப் பிரிவினரை ஒடுக்கி வருவதை இனிப் பார்ப்போம்.

ஈராக், துருக்கி, ஈரான் ஆகிய மூன்று அரசுகளிலும் குர்திஸ் இன மக்கள் பிரிபட்டிருக்கின்றனர். மூன்று அரசுகளுமே தத்தமது எல்லைக்குள் குர்திஸ் இன மக்களை ஒடுக்கி வருகின்றன. இதில் ஈரானின் ஒடுக்குமுறைதான் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த அளவைக் கொண்டது. பாலஸ்தீனியர் மீதான யூத ஒடுக்குமுறை பற்றிப் பெரிதும் குரலெழுப்பும் இஸ்லாமியரும், அராபியரும் குர்திஸ் இன மக்கள் மீதான அராபிய அல்லது இஸ்லாமிய ஒடுக்குமுறை பற்றிக் கண்டுகொள்வதில்லை.

சதாம் ஹுசைன் பாலஸ்தீனப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர், ஆனால், குர்திஸ் இனமக்கள் மீதான தீவிர ஒடுக்குமுறையாளர். விசித்திரமான முரண்நிலை உண்மை இது. குர்திஸ் இனத்தவர் ஒருவரின் தகவலின் பெயரிலேதான் சதாம்ஹுசைனினது மறைவிடம் அமெரிக்க இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டதாக ஒரு செய்தி உண்டு. இது உண்மையா பொய்யா என்பது வேறுவிடயம். ஆனால், குர்திஸ் இனமக்களின் மனநிலையின்படி அவர்கள் சதாம் பற்றித் தகவல் வழங்கத் தயங்கமாட்டார்கள். ஏனெனில், அவ்வளவு கொடூரமாக சதாமால் ஒடுக்கப்பட்ட மக்கள் அவர்கள்.

தனது இரசாயன ஆயுதங்களைப் பிரயோகித்து மட்டும் ஐயாயிரம் அப்பாவிக் குர்திஸ் மக்களைச் சதாம் கொன்று குவித்தார். இதனைவிட, ஏனைய வகைகளிற் கொல்லப்பட்ட மக்களின் தொகை வேறு. சதாமின் படுபாதக இனப்படுகொலையையும், குளிர்தாங்கும் ஆடையின்றி அகதிகளாய்த் துயருற்ற நிலைமைகளையும் குர்திஸ் இனமக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். சதாம், குர்திஸ் இனமக்களை ஒடுக்கியதற்கு அப்பால் ஸியா மதப் பிரிவினரையும் ஒடுக்கினார். முதலாவது அர்த்தத்தில் சதாம் தேசிய இனங்களின் விரோதி. அடிப்படையில் சதாம் ஒரு ஜனநாயக விரோதி. சதாமின் தேசிய இனவிரோத செயல்களும் ஜனநாயக விரோத செயல்களுமே ஏகாதிபத்தியம் ஈராக் மீது ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பையும், வசதிகளையும், வழிவாய்க்காலையும் ஏற்படுத்திக் கொடுத்தன.

### சதாமின் வாய் அமெரிக்காவை எதிர்த்துப்பேச அவரது கையோ அந்நாட்டிற்குச் செங்கம்பளம் விரித்தது

உண்மையான அர்த்தத்தில் சதாம் ஏகாதிபத்தியத்தின் உற்ற நண்பன். அமெரிக்க ஜனாதிபதிகளை சதாம் எதிர்த்தார் என்பது போன்ற வெறும் பச்சைக் கண்களால் பிரச்சினையைப் பார்க்க வேண்டியதில்லை. ஈராக்கின் மீது அமெரிக்க ஜனாதிபதிகளின் கால்கள் பதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களைச் சதாமின் செயல்கள் எப்படி ஏற்படுத்திக்கொடுத்தன என்பதிலிருந்தே பிரச்சினைகளைப் பார்க்கவேண்டும்.

சதாமின் வாய் அமெரிக்காவை எதிர்த்த அதேவேளை, அவரது கைகளோ அமெரிக்காவிற்குச் செங்கம்பளம் விரித்தன.

சதாமிடம் 'கொடிய ஆயுதங்கள்' இருந்தனவா இல்லையா என்பதல்ல பிரச்சினை. சதாமிடம் இருந்ததாகச் சொல்லப்படும் 'கொடிய ஆயுதங்களை' விடவும் கொடியதான அணுவாயுதங்கள், உயிரியலாயுதங்கள், இரசாயன ஆயுதங்கள் எனப் பலவகை ஆயுதங்களை மேற்குலக நாடுகளும் மற்றும் பல பெரிய அரசுகளும், சிறிய அரசாகிய இஸ்ரேலுங்கூடக் கொண்டுள்ளன. ஆனால், அப்பாவிக் குர்திஸ் பொதுமக்கள் மீதும் ஈரானிய இராணுவத்தினர் மீதும் சதாம் இரசாயன ஆயுதங்களைப் பிரயோகித்தார் என்ற கண்முன்னான நடைமுறை உதாரணத்தின் மூலம் சதாமை ஓர் இராட்சதனாகச் சித்திரித்துக் காட்டுவது மேற்குலகிற்குச் சாத்தியமானது. சர்வதேச சமூகத்திடம் வளர்ந்துள்ள இத்தகைய மனப்பாங்கை வைத்துக் கொண்டு சதாமிற்கு எதிராக ஆயுதம் பற்றிய எத்தகைய பொய்ப் பிரசாரத்தையும் மேற்கொள்வது சாத்தியமாயிற்று. இப்படிப் பார்க்கையில் ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பிற்கு குர்திஸ் இன மக்கள் மீதான சதாமின் மேற்படி இரசாயன ஆயுதங்கள் உள்ளிட்ட ஒடுக்குமுறைகள் ஒரு பின்புல வாய்ப்பைக்கொடுத்ததெனலாம். அத்துடன், குவைத்தின் மீதான படையெடுப்பும் உள்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகளும் சேர்ந்து ஈராக்கை அமெரிக்கா தனிமைப்படுத்திவிட்டுத் தாக்க உதவின. இதன் பொருள் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பைச் சதாமின் ஆக்கிரமிப்புக்களால் புனிதப்படுத்தலாம் என்பதல்ல. ஒரு பாரிய ஆக்கிரமிப்பிற்கு சதாமின் ஆக்கிரமிப்புக்கள் வழிகோலின என்பதை விளங்கிக் கொள்வதுதான் இங்கு முக்கியம். உள்ளே உருவாகும் இத்தகைய அடிப்படைத் தவறுகளை விளங்கித் திருத்தத்தவறும் ஒவ்வொரு கட்டமும் அதன் இறுதி அர்த்தத்தில் ஏகாதிபத்தியத்திற்குச் சேவை செய்பவைகளாகவே அமையும். ஈராக் அரசிற்கு எதிரான தமதுநிலைப்பாட்டின் நிமித்தம் குர்திஸ் இன மக்களுக்காக அமெரிக்கா தனது கண்ணீர் வலையை விரித்தது. ஆனால், துருக்கிய அரசிற்கான தனது ஆதரவின் நிமித்தம் குர்திஸ் இன மக்களின் சுயநிர்ணய உரிமையை அமெரிக்கா நிராகரிக்கின்றது. அதாவது இரு அரசுகளும் இடையேயான ஓர் இனத்தின் பிரச்சினையுடன் சம்பந்தப்படும் ஒரு வெளியரசின் இரட்டை நிலைப்பாடு இது. இந்த விவகாரத்தில் குர்திஸ் இன மக்கள் சர்வதேச சூழலின் கைதிகள் தான்.

இந்திய உபகண்டத்தின் பிந்திய நிலைககு மீண்டும் வருவோம். காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக இந்தியாவும் தடையாக உள்ளது. பாகிஸ்தானும் தடையாக உள்ளது. இந்தியாவிலிருந்து காஷ்மீர் பிரிந்து செல்வதை இந்தியா எதிர்க்கின்றது. அதேவேளை, காஷ்மீர் தனியரசாக அமைவதை பாகிஸ்தான் விரும்பவில்லை. இதில் பாகிஸ்தானின் விருப்பம் காஷ்மீரைத் தன்னுடன் இணைப்பதுதான். பாகிஸ்தானிடம் தேசியக் குணாம்சங்கள் இல்லை என்பதுடன், தேசிய இனங்கள் பொறுத்து அதுவும் ஓர் ஒடுக்குமுறை அரசுதான். காஷ்மீரியரின் விடயத்தில் பாகிஸ்தான் இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாட்டின் நிமித்தம் உரிமை பற்றிக் கதைத்தாலும் செயல்பூர்வ அர்த்தத்தில் அதுகாஷ்மீரை ஏப்பமிடவே விரும்புகின்றது.

## இஸ்லாமிய எதிர்ப்பின் பொருட்டு அமெரிக்காவும் ரஷ்யாவும் செச்னிய விவகாரத்தில் சமரசத்திற்கு வந்தன

காஷ்மீரைப் பொறுத்தவரை இந்தியாவுடன் ஒப்பிடுகையில் மத அடிப்படையில் பாகிஸ்தானுடன் பொதுமை இருப்பதைத் தவிர, ஏனைய அம்சங்களில் நிறையவே பிரச்சினை உண்டு. இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே காஷ்மீர் கடல்தொடர்பற்ற ஒரு மலைப் பிரதேசம் என்றவகையில் மேற்படி இரு அரசுகளுக்குமிடையே அது நெருக்கடி மிக்க புவியியல் அமைவிடத்தைக் கொண்டுள்ளது. இதனால், இரண்டில் ஒன்றைச் சார்ந்திருக்க வேண்டிய துர்ப்பாக்கியத்தின் நிமித்தம் காஷ்மீரியர் பல நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. பங்களாதேஷைக் கிழக்குப் பாகிஸ்தான் என்ற பெயரில் தனது பகுதியாகக் கொண்டிருந்த பாகிஸ்தான், வங்காள மக்கள் மீது தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளை மேற்கொண்டு வந்தது. தென்னாசியாவிலேயே ஆகப் பெரியளவு மனிதப் படுகொலையையும் பாலியற் பலாத்காரத்தையும் பாகிஸ்தானிய இராணுவம் பங்களாதேஷில் புரிந்தது. முஸ்லிம்கள் முஸ்லிம்களால் கொன்று குவிக்கப்பட்டனர். முஸ்லிம் பெண்களை முஸ்லிம் ஆண்கள் பாலியற் பலாத்காரத்திற்கு உட்படுத்தினர். பங்களாதேஷும் பிரிந்துசெல்லவேண்டியதைத் தவிர வேறு எந்த வழிகளையும் வங்காள மக்களுக்குப் பாகிஸ்தானிய இராணுவம் விட்டு வைக்கவில்லை.

### பிரிந்துசெல்லும் உரிமையை ஏற்காத இந்திய அரசு பங்களாதேஷ் விவகாரத்தில் இராணுவ நிலைப்பாட்டை எடுத்தது

பிரிந்து செல்லும் உரிமையை ஏற்காத ஓர் அரசு இந்தியா. ஆனால், பாகிஸ்தானைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற தனது நோக்கு நிலையிலிருந்து பங்களாதேஷைப் பாகிஸ்தானிலிருந்து பிரித்து விடுவதில் இராணுவ ரீதியான நிலைப்பாட்டை இந்தியா எடுத்தது. பிரிந்து செல்லும் உரிமைக்கு எதிராகச் செயற்பட்டுவந்த சோவியத் யூனியன் பனிப்போர்ப் பின்னணியில் அமெரிக்காவிற்கு எதிரான தனது கூட்டணி வியூகத்தின் பொருட்டு இந்தியாவைத் தனது நெருங்கிய கூட்டணி ஆக்குவதற்காக பங்களாதேஷ் விவகாரத்தில் இந்தியாவின நிலைப்பாட்டை ஆதரித்து பங்களாதேஷும் பிரிந்து செல்ல உதவியது.

இதேவேளை, தனது பனிப்போர்க் கூட்டாளியாகிய பாகிஸ்தானைப் பலப்படுத்துவதற்காக இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் உலகில் நிகழ்ந்த மிகப் பாரிய இனப்படுகொலைகளுள் ஒன்றான வங்காளிகளின் மீதான பாகிஸ்தானின் இனப்படுகொலைக்கு அமெரிக்கா ஆதரவளித்துத் தனது ஏழாவது கப்பற் படைப் பிரிவை இந்தோ. - பாக். யுத்தகளம் நோக்கி நகர்த்தியது. இதில் சோவியத் யூனியன் இந்தியாவிற்குக் கைகொடுக்கவே நிலைமையின் பாதகத்தை உணர்ந்த அமெரிக்கா இதிலிருந்து பின்வாங்கியது. அதைத் தொடர்ந்து பங்களாதேஷும் பிரிவது சாத்தியப்பட்டது. பங்களாதேஷப் போராட்டத்தை இந்திய தனது தத்துப்பிள்ளை ஆக்கியது. பாரிய சர்வதேச வியூகத்திற்குள்ளாற்றான் இந்தியா இதனைச் செய்து முடித்தது. இதில் பங்களாதேஷும் பிரிவதைச் சாத்தியப்படுத்தியவை தென்னாசியப் பிராந்தியத்திற்கான அமெரிக்க - சோவியத் பனிப்போர் வியூகமும், இந்தோ-பாக். பகைமையும், இந்தியாவிற்கு நிரந்தரமாகத் தேவைப்பட்ட பாதுகாப்பு வியூக அரணுமாகும். எனவே, இங்கு பங்களாதேஷ் மக்களின் தேசியப் பிரச்சினை ஒரு பிராந்திய சர்வதேசப் பிரச்சினையாய் அமைந்தது. அதாவது, வங்காள மக்களின் தலைகளின் மீது மேற்கூறிய சக்திகள் தங்கள் தங்கள் கணக்குகளைத் தீர்க்க முற்பட்டன. இறுதியில் இந்தோ, சோவியத் கூட்டுக்குச் சாதகமாய்க் கணக்குத் தீர்ந்தது. இந்துக்களிடமிருந்து விடுதலை பெறுதல் என்ற மத அடிப்படையில் இந்தியாவிலிருந்து இஸ்லாமியப் பாகிஸ்தான் பிரிந்துசென்றது. ஆனால், மதரீதியான அந்த இஸ்லாமிய அடிப்படையானது வங்காள - இஸ்லாமியச் சகோதரர்களைப் பாதுகாக்கத்தவறியது மட்டுமன்றிப் பெருந்தொகையில் படுகொலையையும், பல்லாயிரம் கணக்கில் பாலியற் பலாத்காரத்தையும் புரிந்தது.

இங்கு ஒரு விசித்தரமான யதார்த்தத்தை அவதானிக்கலாம். இநதுக்களிடமிருந்து தம்மைப் பாதுகாப்பதன் பொருட்டு முஸ்லிம்கள் பிரிந்து சென்றனர். ஆனால், அவ்வாறு பிரிந்து சென்ற முஸ்லிம்களில் ஒரு பகுதியினரின் படுகொலையிலிருந்து இன்னொரு பகுதி முஸ்லிம்கள் தம்மைப் பாதுகாப்பதற்காகத் தாம் முதலிற் பிரிய நேர்ந்த இந்து - இந்தியாவின் இராணுவ உதவியை நாடினர் என்பதுதான் அது. உலகளாவிய ரீதியில் ஜனநாயக இலட்சியமோ அல்லது லெனினின் பின்பு உலகளாவிய ரீதியில் சோஷலிச இலட்சியமோ அல்லது ஏதாவது மத இலட்சியங்களோ தத்தம் கைகளிலுள்ள கூரிய வெட்டு வாள்களை அவ்வப்போதைய சந்தர்ப்பவாத தேவைகளின் பொருட்டுப் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை மீது தாறுமாறாய்ப் பிரயோகிக்கத் தவறவில்லை. சோவியத் யூனியன் என்ற பெயரிலான ரஷ்யா சாம்ராஜ்ஜம் உடைந்தபோது அதன் ஒடுக்குமுறைக்கு உட்பட்டிருந்த பல தேசிய இனங்கள் 1990களில் விடுதலை அடைந்ததைப் பார்க்கும்போது சாம்ராஜ்ஜ ஆதிக்கத்திற்கும் தேசிய இன ஒடுக்குமுறைக்கும் இடையேயான தொடர்பு தெளிவாகப் புலபபடுகின்றது.

அத்துடன், சோவியத் யூனியன் தனது உலகளாவிய சக்கராதிபத்தியக் கொள்கையின் கீழ்த் தேசிய இனங்கள் மீதான ஆதிக்கத்தைக் கொண்டிருந்ததனாலும் உலகளாவிய சக்கராதிபத்தியக் கொள்கையைக் கொண்டிருந்த இன்னொரு அரசாகிய அமெரிக்கா அதில் சம்பந்தப்பட்டதனாலும் கிழக்கைரோப்பிய தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறையும் அவற்றின் விடுதலையுங்கூட சர்வதேச பரிமாணம் மிக்கவையாய் அமைந்தன. அத்துடன், சோவியத்தின் உடைவின் பொருட்டு கிழக்கைரோப்பாவில் பிரிந்து செல்லும் உரிமையை அமெரிக்கா ஆதரித்த போதிலும் இஸலாமிய எதிர்ப்பின் பொருட்டு அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையில் இது விடயத்தில் சமரசங்கள் ஏற்பட்டுள்ளதை செசனிய விவகாரத்தில் தெளிவாகக் காணலாம். ★

(வளரும்)

# தற்காலிக வீடுகளை நோர்வே பிரதிநிதிகள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம்,ஏப்.10

நோர்வேயின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வடமராட்சி கிழக்கில் அமைக்கப்பட்ட தற்காலிகக் குடியிருப்புக்களை நோர்வேப் பிரதிநிதிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரக இரண்டாம் நிலை அதிகாரி கிறிஸ்ரின் லூண்டன் மற்றும் நித்தியா பெரேரா ஆகியோர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரியுடன் சேர்ந்து குடியிருப புக்களைப் பார்வையிட்டனர். அத்துடன், வடமராட்சி கிழக்கு நெல்லியானில் மக்களுக்கு தொழில் உபகரணங்களைக் கையளிக்கும் நிகழவிலும் நோர்வேப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ஒ-202)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி

## செல்லம்மா நாகலிங்கம்

[11ஆம் வட்டாரம், புங்குடுதீவு]

12-03-2005அன்று இறையடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், நேரிலும், தபால்மூலமும், தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்தோரிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் நாளை (11-04-2005) திங்கட்கிழமை அத்தியடி இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

30/18, குறுக்கு வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
T.P.:0212227564

கணவர், மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
பத்மநாதன் கௌரி குடும்பம்.

(43961)(46-14-45-42

# ஆனைக்கோட்டையில் வளர்ப்புநாய் அட்டை

ஆனைக்கோட்டை உப அலுவலகப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நாய்வளர்க்கும் 180 குடும்பத்தினர் அதற்கான நாய்வளர்ப்பு குடும்பஅட்டை பெற்றுள்ளனர் என்று உப-அலுவலக வருமான மேற்பார்வையாளர் எஸ்.ஸ்ரீரங்கன் தெரிவித்தார்.

வளர்ப்பு நாய் குடும்ப அட்டை பெற்ற நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டது. அத்துடன், உரிமைத்தகடு மற்றும் நாய் வளர்ப்பு முறைக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

எமது உப -அலுவலகப் பிரிவில் அனுமதி அட்டை பெறாத நாய்களின் விவரம் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் திரட்டப்படவுள்ளது.

அதன் பின்னர் ஏனைய நாய்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-185)

## துறைமுகப் பாலங்கள் விஸ்தரிக்கநிதி

நல்லூர்,ஏப்.10

நெடுந்தீவு, அனலைதீவு துறைமுகப் பாலங்கள் மேலும் சிலமீற்றர் தூரத்திற்கு விஸ்தரிக்கப்படவுள்ளன. இதற்கென நெடுந்தீவுக்கு ரூபா 30 லட்சமும் அனலைதீவிற்கு ரூபா 50 லட்சமும் ஒதுக்கப்படவுள்ளது. நெடுந்தீவுத் துறைமுகத்திற்கான நிதியை வீதிஅபிவிருத்தி அதிகாரசபையும் அனலைதீவு துறைமுக விஸ்தரிப்புக்கான தொகையை வீதி அபிவிருத்தித் திணைக்களமும் வழங்கும் என்றும் -

இந்த ஆண்டிற்குள் வேலைகள் முடிவு பெறும எனவும் - யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ஒ-111)

## தொண்டர் சேவைக்கு அழைப்பு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.வடக்குப் பிரிவில் தொண்டராகச் செயற்பட விரும்புபவர்கள் மல்லாகத்தில் உள்ள சங்க அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்களில் தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர் என்று சங்கச் செயலர் சி.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-117)

## ச.ச.நிலைய கட்டடத் திறப்பு

வட்டக்கச்சி, இராமநாதபுரத்தில் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலைசுடர் சனசமூக நிலையக் கட்டடம் கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு இக் கட்டடத்தினைத் திறந்துவைத்தார். நிலையத் தலைவர் சு.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சிப் பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி த.உஷா, வட்டக்கச்சி அரசியல துறைப் பொறுப்பாளர் சுடர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஒ-117)

# செஞ்சிலுவைக் கிளைக்கு மருந்துப்பொருள்கள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளைக்கு மருந்துப்பொருள்கள் சில அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த மருந்துப் பொருள்களை தற்போது கனடாவில் வசிக்கும் வெளிச்சவீட்டு ஒழுங்கை, தும்பளையைச் சேர்ந்த வி.சிவராஜா என்பவர் வழங்கியிருந்தார்.

இந்த மருந்துப் பொருள்களை மேற்படி கிளையின் தலைவர் கு.தவராசா பெற்றுக்கொண்டார். (எ-78)


திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு

★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமானசெலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.



T.P.: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (43613) (26-14-42)

தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியு,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



மோகன்ஸ் சாரதிப் பயிற்சிப் பாடசாலை-

கார், வான், பஸ், மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி ஆகிய வாகனங்களுக்குச் சாரதிப் பயிற்சி வழங்கப்பட்டு சாரதி அனுமதிப் பத்திரமும் பெற்றுக் கொடுக்கப்படும் . மேற்குறிப்பிட்ட வாகனங்கள் செலுத்தத் தெரிந்தவர்களுக்கு ஒரே நாளில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கும் ஒழுங்கு செய்துதரப்படும். மற்றும் சர்வதேச அனுமதிப்பத்திரமும் பெற்றுக்கொடுக்கப்படும். அதுடன், தொலைந்த சாரதி அனுமதிப் பத்திரம், தொலைந்த வாகன பதிவுப் புத்தகத்தின் மறு பிரதியைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனையும் வழங்கப்படும்.

மோகன்ஸ் சாரதிப் பயிற்சிப் பாடசாலை,
385 1/6, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06,
I.B.C றோட்டிற்கு எதிரில்.
0714 822228,0777 030492
(C/42189) (46-14-45-42)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1935-12-08 மறைவு 2004-03-21

உத்தமராய் வாழ்ந்து
எங்களைச் சீரோடு
வளர்த்த செல்வமே!
உங்களைப் பிரிந்து
இன்று ஒரு வருடம்.
நீங்கள் இறையடியில்

அமரர்
## க.முத்துலிங்கம்

(சமாதான நீதிவான்)
திதி: பங்குனி பூர்வபக்க துதியை
10.04.2005

உங்கள் நினைவால்
துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிறீ குடும்பத்தினர்
(சகோதரன்).

"முத்தகம்", விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு.


ஏமாற வேண்டாம்




ASTRA Sun

போலிகளால் ஏமாறாதீர்கள்

அஸ்ட்ரா, சன் நூல்களை வாங்கும் போது இப்புதிய அம்சங்களை அவதானியுங்கள்



கோட்ஸ் இலச்சினையுடன் ஹெலோகிறாம் ஸ்டிக்கர்

வடக்கில் எமது ஏக விநியோகஸ்தர்

வைர மாளிகை நியு சொப்பிங் சென்ரர்
இல 131/டி, CKS றோட், யாழ்ப்பாணம்.

தரமான தையல் நூல்களுக்கு ASTRA Sun

COATS
கோட்ஸ் திரட் லங்கா,
163, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி : 2307358



றோயல் தங்கப் புதையல் போட்டி



ஒன்று... இரண்டு...மூன்று ஓட்டப்போட்டியா? இல்லை றோயல் குளுக்கோஸ் தங்கப் புதையல் போட்டியில் பங்குபற்று வோருக்கு தலா ஒரு பவுண் வீதம் தங்க நாணயங்களை முதலாவது, 2ஆவது, 3ஆவது பரிசுகளாக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான். றோயல் குளுக்கோஸ் (6) வெற்றுப்பெட்டிகளைச் சேகரியுங்கள். றோயல் குளுக்கோஸ் வாங்கும்போது பற்றுச்சீட்டினை நீங்கள் றோயல் குளுக்கோஸ் வாங்கும் வியாபாரியிடம் கேட்டு வாங்கத் தவறாதீர் கள். பின்பு 6 வெற்றுப் பெட்டிகளையும் பற்றுச்சீட்டினையும் இணைத்துப் பின் வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

றோயல் தங்கப் புதையல் போட்டி,
சிவா நறுமணப் பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 222-2567

மேற்படி போட்டியில் 31.03.2005 முதல் 31.06.2005 வரை கொள்முதல் செய்யும் பற்றுச்சீட்டுக்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

றோயல் குளுக்கோஸ் புயல்வேகத்தில் உங்களுக்கு இழந்த சக்தியை மீட்டுத் தருகின்றது.

இறக்குமதி செய்து பொதி செய்வோர்
றோயல் இன்டஸ்ரீஸ்
கொழும்பு - 12
T.P.:- 0777 - 277670, 011-4712439.

வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 222-2567




றோயல் குளுக்கோஸ்

பிரபல பார்மசிகளிலும், கடைகளிலும் கிடைக்கும்.

(C/41878) (54-

# தமிழீழத்தின் பொருளாதார வளத்துக்கு ஆனையிறவு உப்பளம் ஒரு வரப்பிரசாதம்

82 லட்சம்கிலோ உப்பு விளைவை இலக்காக வைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள உப்பு உற்பத்தி வேலைகள் குறிஞ்சாத்தீவு உப்பளத்தில் துரிதம் அடைந்து வருகின்றன.

உப்பு உற்பத்தி நிறுவனத்தில் உப்பின் கையிருப்பு தீர்வரும் ஓரிரு மாதங்களில் முடிவுறும் தறுவாயில் இருப்பதால் சித்திரை, வைகாசி மாதங்களில் உப்பைச் சேகரித்துக் குவிக்க உப்பு உற்பத்தி நிறுவனப் பணிப்பாளர், உப்பு நிறுவன ஆலோசகர், உப்பு உற்பத்திப் பொறுப்பாளர், உப்பு உற்பத்தி முகாமையாளர் ஆகியோர் ஒருங்கிணைந்து உப்பு உற்பத்தியில் கடும் அக்கறை காட்டி மிகவும் துரிதமாகச் செயற்பட்டு வருகின்றார்கள்.

கிட்டத்தட்ட 150 ஆண் - பெண் தொழிலாளர்களை வைத்து உப்புப் பாத்திகளில் உள்ள சேற்றை வெளியேற்றுதல், வெளியேற்றிய சேற்றை காயவிட்டு கூட்டிக்குவித்து உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றிப்பறித்தல், சேறு எடுத்த பாத்திகளில் மணல் தூவி செப்பனிட்டு செறிவு நீரைப் பாத்திகளுக்குள் பாய்ச்சும் வேலைகள் அனைத்தும் பகுதி பகுதியாக மிகவும் வேகமாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமன்றி பாரிய நீர் இறைக்கும் இயந்திரங்களின் உதவியுடன் உப்பு உற்பத்திக்குப் பிரதான மூலவளமாக இருந்துவரும் கடல் நீரை உள்வாங்கி சுழற்சிமுறையில் ஓடவிட்டு நீரை செறிவுபடுத்தும் வேலைகளும் ஒரு பகுதியாக நடைபெற்று வருகின்றன. இதற்குப் பொறுப்பாக ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோணாவில், கிளிநொச்சி, பாரதிபுரம், செல்வநகர், சங்கத்தார்வயல், கோவில் வயல், இயக்கச்சி போன்ற இடங்களிலிருந்து தொழிலாளர்கள் காலையில் உழவு இயந்திரங்கள் மூலம் வரவழைக்கப்பட்டு மாலையில் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார்கள்.

கடும் வெயிலையும் பாராது தொழிலாளர்கள் தொழிலில் அக்கறைகாட்டி செயற்படுவதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அரச கூட்டுத்தாபனத்தில் உப்பளத் தொழிலாளர்களாக இயங்கி வந்தவர்களும் புதிய தொழிலாளர்களுடன் கலந்துவிடப்பட்டு வேலைவாங்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க, குறிஞ்சாத்தீவு உப்பளத்தில் தற்சமயம் கையிருப்பில் உள்ள உப்பு உழவு இயந்திரம் மூலம் ஏற்றப்பட்டு ஆனையிறவில் உள்ள உப்பு உற்பத்தி கைத்தொழில் பேட்டைக்கு அனுப்பப்பட்டு பொதியிடும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

தினமும் 30 ஆயிரம் கிலோ உப்பு பொதியிடப்பட்டு வருகின்றது. யுனிசெவ் நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நவீன இயந்திரங்களின் உதவியுடன் உப்பு பொதியிடும் வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த வருடத்துக்கும் அடுத்துவரும் வருடத்துக்குமாக வன்னி, யாழ்ப்பாணம் உட்பட சகல தமிழீழ மக்களும் உப்புக்குத் தட்டுப்பாடின்றி இருக்க வேண்டுமென்பதே உப்பு உற்பத்தி நிறுவனத்தின் நோக்கமென நிறுவன ஆலோசகர் தெரிவித்தார்.

ஆனையிறவில் உள்ள ஒன்பது உப்புக் குளங்களிலும் உப்புச் சேகரிக்கும் வேலைகள் இவ்வருடமும் நடக்குமென உப்பு உற்பத்திப் பொறுப்பாளர் கிறிஸ்ரி தெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்குளங்களில் சிலவற்றின் புனரமைப்பு வேலைகள் இவ்வருடம் நடக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடற்கரையை அண்டிய பிரதேசங்களிலேயே உப்பளங்கள் உருவாக்கப்படுவதும் உப்பு உற்பத்திக்கு களிப்பாங்கான நிலமும் சூரிய ஒளியும் காற்றும் அவசியம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சைபர் டிகிறி ($0^0$) செறிவுள்ள கடல்நீரை உள்வாங்கி கிட்டதட்ட 10 மைல் நீளத்துக்கு சுழற்சிமுறையில் ஓடவிடும்போது இந்நீர் சூரிய ஒளியிலும் காற்றிலும் காய்ச்சப்பட்டு சுமார் 24 டிகிறி ($24^0$) செறிவு ஆனதும் உப்புப்படியும் நிலைக்கு வரும் என்பதே உப்பு உற்பத்தியின் படிமுறையாகும்.

$24^0$ செறிவு நீரை உப்புப் பாத்திகளில் பாய்ச்சி கிட்டதட்ட இருபது நாள்களுக்குப் பினனரே உப்புப்படிய ஆரம்பிக்கும். ஒரு பாத்தியில் ஒரு சுற்றுக்கு 200 அந்தர் உப்பை விளைவாகப் பெறமுடியும்.

**க.கணபதிப்பிள்ளை**

எனவே, இலங்கை வரலாற்றில் உப்பின் மூலம் கூடிய அறுவடையைக் கொடுத்து இலங்கை அரசிற்கு ஆகக்கூடிய வருமானத்தைப் பெற்றுக் கொடுத்து பொருளாதாரத்துறையை முன்னேற்றி வந்த ஆனையிறவு உப்பளம் தமிழீழத்தில் அமைந்திருப்பது தமிழீழ மக்களுக்கு வரப்பிரசாதம். தமிழீழத்தின் பொருளதார வளத்துக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

★

# நாகர்கோயிலில் மீளக்குடியமர ஏற்பாடுசெய்யுமாறு கோரிக்கை

வடமராட்சி, ஏப்.10

வடமராட்சிக் கிழக்கு நாகர்கோவிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேசத்தில் உள்ள அகதி முகாம்களில் வசிக்கும் மக்கள் தம்மைச் சொந்த இடமான நாகர்கோவிலில் மீள்க்குடியமர்த்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளையடுத்து இடம்பெயர்ந்த நாம் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் வசித்து வருகின்றோம். அடிப்படை வசதிகளற்ற நிலையில் அகதிமுகாம்களிலும் உறவினர், நண்பர் வீடுகளிலும் எமது வாழ்க்கை தொடர்கின்றது. எங்களுடைய சொந்த இடங்கள் உயர் பாதுகாப்பு வலயமாக இருப்பதால் மீளக்குடியமர முடியாதுள்ளது. கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக வடமராட்சி அகதிமுகாம்களில் நாம் பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்க்கை நடத்தி வருகின்றோம் அத்துடன், சுனாமி அனர்த்தத்தினாலும் பாதிப்படைந்துள்ளோம். போர் நிறுத்த ஒப்பந்தம் கைசாத்தாகி மூன்று வருடங்களுக்கு மேலாகியும் எமது நிலை பற்றி எவரும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

சொந்த மண்ணில் அகதி வாழ்க்கை வாழுமெமது துர்ப்பாக்கிய நிலைபற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட குரல்கொடுக்காதது எமக்கு மிக வேதனையைத் தருகின்றது.

எம்மை எமது சொந்த மண்ணான நாகர்கோயில் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்துமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என்று நாகர்கோயிலிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பிரதேச அகதிமுகாம்களில் வசிக்கும் மக்கள் தெரிவித்தனர்.

(எ-173)

## சிறப்புற நடந்த சேவை நயப்பு விழா

சைவப்புலவர் வ.கந்தசாமியின் சேவை நயப்பு விழா யாழ். மாநகரசபையின் ஆணையாளர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்புற நடைபெற்றது. யாழ். மாநகரசபையின் சைவ சமயவிவகாரக் குழுவின் சார்பில் அதன் குழுவின் தலைவரும் மாநகராட்சிமன்ற ஆணையாளருமான கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செயலாளர் எஸ்.இரத்தினசிங்கம், து.ராஜன், ஓய்வுபெற்ற சிறாப்பர் எஸ்.கனகசபை உட்பட்ப் பலர் உரையாற்றினார்கள். ஆணையாளர் புலவர் கந்தசாமிக்கு விருது வழங்கிக் கௌரவித்தார்.

(8-111)

# பேரவையின் தீர்மானம் நிறைவேற்றப்படாததை கண்டித்து அடையாள வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் மீள்நியமனம் தொடர்பாக, பல்கலைக்கழகப் பேரவை எடுத்த தீர்மானம் நிறைவேற்றப்படாததைக் கண்டித்துப் பல்கலைக்கழக எழுதுவினைஞர், தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியத்தினர் நேறறு முன்தினம் ஒருநாள் அடையாள வேலை நிறுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது போராட்டம் சம்பந்தமாக அவர்கள் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்கலைக்கழகப் பதிவாளர் தொடர்பாக பல்கலைக்கழகத்தின் உள்ளும் புறமும் தற்சமயம் வெளியாகிவரும் செய்திகள், இடம்பெற்று வரும் இழுபறிகள் தொடர்பாகப் பல்கலைக்கழகத்தில் அங்கம் வகிக்கும் ஒரு தொழிற்சங்கம் என்ற வகையில் எமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டியது கடமையாகும்.

விடுப்புத் தொடர்பில் பதிவாளர் முறைகேடு, மோசடி செய்தார் என்று பல முனைகளிலும் குற்றஞ்சாட்டப்பட்டு பல்வேறு தரப்பினரதும் கோரிக்கையின் பேரில் - பல்கலைக்கழக அதிகார சபையான பேரவை இது விடயத்தில் விசாரணை செய்து நீதியான தீர்ப்பை வழங்க வேண்டும். வழங்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இவ்விடயம் பேரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இது நியாயமானதும் பல்கலைக்கழக சமூகத்தவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமொன்றாகும்.

இதற்கேற்ப பல்கலைக்கழகப் பேரவை விசாரணைக் குழுவை நியமித்து விசாரணை நடத்தப்பட்டு விசாரணை முடிவில் குழுவின் அறிக்கையின் பிரகாரம் பதிவாளரை மீள் நியமனம் செய்வதற்கான தீர்மானம் ஒருவரின் எதிர்ப்பின் மத்தியிலும் பேரவையால் மேற்கொள்ளப்பட்டதாக அறிகின்றோம்.

எனவே, பேரவையால் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தைச் செயற்படுத்த வேண்டியது துணைவேந்தரின் தார்மீகக் கடமையாகும். அத்துடன், பேரவையின் செயற்பாட்டில் நம்பிக்கை வைத்துப் பேரவையின் விசாரணைக்காக, தீர்ப்பிற்காக இதைச் சமர்ப்பித்தவர்கள், பேரவையின் தீர்ப்பினையும் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவர்களினது தார்மீகக் கடமையாகும்.

அதைவிடுத்து ஒரிருவரின் அல்லது ஒரு சாராரின் அர்த்தமற்ற, ஆர்ப்பாட்டத்துக்காக, வேண்டுகோளுக்காகப் பேரவையின் தீமானத்தைப் பின்தள்ளுவது, இழுத்தடிப்பது அல்லது இரத்துச் செய்வது நியாயமற்ற ஒன்றாகக் கருத ஏதுவாவதுடன் பேரவையின் அதிகாரத்திலும் வலுவிலும் ஆளுமையிலும் சந்தேகம் ஏற்படுவதற்கும் காரணமாக அமையும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(8-204)

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் மேற்குவாசலில் இராசகோபுரம்

## இன்று காலை அடிக்கல் நடும் நிகழ்வு

வடமராட்சி, ஏப்.10

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலின் மேற்குத் திசை வாசலில் 31 அடி உயரமும் 25 விக்கிரகங்களும் கொண்ட திருக்கோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவர் இ.அன்னலிங்கம் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் அடிக்கல் நடுகை செய்யப்படும்.

மூன்று தளங்களைக் கொண்ட இந்தக் கோபுரத்தைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிற்பாசிரியர் எஸ். சோமஸ்கந்தன் குழுவினால் நிர்மாணிக்கப்படவுள்ளது.

மேற்குவாசல் திருக்கோபுரம் அமைக்கப்பட்டதும் வடக்கு, தெற்கு வாசல்களிலும் திருக்கோபுரங்களை அமைக்க அறங்காவலர் சபை முடிவுசெய்துள்ளது.

(எ-173)

# அனுமதியின்றி அமைச்சர்கள் வெளிநாடு செல்லத்தடை!

## ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, ஏப்.10

உத்தியோகபூர்வ ரீதியாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியாகவோ வெளிநாடுகளுக்குச் செல்லும் அமைச்சர்மார் அதற்கான அனுமதியொன்றை முன்கூட்டியே, பெறவேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கண்டிப்பான உத்தரவொன்றைப் பிறப்பித்திருக்கிறார்.

இதற்கமைய வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் அமைச்சர்கள் இதற்கான அனுமதியைப் பெறுவதற்கு விசேட விண்ணப்பப்படிவமொன்றை நிரப்பி அதனை ஜனாதிபதியின் கவனத்திற்காகச் சமர்ப்பிக்கவேண்டும்.

இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவமொன்றை நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அனைத்து அமைச்சர்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

உரிய முன்னறிவித்தலின்றியும், முன் அனுமதியின்றியும் அமைச்சர்கள் பலர் வெளிநாடு சென்று வருகிறார்கள். இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதால் ஜனாதிபதி இவ்வாறான தீர்மானத்தை எடுத்திருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-க)




# விசுவாசத்துடன் வாழ்வோம்

**ஞாயிறு நற்பிரசாதம்**

இறைமனித வரலாற்றில் திருப்புமுனை கிறிஸ்துவின் உயிர்ப்பு. கிறிஸ்துவின் திருப்பாடுகளின் பெறுமதி உயிர்ப்புவரை உணரப்படவில்லை. கிறிஸ்து போதித்த இறையரசு பற்றிய போதனைகளும் கருத்தியல் கட்டமைப்புகளும் சிதைந்துபோன நிலையில் யார் கிறிஸ்துவின் பணிக்காக- யார் பதவிக்காக - கிறிஸ்துவோடு இணைந்தவன் என்பது புலனாகியது.

தியாக வாழ்வுக்காக அழைக்கப்பட்டோர் திரைமறைவு வாழ்வில் இருந்தபோது கதவுகள் பூட்டியிருக்க கடவுளின் மகன் கிறிஸ்து பிரசன்னமாகி உங்களுக்குச் சமாதானம் என்றார்.

இது ஆன்மீக அரசியல் தலைவர்களின் இருப்புநிலையைத் தக்கவைத்துக்கொள்ள தமது ஒட்டுமொத்த சக்தியினைப் பயன்படுத்தி சதியினால் சிலுவையில் அறையப்பட்ட தலைவனை இழந்து வாழ்வையும் வல்லமையும் இழந்து நின்ற சீடருக்குத் தரப்பட்ட நம்பிக்கை வார்த்தையாகும்.

நாமும் இன்று திருச்சபைக் கோட்பாடுகளினாலும் சகோதர மார்க்கங்களைச் சரியாகப் புரிந்துணராமல் சமூக அழுத்தம், சாதி வெறி, வங்கி வைப்புக்கள் என்றும் கதவுகளின் மூலமாக பூட்டப்பட்டு, கோட்பாட்டு கிறிஸ்துவையும் கொள்கையற்ற இறையியலையும் நமக்காக உருவாக்கி பிறப்பின்போது கிறிஸ்துவை மின்விளக்குகளால் அலங்கரித்து இதயத்தை இருளாக்கி உயிர்ப்பை உண்டு குடிக்கும் விழாவாக மட்டுமே பார்க்கின்றோம். கிறீஸ்துவைக் குழந்தையாகவே இறுதிவரை [illegible]னைத்து கடவுளைப் பற்றி நன்றாகப் பேசி, எழுதிப் பட்டங்களை அடுக்கிப் பட்டமரம் போல நிற்கின்றோம்.

இயேசுவின் உயிர்ப்பின் சிந்தனையை உள்வாங்கி அநீதி, அதிகாரவெறி என்பவை அஸ்தமனம் ஆகவும் நீதி, அன்பு, மனிதம் என்பன உதயமாகவும் உறுதிகொள்வோம். இறைவன் விரும்பும் ஆலமரம் போல வேர் விட்டு விழுதெறிந்து நிழலாக, நிஜமாக அடைக்கலம் தரும் தலைவர்களாக மாற்றமடைவோம்.

அருள்

உ

# ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள

**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு – கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்ஜோதிடம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது:

அறை எண் 5, பிள்ளையார் இன்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**Room No.5, Pillaiyar Inn**
31, Manipay Road, Jaffna.
Phone: 021 222 2839 Mobile: 0776 923623

(C/42170) (26-14)

# புத்தாண்டு சிறப்புச்சலுகை

Speaker / Sub woofer / Home treater System for TV/VCD/Mp3/DVD Player/Computer/வீடியோவில் பாவிக்கக்கூடியது.




# MICRO PC SYSTEMS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/3 Kasturiyar Rd, Jaffna. Tel: 021 2225893, 077 3126712 |
| நெல்லியடி | Main Street,(Next to Police Station) Nelliyadi. Tel: 077 3039536 |
| வவுனியா | 73C, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 4588339, 0777308417 |
| திருகோணமலை | 148, Main Street, Trinco. Tel: 026 222 1054 078-5720369. |
| கொழும்பு - 06 | 15, 36th Lane, Colombo-06 Tel: 011-4513235, 011-4516764 |
| கொழும்பு - 13 | 82, New Chetty St, Kotahena, Tel: 011-4613617, 011-4619673 |

CORPORATE OFFICE: No.37, 37th Lane, Wellawatte, Colombo-06. Tel: 0114 510686

## பிள்ளையார் இன் A தரம்
## உல்லாசப் பயணிகள் தங்குமிடம்

**காடின் றெஸ்றோறன்ட் A GRADE HOTEL APPROUED By the Ceylon Tourist Board)**

புதுவருடத்தை முன்னிட்டு காடின் றெஸ்றோறன்ட் காலை 9 மணி முதல் இரவு 12 மணி வரை திறந்திருக்கும். (RESTAURANT AND BAR) விசேடமாக மாலை 5 மணி முதல் இரவு 12 மணி வரை கொக்ரெயில்ஸ், பியர் வகைகள் அன்பான உபசரிப்புடன் சிறந்த அனுபவம் வாய்ந்த வல்லுநர்களால் வழங்கப்படும்.

சாப்பாடு வகைகள் ஆகக்குறைந்தது ஒரு மணித்தியாலத்துக்கு முன்னராக ஓடர் பண்ணவும். கைதேர்ந்த இந்திய வல்லுநரால் சுவையான சாப்பாடுகள் தயாரித்து வழங்கப்படும்.

இப்புதுவருடத்தில் வாடிக்கையாளர்களுக்கு எமது சேவைகளைத் தரத்துடன் வழங்குவுள்ளோம். 16 குளிரூட்டப்பட்ட அறைகளுடன் இணைந்த குளியலறைகளுடன், விருந்து மண்டபம், விசாலமான வாகனத் தரிப்பிடம் இவை யாவற்றுக்கும் நாடவேண்டிய இடம்.

**PILLAYAR INN**

| | |
|---|---|
| 31, MANIPAY ROAD, JAFFNA. | Tel. 021 - 222- 5595 / Tel. 021 - 222 - 2829 / Fax. 021 - 222 - 5595 |
| கொழும்பில்: G.2 - 10, Anderson Flats, NARAHENPITA, COLOMBO - 5. | Email Piyarinn @ Sltnet.lk / Website. www. pillaiyar inn. com / Tel. 011 - 4-517814 / Mobile 0777- 758594. |

(43745)(26-14)

# 16 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மரியாம்பிள்ளை
செல்லத்துரை

இளைப்பாறிய M.S.O
உத்தியோகத்தர்
யாழ்.தபால்கந்தோர்

இறப்பு: 1989.04.10

ஐயா உங்களை அன்போடு நினைவு கூறும்

17/03 மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி செ.பாக்கியம்,
ஆசை மகள்: S.T.சகுந்தலாதேவி.

(43941)(39-14-26)

ஓம்
ஸ்ரீராம ஜெயம்

## யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

**பத்ம (தாமரை) பீடம் விற்பனை**

தேவஸ்தானங்களில் பாவிக்கக்கூடிய மரத்தினாலான பத்ம பீடம் ஒன்று எம்மிடம் விற்பனைக்காக இருக்கின்றது.

தேவையானோர் தினமும் தேவஸ்தான நேரத்தில் (மு.ப.6.00 மணி - 12.00 மணி/ பி.ப.3.30 மணி - 6.00 மணி) பத்மபீடத்தைப் பார்வையிட்டு அதற்கான கூறு விலையைக் குறிப்பிட்டு, நேரடியாகவோ கடிதமூலமோ தேவஸ்தான செயலாளரிடம் 16.04.2005 இற்குப் பிந்தாமல் சமர்ப்பிக்கவும்.

யாழ்ப்பாணம்,
தொலைபேசி. 021 222 2476

தலைவர்,
யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்.

(சி.41998)(42-14-45-46)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

## Music World

இன் 10 %

## சிறப்புத் தள்ளுபடி விற்பனை

ஓடியோ CD'S, வீடியோ CD'S, MP3, DVD Soft ware Game CD'S மற்றும் அனைத்துவகை ஓடியோ கசெட் வகைகளுக்கும்

08.04.2005 தொடக்கம் 14.04.2005 வரை அதி விசேட கழிவில் உங்கள் தெரிவுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இக்காலத்தில் கொள்வனவு செய்யும் ஒரிஜினல் Nakoda CD, ஸ்ரிக்கர்கள் 175 ரூபா மட்டுமே.

# Music World

141C, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி.
T.P. : 222 - 6554

(C/42176)(29-14-26)

## 24 ஆவது வருட நினைவலைகள்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 19 – 12 – 1947 |  | 06 – 04 – 1981 |

## அமரர் கணபதிப்பிள்ளை சிவதாஸ்

(பூக்குட்டி)

(திதி: துதியை 10.04.2005)

ஆண்டுகள் இருபத்திநாலு ஓடி மறைந்தாலும்
அகலவில்லை எங்கள் துயர்
உமது ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
பூதவராயர் பெருமானை என்றும் வேண்டுகின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தந்தை, தாய், சகோதரன், சகோதரிகள், மாமன்மார், உறவினர்கள்.

(43994) (39-14-26)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 – 11 – 1943 |  | 12 – 03 – 2005 |

## அமரர் செல்லர் குணரட்ணம்

(முன்னாள் சாரதி, ஐ.போ.ச.U.N.H.C.R. வவுனியா)

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (11.04.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளன. அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நி.முகவரி:
2ஆம் கட்டை,
முரசுமோட்டை, பரந்தன்.

த.முகவரி:
மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

தாய்,
சகோதரன்,
பெறாமக்கள்.

(43890) (39-14-26)

## பேச்சுத்திறன் காணும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.10

வடக்கு – கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பிரதேச முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் தமிழ், ஆங்கில மொழிப் பேச்சுத்திறன் காணும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு யாழ்நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-202)

## வருடாந்த ஒன்றுகூடல்

தொல்புரம்,ஏப்.10

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் க.கோனத் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் ஆர்.சுரேந்திரகுமார் கலந்து கொள்வார். (எ-202)

## யாழ்.பல்கலையில் ஆங்கிலத் திரைப்படம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.பல்கலை. திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் புரூஸ் பெரெஸ்போட்டின் நெறியாள்கையில் உருவான பிரேகெர் மோறன்ற் (Breker Morant) எனும் ஆங்கிலத் திரைப்படம் தமிழ்த் துணைத் தலைப்புகளுடன் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்குப் புவியியற் றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. (எ-202)

## சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.10

எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு சகல சிகை ஒப்பனை நிலையங்களும் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல், இரவு பூட்டும் நேரம் தளர்த்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி முதல் வழமையான நேரம் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-202)

## திருமணக் கார்

குளிரூட்டப்பட்ட ஜப்பான் கார்
திருமணத் தேவைகளுக்கு
வாடகைக்குண்டு.

தொடர்பு: 0777 283795.

(சி-42182)(26-14)

## தேவை

கனனி இயக்குநர்கள் தேவை.

5 கிலோ மீற்றருக்கு உட்பட்ட விண்ணப்பதாரிகள் 14-04-2005 வியாழக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:
**கணேசன் கொமினிக்கேசன்**
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி,
கொக்குவில். T.P.: 021 222 2585.

(44028)(26-14)

## IBS கல்வி நிறுவனம்

சுண்டுக்குளி, நல்லூர்

2ஆம் தவணை ஆரம்பம்
10-04-2005
தரம் 5 முதல் O/L வரை
புதிய அனுமதிகள்
ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(44028)(26-14)

## PERSONAL ENGLISH CLASSES

தரம் 8,9,10,11 மாணவர்களுக்கும் A/L மாணவர்களுக்கும் (GENRAL ENGLISH உம் A/L எடுத்த மாணவர்களுக்கு Spoken English உம் அடிப்படையிலிருந்து மிகுந்த பேச்சுப் பயிற்சியுடன் குழுவாகவோ அல்லது தனியாகவோ கற்பிக்கப்படும்.

(44004)(26-14)

தொடர்புகளுக்கு: 0714 - 838387.

உ

சாவகச்சேரி
அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான

## விசேட அறிவித்தல்

அம்பிகை அடியார்களே!

வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 14-04-2005 வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை அடியார்களின் வசதி கருதி ஆலயத் திருக்கதவு திறந்தே இருக்கும்.

☞ ஆலயத் திருப்பணிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்பகல் 3.30மணியளவில் கோபுர வாசலில் நடைபெற்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

- தர்மகர்த்தா.

(43983)(26-14)

# வங்கிகளின் சேவைகளை இயன்றளவு பயன்படுத்தி உங்கள் வாழ்க்கை வளத்தை மேம்படுத்துங்கள்

## யாழ்ப்பாணத்து மக்களுக்கு மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் ரீ.கருணசேன அழைப்பு



**யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த மக்கள் வங்கியின் பதில் பொதுமுகாமையாளர் ரீ.கருணசேன நேற்று கன்னாதிட்டியில் 'பீப்பிள்ஸ் லீசிங்' கம்பனியின் கிளையைத் திறந்துவைத்தார்.**

**அதன் பின்னர் அவர் 'உதயன்' தொழில்வளம் பகுதிக்கு வழங்கிய விசேட செவ்வி இது.**

★ *கேள்வி:* இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள "பீப்பிள்ஸ் லீசிங்" நிறுவனத்தின் கிளை மூலம் யாழ்பபாண மக்களுக்கு என்னென்ன வகையான நன்மைகள் கிடைக்கும்?

■ *பதில்:* இந்த நிறுவனம், வாகனங்கள், இயந்திரங்கள் உட்பட மக்களின் எந்தத் தேவைகளுக்கும் குத்தகை வழங்கும். வர்த்தக ரீதியாகவோ அபிவிருத்தி நோக்கம் கொண்டதாகவே ஆரம்பிக்கப்படும் எத்தகைய திட்டங்களுக்கும் இந்த நிறுவனம் உதவும்.

இந்த நிறுவனம் வழங்கும் குத்தகைக்கு வரம்புகள் இல்லை. எவ்வகை வாகனமோ, இயந்திரமோ குத்தகைக்குக் கொள்வனவு செய்யப்பட்டாலும் அதைத் தனது பொறுப்பில் வைத்து உரிய பணத்தை வழங்கும் பணியை இந்த நிறுவனம் மேற்கொள்ளும்.

வாடிக்கையாளரின் பெறுமதிக்கு ஏற்ப எல்லையில்லாத அளவு உதவி வழங்கப்படும். அதற்கு எந்தவித பிணையும் வழங்கத் தேவையில்லை. வாடிக்கையாளர் கொள்வனவு செய்யும் வாகனம் அல்லது இயந்திரமே பிணையாக இருக்கும்.

★ *கே:* "பீப்பிள்ஸ் லீசிங்" நிறுவனத்தின் மூலம் வாடிக்கையாளர் ஒருவர் தனது தேவையைப் பூர்த்தி செய்ய ஆவணங்கள் ஏதாவது கையளிக்க வேண்டுமா?

■ *ப:* ஆவணங்கள் கைமாற்றம்பெரிதாக இல்லை. வாடிக்கையாளர் தனது தேவையை ஒரு சிலமணி நேரத்திலேயே பூர்த்தி செய்யக் கூடியதாக இந்த நிறுவன நடைமுறைகள் அமைந்துள்ளன. அங்கு பணியாற்றும் ஊழியர்கள் ஆவணங்களைப் பூர்த்தி செய்வர். பிணைக்காக காணி உறுதிகளோ கட்டட ஈடுகளோ வழங்க வேண்டியதில்லை. சில சமயங்களில் பிணையாள் ஒருவர் கேட்கப்படலாம்.

★ *கே:* இதுவரை தங்கள் நிறுவனம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு வாடிக்கையாளர்களுக்கு எந்தளவு உதவி வழங்கினீர்கள்?

■ *ப:* இதுவரை நூறு மில்லியன் ரூபா பெறுமதிக்கு குத்தகை நிதியை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு வழங்கியுள்ளோம். இக்கிளை ஆரம்பிக்க முன்புதான் இந்த உதவி வழங்கப்பட்டது.

கொழும்பில் ஏற்கனவே யாழ்ப்பாணத்துக்கு என்று ஒரு பிரிவு செயற்பட்டது. இங்குள்ள கிளைகள் மூலம் கிடைத்த கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டன.

இனிமேல், இப்பகுதி வாடிக்கையாளர்கள் கொழும்புக்கு வரத்தேவையில்லை. இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளை மூலம் மக்கள் தமது தேவையைப் பூர்த்தி செய்யமுடியும்.

★ *கே:* கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இக்கிளை மூலம் உதவி பெறமுடியுமா?

■ *ப:* உதவி வழங்குவதற்கு வாகனத்தையே பாதுகாப்பாக எடுக்கிறோம். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் மீட்கப்படாத பகுதிகளாகும். எனவே, அங்குள்ளவர்களுக்கு உதவி வழங்குவது குறித்து ஆராயவேண்டியுள்ளது. இததிட்டத்தின் கீழ் ஒழுங்காக மாதாந்தம் பணம் செலுத்தப்படாதுவிட்டால், வாகனத்தை நிறுவனம் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்படும்.

ஆகவே, மேற்கூறிய மாவட்டங்களுக்கு இந்த நிறுவனம் மூலம் நிதி வழங்குவது குறித்து இதுவரை முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக ஆராய்ந்து விரைவில் முடிவு செய்வோம்.

★ *கே:-* மக்கள் வங்கி யாழ்ப்பாணத்தில் எத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது?

■ *ப:-* மக்கள் வங்கி பல்வேறு திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. யாழ்ப்பாணத்தில் கலவரகாலத்தில் கூட மக்கள் வங்கிக்கிளைகள் செயற்பட்டன. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துவந்தன.

இன்று மீட்கப்பட்ட பகுதிகளிலும் மீட்கப்படாத பகுதிகளிலும் எமது கிளைகள் செயற்படுகின்றன. அவற்றினூடாகத் சகல வசதிகளையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றோம்.

**சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு**

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடமைப்பு மானிய உதவிகளை வழங்கவுள்ளோம். வெளிநாடுகளில் இருந்து கிடைத்த நிதிகளை மக்கள் வங்கிக் கிளைகள் ஊடாக வழங்க அரசு முடிவுசெய்துள்ளது.

முழுமையாக வீடுகள் அழிந்திருந்தால் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா உதவி வழங்கவிருக்கிறோம். பகுதியாக சேதமடைந்த வீடுகளுக்கு ஒரு லட்சம் ரூபா உதவி வழங்கப்படும்.

புள்ளிவிவரத் திணைக்களத்தினர் சுனாமியால் சேதமுற்ற வீடுகளின் விவரங்களைச் சேகரித்துத் தயாரித்துள்ள பட்டியலை எம்மிடம் கையளித்துள்ளனர். அந்தப்பட்டியலின்படி மானிய உதவிகளை படிப்படியாக வழங்கி உள்ளோம். இந்த உதவுதொகை மீளப்பெறப்படமாட்டாது. வாடிக்கையாளரின் வேலை முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த உதவி பங்கிட்டு வழங்கப்படும்.

இதற்குப் புறம்பாக தற்போதும் 5 ஆயிரம் ரூபாவும் 2 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கி வருகின்றோம். இதற்காக பாதிக்கப்பட்ட மக்கள் எமது வங்கியின் கணக்குகளைத் திறந்துள்ளனர். ஆகவே இந்தக் கணக்குகள் மூலம் மானிய உதவிகளையும் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

வீடமைப்பு மானிய உதவியாக முதல்கட்டம 50 ஆயிரம் ரூபா வழங்குவோம். மீதி வீடமைக்கும் வேலையைப் பொறுத்து வழங்குவோம்.

**வங்கியில் கடன் பெறுவதில் யாழ்.மக்களுக்கு அதிக நாட்டம் இல்லை**

★ *கே:-* யாழ்ப்பாண மக்கள் பெரும் தொகையான பணத்தை மக்கள் வங்கியில் வைப்பில் இடுகிறார்கள். அவர்களின் பணம் தெற்கு அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், வடக்கின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படுவதில்லை என மக்கள் முறைப்படுகிறார்கள் அது குறித்து...?

■ *ப:-* இது மிகவும் நல்ல கேள்வி. யாழ்ப்பாணம் நிதி வைப்பிலிடும் அளவில் பெரிய பிரதேசம். ஆனால், அதற்கு குறைந்த அளவே கடன வழங்கப்படுகின்றது. இது பெரிய பிரச்சினைதான். நாங்களும் இதில் அக்கறையாக இருக்கிறோம். யாழ்ப்பாண மக்களுக்கு அதிகமான கடன்களை வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். கூடுதல் வசதிகளை வழங்க தயாராகவுள்ளோம்.

எனினும், யாழ்ப்பாணத்து மக்கள் வங்கியன் கடனைப்பெற்று பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய பெரியளவில் முன்வருவதில்லை என்றே கூறவேண்டும். வாடிக்கையாளர் எம்மிடம் வந்தால் கடனவழங்குவதற்குப் பல திட்டங்கள் உள்ளன.

வாடிக்கையாளர்கள் கடன் எடுப்பதில் ஏன் அக்கறை காட்டுவதில்லை. இதற்கு என்ன காரணம் என யாழ்.பிராந்திய அலுவலக உயர் அதிகாரிகளிடம் கேட்டேன்.

தற்போது நிலவும் சூழ்நிலையை குறித்து இப்பகுதி மக்களுக்கு இன்னமும் நம்பிக்கை ஏற்படவில்லை. நம்பிக்கையான சூழல் உருவாகும் போது மக்கள் கடன் பெற்று அபிவிருத்தியில் ஈடுபடுவார்கள் என்று அந்த அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.

★ *கே:-* கடன் பெறுவதற்கு பல்வேறு நிபந்தனைகளை வங்கி விதிப்பதால் மக்கள் கடன் பெறுவதில் பல தடங்கல்கள், சிக்கல்களை எதிர்நோக்க நேரிடுவதாக கூறப்படுகின்றதே அதுபற்றி...?

■ *ப:-* வங்கியின் பணவைப்புகளின் பாதுகாப்புக் கருதி சில உத்தரவாதங்களைக் கேட்பது வழமைதான். ஆனால், இங்கு கடன்பெற்றவர்கள் திருப்பிக்கடன் செலுத்துவதில் கூடுதல் அக்கறை காட்டுகிறார்கள். நகை அடகு பிடிக்கும் பிரிவு நல்லமுறையில் இங்கு செயற்படுகின்றது.


பெரிய கடன் கோரும்போது தான் பாதுகாப்புக்காக சில ஆதாரங்களைக் கோருகின்றோம். மக்கள் எங்கள் வங்கியில் வைப்புச்செய்யும், பணத்தைக் கடனாக வழங்கும்போது அந்தப் பணம் மீளக்கிடைப்பதற்கு சில நிபந்தனைகளை விதிப்பது வழமைதான் மக்களின் பணத்துக்கு நாம்தான் பொறுப்பு. கடன் வழங்கித்திருப்பிக் கிடைக்காவிட்டால் மக்களுக்கு நாங்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

★ *கே:* யாழ்ப்பாண மக்களுக்கு என்ன செய்தியைச் சொல்ல விரும்புகிறீர்கள்?

■ *ப:* வங்கிகளின் சேவைகளை மக்கள் நாடி வரவேண்டும். கிடைக்கும் வசதிகளைப் பயன்படுத்த வேண்டும். வங்கிகள் மக்களுக்கு உதவத் தயாராக இருக்கின்றன. அரசும் உதவத் தயாராக இருக்கின்றது. இந்த வசதிகளைப் பயன்படுத்தி மக்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வளத்தை மேம்படுத்திக்கொள்ளவேண்டும். ✪

தொழில் வளம்

# யாழ்ப்பாணம் திறந்த சந்தையாக விளங்குகிறது; இங்கு இடம்பிடிக்கும் விருப்பம் எமக்கும் உண்டு



## அஷோக்லேலண்ட் தமிழகப் பொது முகாமையாளர் முத்து சுப்பிரமணியன் உதயனுக்குச் செவ்வி

**இந்தியாவின் பிரபல்யமான மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனம் அஷோக் லேலண்ட். அதன் தமிழக பிராந்தியத்தின் பொதுமுகாமையாளர் சீ.எஸ்.முத்து சுப்பிரமணியன் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.**

**மக்கள் வங்கியின் நிறுவனமான 'பீப்பிள்ஸ் லீஸிங் கம்பனியின்' யாழ்ப்பாணக் கிளைத் திறப்பு விழாவில் சிறப்பு அதிதியாக அவர் பங்குபற்றினார்.**

**யாழ்ப்பாணத்துக்கு இருநாள் விஜயம் மேற்கொண்டிருந்த அவர் 'உதயனுக்கு' வழங்கிய விசேட செவ்வி இது.**

★ *கேள்வி:* - பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்துக்கும் தங்கள் நிறுவனத்துக்கும் உள்ள தொடர்பு என்ன?

■ *பதில் :-* நிறையத்துறைகளில் அந்த நிறுவனம் பணியாற்றுகின்றது. அதில் ஒன்று வர்த்தக வாகனங்கள். எமது வாகனங்களுக்கு அவர்கள் குத்தகை வழங்குகிறார்கள். எம்மைப்பொறுத்தவரையில், அவர்கள் எமது வாடிககையாளர்கள். எமது பங்கும் அவர்களுக்கு முக்கியமாக அமைந்துள்ளது.

★ *கே:-* இதுவரை இலங்கைக்கு எவ்வளவு வாகனங்களை இந்த நிறுவனம் மூலம் குத்தகைக்கு வழங்கியுள்ளீர்கள்?

■ *ப:* 1996 ஆம் ஆண்டு அந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் எம்முடன் தொடர்பு வைத்திருக்கிறார்கள்.

இதுவரை 4 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்களை வழங்கியுள்ளோம். குறிப்பாக 45 ஆசனங்களையுடைய பஸ்கள், லொறிகள் என்று வழங்கியுள்ளோம்.

இலங்கை அரசுடன் எமது நிறுவனம் கூட்டு முயற்சித்திட்டம் ஒன்றை பனாகொடையில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. வாகனத்தைப் பொருத்துதல், உடற்கோப்பு தயாரித்தல் போன்ற பணிகள்அங்கு நடக்கின்றன.

★ *கே:* உலகில் பல்வேறு நாடுகளுக்கு உங்கள் உற்பத்திகளை சந்தைப்படுத்துகிறீர்கள். இலங்கையில் சந்தைவாய்ப்பு எப்படியுள்ளது?

■ *ப:* இலங்கையும் எமது நிறுவனத்தைப் பொறுத்தவரையில் முக்கியமான சந்தையே கடந்த வருடம் ஏப்ரலில் இருந்து மார்ச் 31 ஆம் திகதி வரை 3 ஆயிரம் வாகனங்கள் இலங்கையில் விற்பனையாகியுள்ளன. இது ஒரு பெரிய எண்ணிக்கையாகும்.

கடந்த 2, 3 வருடங்களாக இங்கு அமைதி நிலை இருப்பதால் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டு வருகின்றது. இதனால் வாகனங்களின் தேவை அதிகரித்துள்ளது; அதிகரித்து வருகிறது. உதாரணமாக கடந்த மார்ச் மாதம் மட்டும் 430 வாகனங்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்துள்ளோம்.

அதன் காரணமாக யாழ்ப்பாணத்தைப் பார்க்கவும். இன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும் வந்துள்ளேன்.

★ *கே:* யாழ்ப்பாணம் வருவதற்கு முன்னர் இங்குள்ள நிலையை அறிந்திருந்தீர்களா?

■ *ப:* யாழ்ப்பாணம் போகிறேன் என்று மனைவியிடம் கூறினேன். 'அங்கா போகிறீர்கள். அங்கு வசதி ஒன்றும் இல்லையே. போனதும் ரெலிபோன் செய்யுங்கள் என்று கூறினார். இங்கு வந்து பார்த்தபோது நல்ல முன்னேற்றம் கண்டேன்.

மனைவிக்கு ரெலிபோன் செய்யலாமா என முன்னர் நினைத்தேன். இங்கு வந்து பார்த்த போது ரெலிபோன் வேலைசெய்கின்றது. ரெலிபோன் கடைகள் நிறைய இங்கு இருக்கின்றன. சல விதமான நவீன பொருள்களையும் இங்கு காணமுடிகிறது.

ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்குச் சண்டை முடிந்தபின் போனேன். யுத்தம் முடிந்தும் அங்கு இயல்புநிலை ஏற்படாதமையையே கண்டேன். ஆனால் இங்கு பார்க்கும்போது இயல்பு நிலை ஓரளவுக்கு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது. உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது இங்கு பெரிய வித்தியாசத்தைக் காண முடிகிறது.

★ *கே:* யாழ்ப்பாணம் வருவதற்கு முன்னர் நீங்கள் கொண்டிருந்த கருத்து தமிழகத்தில் மக்களிடையே பரவலாக உள்ளதா அல்லது...

■ *ப:* ஆம், பரவலாக அதே கருத்துத்தான் நிலவுகின்றது. இங்கு வந்து செல்பவர்கள் மூலம் அந்த நிலை ஓரளவிலேனும் மாறும் என்று எதிர்பார்க்கலாம்....

★ *கே:* யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காக உங்கள் நிறுவனத்தின் தொழிற்சாலை ஒன்றை இங்கு ஆரம்பிக்கும் திட்டம் அல்லது நோக்கம் ஏதாவது உண்டா?

■ *ப:* தொழிற்சாலை நிறுவுவது என்பது உடனடியாகச் சாத்தியமானது அல்ல. அதற்கு முதற்கட்டமாக வாகனங்களை திருத்தும் நிலையம் ஒன்றை இங்கு அமைக்கவேண்டும். அதன் பின்னர் வாகன உதிரிப்பாகங்கள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

முதன்முறையாக எமது நிறுவனத்தின் சேவிஸ் நிறுவனம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்தோம் உதிரிப்பாகங்களை எவ்வாறு இங்கு உற்பத்தி செய்யலாம் என்பது குறித்தும் ஆராய்ந்துள்ளோம்.

உதிரிப்பாகங்களைக் கிடைக்கச் செய்வது, சேவிஸ் வழங்குவது, தொழிற் கூட்டம் (Work Shop) அமைப்பது ஆகிய ஆரம்பப் பணிகளையும் செய்த பின்னரே தொழிற்சாலை அமைக்க முடியும். இப்போது முதற்கட்டப் பணிகளை - ஆரம்பப் பணிகளைச் செய்வதில் நாம் தீவிரமாக ஈடுபட்டுள்ளேன்.

இங்குள்ள மக்களுடன் எமது நிறுவனம் இணைப்பை ஏற்படுத்தி விட்டு, இருதரப்பினருக்கும் பயன்பெறக் கூடிய வகையில் எதிர்காலத்தில் செயற்படுவதுதான் எமது நோக்கம்.

எமது நிறுவனத்தின் மூலம் சேவிஸ் நிலையம், உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம், தொழில்கூடம் ஆகியவற்றைப் பரவலாக முதலில் அமைக்கத் திட்டங்கள் வகுத்துள்ளோம்.

யாழ்ப்பாணம் இப்போது திறந்த சந்தையாக (Open Marker) இருக்கிறது. இந்தச் சந்தையிலும் இடம்பிடிக்க வேண்டும் என்ற விருப்பம் எமக்கு நிறையவும் உண்டு. அதாவது எமது சேவையை இப்பகுதி மக்கள் பெறவேண்டும் என்பதிலும் விருப்பமாக இருக்கின்றோம்.

எமது நிறுவனத்தின் உற்பத்திகளான வாகனங்கள் நிறையவே ஓடிக்கொண்டிருக்கின்றன. வாகனங்கள் ஓடினால் போதாது. அவற்றுக்கு சேவிஸ் வழங்கவேண்டும். அதனாலேயே இப்போது சேவிஸ் நிலையம் அமைத்துள்ளோம்.

அந்த நிலையத்தில் பணிபுரிபவர்களுக்கு உபகரணங்கள் வழங்கியுள்ளோம். அவர்களுக்கு இந்தியாவில் பயிற்சியும் வழங்க உள்ளோம். ★

## Your current IT career course is not up to the mark?

What do you do?

- Stand by
- Shut down
- Restart your course at NIIT with a refund

OK

A computer course that doesn't deliver, shouldn't stop you from fulfilling your dreams. Join NIIT today, restart your career and get a refund of the course fee* you have paid at your old institute.

• Employers have voted NIIT as the first choice for recruitment • NIIT has been ranked Asia's No.1 IT Training Company by International Data Corporation • NIIT is one of the world's largest sources for trained IT manpower • NIIT was Microsoft's Best Training Partner in 2001/2002 • Only NIIT offers industry-relevant curriculum because of the unique synergy between its software and training competencies.

Most Advanced IT Curriculum Currently Available in Sri Lanka.

**Go ahead, give us a call today and restart your IT career.**

NIIT Branches: • Union Place 011-4720790 • Nugegoda 011-4408770 • Bambalapitiya 011-4519111 • Kandy 081-4470900 • Kurunegala 037-4691000 • Gampaha 033-4673222 • Trincomalee 026-2227767 • Jaffna 021-2227250 • Tissamaharama 047-4378930 • Anuradhapura 025-4581009

NIIT enabled by cyberSKILLS

*Conditions apply.

(C-42196)

WWW.mmbicyberskills.com

"NIIT Trusted by more than 2.5 million IT students worldwide"


# தென்மராட்சி ஆசிரியருக்குச் செயலமர்வுகள்

தென்மராட்சி,ஏப்.10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான ஆரம்ப கல்வி செயலமர்வும் பாட விரிவாக்கம் தயாரித்தலும் எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் நான்கு தினங்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இச்செயலமர்வில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களையும் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார்.

ஏப்ரல் 18, 19 ஆகிய திகதிகளில் ஆரம்பக்கல்விச் செயலமர்வும் ஏப்ரல் 19, 20, 21 ஆகிய திகதிகளில் பாட விரிவாக்கம் நிறைவுசெய்தலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-117)

## மணவாளக் கோலவிழா

ஏழாலை,ஏப்.10

ஏழாலை மத்தி அருள்மிகு வல்லியப்பன் ஆலய மணவாளக் கோல விழா எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அபிஷேக ஆராதனைகளும் பூசை நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறும் என ஆலயப் பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

(த-45)


## விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும்
பழக விரும்புபவர்களும் தேவை.
பழக விரும்புபவர்களுக்குக் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44,42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(44060) (21-14-24)



Institute of Informatics Studies
# 100, Clock Tower Road,
Jaffna.
T.P. No. 021 222 2831

## IIS உடன் இணைந்து கொள்ளுங்கள் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

10ஆவது ஆண்டின் சேவையில் காலடி பதித்துள்ள எமது நிறுவனம் கடந்த 9 ஆண்டுகளில் தகவல் தொழில்நுட்பத் துறையில் யாழ் மாவட்டத்தில் பெரும்பங்கினை ஆற்றியுள்ளது யாவரும் அறிந்ததே. அந்த வகையில் இவ்வாண்டில் தனது சேவையினை மேலும் விஸ்தரிக்கும் நோக்கில் கணனித்துறையில் பல பயன்மிகு சிறப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதன் முதற்கட்டமாக எமது நிறுவனத்தின் சேவைகளை குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் ஒரு கட்டமைப்பினை உருவாக்கவுள்ளோம்.

யாழ் மாவட்டத்தில் உள்ள கணனிக்கல்வி நிறுவனங்கள் தமது நிறுவனத்தின் தரத்தினையும் உறுதித் தன்மையினையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு ஏற்றவகையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை வழங்குவதற்கு IIS நிறுவனம் வழி சமைக்கின்றது. இதன் முதற் கட்ட நடவடிக்கையாக கீழ்க்குறிப்பிட்டுள்ள பிரதேசங்களை மையப்படுத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

i) சாவகச்சேரி
ii) மானிப்பாய்
iii) சுன்னாகம்
iv) அச்சுவேலி
v) தீவகம்
vi) திருநெல்வேலி/உரும்பிராய்
vii) கொக்குவில்/கோண்டாவில்
viii) வட்டுக்கோட்டை/சங்கானை
ix) கிளிநொச்சி
x) மூளாய்/ காரைநகர்/ கைதடி/ நாவற்குழி

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் கணனிக்கல்வி நிறுவனங்களை நடாத்துவோர்/ புதிய முதலீடுகளை மேற்கொள்ள விரும்புவோர் எம்முடன் இணைந்து செயற்பட முடியும்.

IIS இன் இச்செயற்பாட்டில் பங்காளர்களாக விரும்பும் நிறுவனங்கள் இயக்குநருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.



EXCELLENT COMPUTER EDUCATION @ AFFORDABLE PRICE

# யாழ் நகரில்

APRIL 15 முதல்

GLOBAL VILLAGE
COMPUTER EDUCATION
(A unit of Global Media Tech.)

குறைந்த கட்டணத்துடன் சர்வதேச தரமிக்க சான்றிதழ் !!!

GV GV

www.globalvillage-lanka.com

தரமான கணினி கல்வியுடன் சர்வதேச தரமுள்ள சான்றிதழ்

## COURSES OFFERED

**PROFESSIONAL COURSES**
OAC • DTP • DCA • HWE • ECOM

**PROGRAMMING COURSES**
VB • C/C++ • JAVA

**MULTIMEDIA COURSES**
FLASH • MAYA • 3DS MAX • PREMIERE • DREAMWEAVER • DIRECTOR

**ACCOUNTING COURSES**
TALLY

**KIDS COURSES**
STAGE 1 • STAGE2

FREE Study Materials

APPROVED TRAINING CENTER

GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
(A unit of Sovereign Infotech India (Pvt) Ltd)

ICM IMIS

தொடர்புகட்டு : (New District Franchise)
GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
உடுவில் வீதி, மருதனார்மடம்,
யாழ்ப்பாணம்.
T.P. : 021-4590222

(C-42223)

**ISLANDWIDE FRANCHISES**
JAFFNA MANNAR
TRINCOMALEE CHENKALADY
VAVUNIYA WATTALA

**REGIONAL OFFICE**
183, NEW CHETTY STREET,
COLOMBO 13.
011-4615202

**CORPORATE HEAD OFFICE**
116, SEA STREET,
NEGOMBO.
031-2235855,2238645

WE DO NOT HAVE ANY OTHER FRANCHISES IN JAFFNA DISTRICT

# பாடசாலை சென்று திரும்பும் வேளைகளில் மாணவர்கள் மீது அதிக கவனம் வேண்டும்

## அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.10

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து விடயங்களில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அதிக அக்கறையுடன் செயற்படவேண்டும்.

- இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் யாழ். நீதி மன்ற மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்.

மாணவர்கள் பாடசாலைக்கு வரும்போதும், பாடசாலை முடிந்து வீடு திரும்பும்போதும் வீதிப்போக்குவரத்தில் கவனிக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு யாழ். நகரப்பகுதியில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அத்துடன், யாழ். பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி சேனாரட்ண, பெண் பொலீஸ் உத்தியோகத்தர் கல்யாணி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வரதராசா, வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் போக்குவரத்து, அவர்களின் நடத்தைகள் தொடர்பில் அதிபர்களும், ஆசிரியர்களும் அதிக அக்கறையுடன் செயற்படவேண்டுமென மேலதிக நீதிவான் அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

குறிப்பாகப் 13 வயதுக்குட்பட்ட மாணவர்கள் சைக்கிள் ஓடுவது தடை செய்யப்படவேண்டும் எனவும், காலையில் வகுப்புகள் ஆரம்பமாகும் போதும் பின்னர் - பாடவேளை முடியும் போதும் மாணவர்கள் வீதியில் பாதுகாப்பாகப் பயணம் செய்வதற்கான அறிவுறுத்தல்களை ஆசிரியர்கள் வழங்கவேண்டும் என்றும் நீதிவான் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நீதிவான் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்கள் பாடசாலைக்கு எந்த மார்க்கமாக வருகிறார்கள் என்றும், பாடசாலை முடிந்த பின்னர் எந்த மார்க்கமாக வீடு திரும்புகிறார்கள் என்பதையும் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள் ஆகியோர் அறிந்திருக்க வேணடும்.

மாணவர்கள் பாடசாலைக்கு வரும்போதும் பின்னர் வீடு திரும்பும்போதும் வித்தியாசமானவர்களுடன் தொடர்புகளை வைத்திருந்தால் அல்லது அவர்களுடன் பயணம் செய்தால் அதைக் காணும் மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள் அதுபற்றித் தமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டுவரவேண்டும்.

அத்துடன், அடிக்கடி பெற்றோர் சந்திப்புக்களை நடத்தி மாணவர்கள் பாடசாலை முடிந்தவுடன் வீட்டுக்குச் செல்கின்றனரா அல்லது எங்காவது தங்கிச் செல்கின்றனரா? என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

மாணவர்கள் தமது பிரச்சினைகளையோ அல்லது பாலியல் துஷ்பிரயோகம் பற்றியோ முறைப்பாடுகளைச் செய்வதற்குப் பாடசாலைகளில் தனியான ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும்.

பெற்றோர்கள், சிறுபிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும்போது பதிவுசெய்யப்பட்ட ஓட்டோக்களையோ அல்லது வாகனங்களையோ பயன்படுத்தவேண்டும் - என்று தெரிவித்தார்.

போக்குவரத்து தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் தம்மிடம் வீடியோ ஒளி நாடா உள்ளதென்றும் அதனைப் பெற்று பாடசாலை மாணவர்களுக்குக் காண்பிக்குமாறும் போக்குவரத்துப் பொலீஸார் தெரிவித்தனர். அத்துடன், பிரச்சினைகள் ஏதாவது ஏற்பட்டால் அதுபற்றி முறைப்பாடு செய்வதற்கென தனியான தொலைபேசி இலக்கம் ஒன்றையும் பாடசாலை அதிபர்களுக்குப் பொலீஸார் வழங்கினார்கள்.

கலவரங்கள் நடைபெறும் வேளைகளில் பாடசாலை அதிபர்கள் தமது மாணவர்களை வீதிகளில் இறங்கவிடாது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவேண்டுமெனவும் இக்கூட்டத்தில் கருத்து முன்வைக்கப்பட்டது. (8)

## அனுமதியின்றி மணல் ஏற்றிவந்த லொறிக்கு 6 மாதத் தடை

தென்மராட்சி,ஏப்.10

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த லொறியை ஆறு மாதங்கள் நீதிமன்றில் தடுத்துவைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

சாவகச்சேரிப் பொலீஸார் நேற்றுமுன்தினம் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த பார ஊர்தியையும் அதன் சாரதியையும் நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

இந்த லொறி ஏற்கனவே மூன்று தடவைகள் மணல் ஏற்றிய குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டதைப் பொலீஸார் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதனையடுத்து, இந்த லொறியை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதிவரை நீதிமன்றில் தடுத்துவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சாரதியான மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சோதிராசா ஜெயச்சந்திரன் என்பவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.(து-117)

## சுகாதாரத்துறை ஊழியருக்குச் சம்பள உயர்வு கிடைத்தது

தென்மராட்சி,ஏப்.10

யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர், ஊழியர்களுக்கான அதிகரித்த சம்பள உயர்வு ஏப்ரல் மாதச் சம்பளத்தில் நிலுவையுடன் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஒரே நேரத்தில் வழங்குவதன் பொருட்டு ஏப்ரல் மாத வேதனத்துடன் இக்கொடுப்பனவு நிலுவையுடன் வழங்கப்பட்டுள்ளது.(எ-117)

## உலக வங்கியின் நிதியுதவியுடன் வலி.மேற்கில் 70 வீடுகள் அமையும்

வலி.மேற்கு,ஏப்.10

வலி.மேற்குப் பிரதேசத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் 70 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளைப் பிரதேச செயலகத் திட்டமிடல் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட - வருமானம் குறைந்த - குடும்பங்களுக்கே இந்த வீடுகள் வழங்கப்படவிருக்கின்றன. 500 சதுர அடியைக் கொண்டதாக - ஓடுகளினால் வேயப்பட்டதாக - இந்த வீடுகள் அமையும். ஒவ்வொரு வீடுகளும 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படுகின்றன.

வலி. மேற்கில் பின்தங்கிய கிராமங்களான பல்லசுட்டி, செம்மணத்தி, முங்கோடை, ஊரெத்தி, மூளாய் பிள்ளையார் கோயிலடி ஆகிய கிராமங்களில் இந்த வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த ஐந்து கிராமங்களிலிருந்து 70 குடும்பங்களைத் தெரிவுசெய்வதற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் கிராமிய புனரமைப்புக் குழுவினரையும் உத்தியோகத்தர்களையும் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (த-175)

## மிருசுவில் குடியேற்றத்திட்டத்துக்கு அடுத்த மாதம் மின்சார விநியோகம்

தென்மராட்சி,ஏப்.10

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதிக்கு அடுத்த மாதம் மின்சார விநியோகம் வழங்கப்படவுள்ளது.

மின்சார விநியோகத்திற்கான ஆரம்ப கட்டப் பணிகள் நேற்றுமுன்தினம் மின்சார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் மின்சக்தி அமைச்சருடன் கலந்துரையாடியதையடுத்து, அப்பகுதிக்கு மின்விநியோகத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், இம்மாத இறுதிக்குள் வேலைகள் பூர்த்தியடைந்ததும் அடுத்த மாதம் அப்பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## வளப்பற்றாக்குறையுடன் இயங்கும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை

புதுக்குடியிருப்பு,ஏப்.10

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை போதிய அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இயங்கிவருகிறது.

அங்கு மருத்துவர்கள், தாதியர்கள், மருந்தாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. கட்டடங்கள் மற்றும் பௌதிகவளங்களும் போதிய அளவில் இல்லை.

இதனால், நோயாளர்களும் உத்தியோகத்தர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்தகால யுத்தங்களின் போது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த இந்த வைத்தியசாலையை உரிய முறையில் புனரமைத்து, வேண்டிய வசதிகள், வளங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்குச் சமாதான காலத்திலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற இந்த ஒரேயொரு வைத்தியசாலைக்கே முல்லை. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து நோயாளர்கள் வருகின்றனர்.

எனினும், அங்குள்ள குறைந்தளவு வளங்களைப் பயன்படுத்தி நோயாளர்களுக்கு உரிய சிகிச்சையினை வழங்கமுடியாமல் வைத்தியர்கள் திண்டாடுகின்றனர்.

ஆளணிப் பற்றாக்குறை காரணமாக இங்கு பணியாற்றும் வைத்தியர்களும் ஊழியர்களும் அவசர தேவைகளுக்குக்கூட லீவு எடுக்க முடியாத நிலையில் சிரமப்படுகின்றனர்.

இந்த வைத்தியசாலையின் நிலைமைகள் குறித்துப் பலதடவைகள் சுகாதார அமைச்சருக்கும் ஏனைய தரப்புகளுக்கும் தெரியப்படுத்தப்பட்ட போதிலும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று - தெரிவிக்கப்படுகின்றது. (த-353)

## சிலுவை யாத்திரை கிராஞ்சியில் சிறப்புற்றது

கிராஞ்சி புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த 18ஆம் திகதி வருடாந்த சிலுவை யாத்திரை நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது.

கிராஞ்சி அந்தோனியார் ஆலயத்தில் ஆரம்பமான சிலுவை யாத்திரை பிரதான வீதி, அஞ்சல் அலுவலக வீதி ஊடாகச் சென்று கிறிஸ்துராசா ஆலயத்தைச் சென்றடைந்தது.

வலைப்பாடு பிரதேச பங்குத் தந்தை அருட்திரு. அன்ரன் றோக் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர். (த-323)

## கரைச்சிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

கரைச்சிப் பிரதேச சபையினரால் ஜெயந்தி நகர் கிராமத்தில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலங்களில் கிளிநொச்சியில் கட்டாக்காலி நாய்களினால் கடியுண்டு சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரிப்பதை அடுத்து பிரதேச சபை இந்நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்த நாய் பிடித்தழிப்பு நடவடிக்கையில் ஏராளமான தெருநாய்கள் பிடித்தழிக்கப்பட்டன.

அதேவேளை, பிரதேச சபை ஜெயந்தி நகரில் நடத்திவரும் முன்பள்ளி வளாகம் பெற்றோராலும் ஆசிரியர்களாலும் சிரமதானம்மூலம திருத்தியமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (த-301)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## அழகாபுரி கிராமத்தில் நூல் நிலையம் அமைகிறது

கிளிநொச்சி இராமநாதபுரம் அழகாபுரிக் கிராமத்தில் நூல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நூலகத்தின் கட்டட நிதிக்கென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார், (த-352)




சுனாமியால் சேதமடைந்த வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகா வித்தியாலயம் தற்போது தற்காலிகக் கொட்டகையில் இயங்கிவருகின்றது. பாடசாலையின் தோற்றத்தையும் அங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கு யாழ். லயன்ஸ் கழகத்தின் உப தலைவர் லயன் ஸ்ரீபன் கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் அருகே யாழ். லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் த.அன்பானந்தன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (த-12)


இறுதி அறிவித்தல்

தபால் மூலம் செலுலர், இலத்திரனியல்

தபால் மூலக் கற்கைநெறிகளுக்கான கட்டணங்கள் எதிர்வரும் 18ம் திகதியின் பின்னர் மாற்றப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். இதன் பின்னர் அனுப்பப்படும் வழமையான கட்டணங்களை நிறுவனம் பொறுப்பேற்காது. கற்கைநெறி பற்றிய முழு விபரங்களை அறிந்து கொள்ள மேலதிக ரூ 5 முத்திரை ஒட்டிய நீள கடித உறையை வைத்து அனுப்பவும். கற்கை முடிவில் சான்றிதழைப் பெறலாம். இத்தத் திட்டத்தில் வயது வேறுபாடின்றி அனைவரும் இணைந்து கொள்ளலாம். இலங்கையில் இருக்கும் அனைவரையும் இணைந்து பயன் பெறும்படி கேட்டுக்கொள்கிறோம்.

(1) Dip in Electronics (Repairing) - 1000+1000/=
(2) Dip in Cellular Technology (Repairing) - 800/=
(3) Cer in Home Electronics & Cellulars (Ladies & Gents) - 400/=
(4) Cer in Electronics for Kids (Age Limit 10 - 15) - 400/=

ஏப்ரல் 18ன் பின் நடைமுறையில் வரும் புதிய கட்டணங்கள்.......
(1) 2500/= (1000+1000+500) (2)1400/= (1000+400) (3)600/= (4)600/=

வங்கியில் அனுப்புவதாயின் : HNB Bank - 0090651986, Bank of Ceylon - 1070119, Commercial Bank - 8100025135. (Name - Marconi Technical Institute, Branch - Wellawatta, Account Type - Saving Account). தபாற்கந்தோரில் அனுப்புவதாயின் : பணம் கொடுபடவேண்டிய இடம் Wellawatta, பெறுபவரின் பெயர் – Manager,Marconi Technical Institute. பற்றுச் சீட்டையும் உங்கள் முகவரியையும் பதிவுத் தபாலில் உடன் அனுப்பவும்.

MARCONI TECHNICAL INSTITUTE
410,2nd floor,Galle Road,Wellawatta.TP:2 361362

யா/ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்

**பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்தப் பொதுக்கூட்டமும் ஒன்று கூடலும்**

இடம்: கல்லூரிப் பிரதான மண்டபம்
காலம்: 17.04.2005 ஞாயிற்றுக்கிழமை

**பிரதான நிகழ்வுகள்**

- காலை 9 மணி விளையாட்டு நிகழ்வுகள்
- மதியம் 12 மணி மதிய விருந்து
- பி.ப.1.30 மணி பொதுக்கூட்டம்

கல்லூரியின் பவள விழா ஏற்பாடுகள் குறித்த முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

வ.ஆறுமுகம் தலைவர். (43959)(42-14) க.இராசதுரை செயலாளர்.


## கருத்தரங்கும் செயலமர்வும்

வலி.தெற்கு,ஏப்.10

சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் கால கருத்தரங்கும் செயலமர்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(த-152)

## அளவெட்டித் தபாலகத்துக்கு புதிய தபாலதிபர்

அச்சுவேலி,ஏப்.10

காங்கேசன்துறை தபால் நிலைய தபால் அதிபர் எஸ். பவளத்துரை அளவெட்டி தபால் நிலையத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், காங்கேசன்துறை தபால் நிலைய தபால் அதிபராக எஸ்.கோபாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார் என பிராந்திய தபால் அத்தியட்சகர் தெரிவித்தார்.

(எ-11)

## நூலக அபிவிருத்தி குறித்து அதிபர்களுக்குச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.10

இரண்டாவது பொதுக்கல்வித் திட்டத்தின் கீழ் நூலக அபிவிருத்திக்காகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை தொடகம் தொடர்ந்து 3 தினங்களுக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில் அமைந்துள்ள வடமராட்சி ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பாடவிதானச் செயற்பாடுகளை நூலக அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் ஒன்றிணைத்து அதனூடாகக் கல்வி அடைவையும் முகாமைத்துவ மேலாண்மையையும் மேம்பாடடையச் செய்யும் வகையில் கல்வி அமைச்சு, மாகாண கலவித் திணைக்களம் ஆகியவற்றின் வளவாளர்களால் இந்தப் பயிற்சிநெறி நடத்தப்படவுள்ளது.

(எ-202)

## ஆற்றுப்படுத்தும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.10

சுனாமி அனர்த்தத்தினால் வடமராட்சி பிரதேசத்தில் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வசித்துவரும் மக்களை ஆற்றுப்படுத்தும் பணியில் சுகவாழ்வு நிலையத் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்திட்டத்தின் ஒரு கட்டமாக குடத்தனை, மணற்காடு நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுடன் ஆடிப்பாடி அவர்களை மகிழ்விக்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி கிராம மக்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் இந்நிகழ்வில் சிறுவர்கள், பெண்கள் மனம்விட்டுப் பேசிச் சிரித்தும் கலந்துரையாடியும் தமது மன வெளிப்பாடுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

(எ-204)

## செயற்றிட்டக் கூட்டம் ஒத்திவைப்பு

தென்மராட்சி,ஏப்.10

தென்மராட்சி கல்வி வலயத்தினால் இன்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட விருந்த விசேட விஞ்ஞான செயற்றிட்டக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார்.

(எ-117-202)



## வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

மயிலிட்டி தெற்கு, வர்த்தலைவிளான் அந்தியகால சகாய நிதிச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் பொ. சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-202)


புத்தாண்டுச் சிறப்புத் தள்ளுபடி....





**Sony National T.V., VCR** மற்றும் **Amplifier**

(அம்பிலி பயர்) செற்றப் றேடியோக்கள்

**(Sony Kenwood, Pioneer)**

என்பனவும் **FH Model Sony Radio** களும் விற்பனைக்குண்டு.



**SHAN MULTY TRADE CENTRE**

**150, K.K.S. Road, Jaffna.**

T.P.: 021 222 7442.

(43890)(26-14-42)



THE HALO TRUST

## Wanted a Medical Officer (Para Medic)

The Applicant should have the following qualifications:

- Knowledge in Training workers in First Aid Training & casualty handling
- Experience in Accident Emergency & Dealing with Trauma Injuries
- Full- Trained Para Medic Nurse or Doctor
- Physically fit
- Excellent Command in Tamil & English
- Work outside Jaffna District when required
- Should posses a valid driving licence
- Knowledge in MS Office

**Starting Salary Rs.20,000.00**

Please send your CVs within seven Days to:

**The Program Manager**
The HALO Trust,
655 Navalar Road,
Nallur-Jaffna.

(44000)(42-14)



## Wanted A Fleet Manager

An International Non Government Organization dealing with Tsunami Relief work Invites applications for the above mentioned post

The Applicant should have the following qualifications:

- Knowledge in Fleet & Maintenance
- Experience in Stores & Staff maintenance
- Excellent Command in Tamil & English
- Work outside Jaffna District when required
- Should posses a valid driving licence
- Knowledge in MS Office

Salary Negotiable

Please send your CVs within seven Days to:

Advt No **- 2549**
**C/o UTHAYAN, JAFFNA.**

(43999)(42-14)



## சீரிய பணியாற்றி ஓய்வுபெறும் சேவையாளரை வாழ்த்துகிறோம்

## வி. ஐயம்பெருமாள்

(பிரதேச முகாமையாளர், இலங்கை வங்கி, வவுனியா)



**வங்கிச் சேவையில் ஆறைந்து வருடம்**
**வளமான பணியில் நிறைந்திவ் வருடம்**
**தங்க மகன் ஒய்வு பெறும் நாளினில்**
**உளமார வாழ்த்துகின்றோம். ஐய(ா)**
**சித்திரை பத்தே இத்தரையில் நீவிர்**
**சிந்திய பணியில் சீரிய ஓய்வாம் - தினம்**
**செழுமை தந்திடும் மிகுதி நாள்களை**
**வாழ்த்தி நிற்பது வங்கி உறவுகள்!**

உதவிப் பொது முகாமையாளரும், (வட பிராந்தியம்) ஊழியர்களும் இலங்கை வங்கி, வடபிராந்திய காரியாலயம், யாழ்ப்பாணம். (சீ.42193)(33-14-42)


முகாமையாளரும், ஊழியர்களும், இலங்கை வங்கி, வன்னி மாவட்டம், வவுனியா.



உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## முதலாம் ஆண்டு சிரார்த்த தினம்



பூதலத்தில் முகிழ்வு 16.12.1941 | அமரர் | இறைபதத்தில் அமர்வு 23.03.2004

## விஸ்வ பிரம்மஸ்ரீ சோமசுந்தரம் மகாலிங்கம்

(ஆஸ்பத்திரி வீதி, கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை)

ஓராண்டு உருண்டோடி விட்டாலும் உன் நினைவு
மறையாது நம் மனத்திரையில் எந்நாளும்
உயிரோட்டமாய் எமக்கிருந்த உத்தமரே
உம் ஆன்மா சாந்திபெற பத்திரையின் பதம் பணிவோம்.

இன்று (10.04.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆண்டுநிறைவு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பத்திரகாளி கோவிலடி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். (44017)(33-42-14)

துணைவி வியஜலட்சுமியும் குடும்பத்தினரும்.

விநாயகர் துணை

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

திரு.திருமதி சிறீபாஸ்கரன் - சிறீராஜினி
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
செல்வன்

## யக்ஷிகன்



10 04 2005

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (10-04-2005) ஞாயிற்றுக்கிழமை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

யக்ஷிகனை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியமாமா (லண்டன்), சின்னமாமா, சித்தி, பெரியத்தை, மாமா, யகீர்த்தா மச்சாள், சின்னத்தை, மாமா (சுவிஸ்), ஆசை அத்தை, பெரிய சித்தப்பா (லண்டன்), சின்னச்சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர், குடும்ப நண்பர்கள் அனைவரும் சந்நிதி முருகன் அருள் பெற்றுப் பல்கலையும் கற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க வென உளமார வாழ்த்துகின்றனர்.

நி.மு.: எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ். (44041)(2430-16-18)
த.மு.: வல்லை வீதி, சங்கானை.
அன்புடன் வாழ்த்தும்:
சி.சுதா (சின்னச்சித்தப்பா).



J.M.J துணை

# திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி (10.04.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வரும் சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

## 5 ஸ்டார் கிறீம் ஹவுஸ்

என்னும் ஸ்தாபனத்தை இறைவன் துணைகொண்டு ஆரம்பிக்க உள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து எம்மை மகிழ்விக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

**ஜெயக்குமாரன் குடும்பத்தினர்**
(பி.ஜெ.பர்னான்டோ ஸ்தாபனத்தினர்)
131, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி.42222)(42-16-18-30)



# மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடந்த 12 வருடங்களாக நிதி உதவியாளராகவும், நிர்வாக உத்தியோகத்தராகவும் திறமையாக - நேர்த்தியாகக் கடமையாற்றி நாளை திங்கட்கிழமை வேலணைப் பிரதேச சபையில் செயலாளராகப் பதவியேற்கும்

**உயர்திரு.கைலைநாதன் மகேந்திரலிங்கம்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மென்மேலும் சிறப்புற்றுவாழ இறைவனை இறைச்சுகிறோம்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை
தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.
(சி-42228)(30-16-18)
உதவி அரசாங்க அதிபரும்
நலன் புரிச்சங்கத்தினரும்.



உ

சரவணை கிழக்கு பாலக்காடு பதியுறையும்
அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய

# பொங்கல் விழாவும் தீ மிதிப்பு வைபவமும்

*அம்மன் அடியார்களே!*

நாளை [11.04.2005] திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பின்னிரவு 7 மணிக்கு பொங்கல் விழாவும் தீ மிதிப்பு வைபவமும் நடைபெற்று அம்பாள் அழகிய பூந்தண்டிகையில் எழுந்தருளி திருவீதியுலா வருங்காட்சியும் இடம்பெறும்.

அருள்மிகு நாகபூஷணி அம்மன் அடியார்கள் அனைவரும் வருகைதந்து அருள் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

சரவணை கிழக்கு,
வேலணை. (44062)(16-18-30)
அருள்மிகு நாகபூஷணி அம்பாள் ஆலய
இந்து இளைஞர் மன்றம்.



# 50 ஆவது அகவை பூர்த்தியில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



எமது அன்புக்கும் மதிப்புக்குமுரியவரான
அன்புத் தந்தை

**குட்டியர் இராசரத்தினம்**

அவர்களின் இன்றைய பொன்விழா நன்னாளில் சீரோடும் சிறப்போடும் நீடூழி வாழ மனமுவர்ந்து வாழ்த்துகின்றோம்.

இரத்தினம் (மனைவி),
ராஜகுமார், ராதிகா,
ரஜிதா, ராஜீவ், ராம்ஜா (பிள்ளைகள்),
பிரபாதரன் (மருமகன்), ஐங்கரன்,
விஷ்ணு (பேரப்பிள்ளைகள்).

ஊரெழு கிழக்கு,
ஆனந்தகானம்.
(44064)(16-18-30)



# BARATHY - சித்தன்கேணி

இப் பிரதேசத்தில் அதியுயர் பெறுபேறுபெற்ற மாணவர்களை வாழ்த்தி இது போல நீங்களும் சிறந்த பெறுபேறு பெற்றிட...

## O/L DAY CLASS

புதிய பிரிவு ஆரம்பம்: 11.04.2005
திங்கள் காலை 8 மணி.

எமது தனித்துவமும் அதி திறமையும் கொண்ட ஆசிரியர் குழு.

விஞ்ஞானம் - தேவா
கணிதம் - சிவரூபன்
தமிழ் - குகபரன், தமிழ்மாறன்
சமூகக்கல்வி - சுதன்
ஆங்கிலம் - விஜயபாஸ்கர், திலகர்
சமயம் - தரன்
வர்த்தகம் - லோகேஸ்வரன்
(44078)(16-18-30)

Note: மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் வேறுஎந்த கல்வி நிலையத்திலும் கற்பிக்க மாட்டார்கள் அத்துடன், இப் பிரிவிற்கு 90 மாணவர்கள் மட்டுமே அனுமதி.



# பாண் விலை மாற்றம்

இன்று (10.04.2005) தொடக்கம் ஒரு இறாத்தல் பாணின் ஆகக்கூடிய சில்லறை விலை ரூபா 20/= ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதனைச் சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-42225)(30-16-18)
நிர்வாகம்
யாழ். மாவட்ட
பே.உ.சங்கம்.



# BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

O/L Day Class

எமது Super Grade ஆசிரியகுழு
ஆரம்பம்:11.04.2005 திங்கள் காலை 8 மணி



# SUPRA (14)

சித்தன்கேணி
O/L Day Class
நாளை ஆரம்பம் :
11.04.2005
காலை 8 மணி

A/L 2007
புதிய பிரிவு
ஆரம்பம்: 11.04.2005
மாலை 4.30 மணி
நாளைய உதயனில் எமது
சிறப்புமிகு ஆசிரியர் குழாம்.
(சி-42219)(30-16-18)



## நாதன்ஸ் சினிமா
ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
குளிரூட்டப்பட்டது.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு தாவடிமைந்தன் ஜெய்ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த

**குருதேவா**



கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.) (றீல்ஸ்)
(C/41486)(28-11-45)



## நிரைஞ்சனாஸ் சங்கானை

விஜய், நமீசா, ரவிகிருஷ்ணா நடிப்பில்

**சுக்ரன்**

கா.நேரம்:
11.00, 2.45,
6.00, (பு.நே)
(C/41377)(29-16-17)



## ராஜா யாழ்ப்பாணம்

கருணாஸ், ரிச்சா, ரகுவரன் நடித்த

**கையோடுகை** (றீல்ஸ்)

காட்சி நேரம்:
10.30, 2.30,
6.30, 9.30
மட்டும்

14 முதல் கமலஹாசன், மனீஷா நடித்த
மும்பை எக்ஸ்பிரஸ்
இலங்கை, இந்தியா ஒரே தின வெளியீடு.
(C/41381)(29-16-17)



## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

அஜித், த்ரிசா நடித்த

**ஜீ**

தினசரி:- 11.00, 3.00,
7.00 (பு.நே.) (றீல்ஸ்)

புதுவருட வெளியீடாக றஜனி நடித்த
ஆசனப்பதிவுகளுக்கு இன்றுமுதல்
★ நாகம்ஸ்பாட்டா,
10, நவீன சந்தை, சுன்னாகம.
★ யாழ்.பெரின்ற் காடின்,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(முட்டாஸ்கடைச்சந்தி).



**சந்திரமுகி**
(C/41380)(29-16-17)



## மனோகரா யாழ்ப்பாணம்

பார்த்திபன், காவேரி,
மாஸ்டர் அஸ்வின் நடித்த

**கண்ணாடி பூக்கள்** (றீல்ஸ்)

காட்சி நேரம்:
10.30, 2.30.
6.30, 9.30 இற்கு மட்டும்
தனுஷ், ஸ்ரீதேவி,
கருணாஸ் நடித்த **தேவதையைக் கண்டேன்**
(C/41378)(29-16-17)



## லக்ஷ்மி இணுவில்

விஜய் - த்ரீஷா
நடித்த **திருப்பாச்சி** (றீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, (பு.நே.)
(C/40884)(29-16-17)


# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 - 06 - 1946



மறைவு
21 - 03 - 2004

அமரர்

## இரத்தினம் சிவலோகநாதன் (ஆச்சாரி)

ஓராண்டு சென்றாலும்
ஆறாதையா உங்கள் நினைவுகள்

ஐயனார் கோயிலடி,
சுன்னாகம்.
(44071)(16-18-30)
தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா செல்லையா



மாகியப்பிட்டியை பிறப்பிடமாகவும் சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் பாரிஸ் பிரான்ஸை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்லம்மா செல்லையா அவர்கள் 30.03.2005 இல் பாரிஸில் காலமானார்.

அன்னார் செல்லையா (முன்னாள் இ.போ.ச.) (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசு - இராசம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகமணி - அன்னம்மா ஆகியோரின் மருமகளும் உமா (பிரான்ஸ்), இந்திரன் (பிரான்ஸ்), சுரேந்திரன் (சுரேஸ் - சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயும் தர்மரத்தினம் (பிரான்ஸ்), அனிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் லேனிகா, கீர்த்தனன், பௌசிகா, பௌஜிதன், அபிராமி, அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நாகராசா, காலஞ்சென்ற பொன்னையா மற்றும் சிவபாக்கியம், அப்புத்துரை, இராசமலர் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற இரத்தினம், சிவகுரு மற்றும் அழகம்மா, சரஸ்வதி, கைலாயபிள்ளை, காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் கணேசன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2005) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரான்ஸில் **Pere Lachaise (M. Gambetta)** மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*4ஆம் குறுக்குத் தெரு, கச்சாய் வீதி,*
*சாவகச்சேரி.*
(44070)(35-16-18-30)
தகவல்:
செ.சுரேந்திரன் (சுரேஸ்)
0777-715034

## பொன்னர் சின்னையா



அச்சுவேலி வடக்கு, உளியான் அச்சுவேலியை நிரந்தர முகவரியாகவும் துரையப்பா வீதி, சந்நிதி றோட், அச்சுவேலியை தற்காலிக முகவரியாகவும கொண்ட பொன்னர் சின்னையா அவர்கள் நேற்று (09.04.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துரையப்பா வீதி, சந்நிதி றோட்,*
*அச்சுவேலி. T.P.-0779004483* (44069)(35-16-18-30)
தகவல்:
குடும்பத்தினர்.

## கதிரவேலு ஏளாளசிங்கம்



ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஏளாளசிங்கம் 08.04.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தம்பிப்பிள்ளை - இராஜேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் இரஞ்சிதமலரின் அன்புக் கணவரும் ஜெயகீர்த்தி, ஜெயப்பிரகாஸ், ஜெயதீபன் (பிரான்ஸ்), ஜெயரூபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயபிரியங்கன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2005) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஸ்ரீரங்கம்"*
*லோட்டஸ் வீதி,*
*ஆறுகால்மடம்.*
(44072)(35-16-18-30)
தகவல்:
மனைவி.

## வேலுப்பிள்ளை ஜெயச்சந்திரன்



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஜெயச்சந்திரன் அவர்கள் நேற்று (09.04.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2005) ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலியில் நடைபெறும்.

*மதவடி, இராச வீதி,*
*தோப்பு, அச்சுவேலி.* (44076)(35-16-18-30)
தகவல்:
குடும்பத்தினர், உறவினர்.

## செல்லையா திருநாவுக்கரசு


நல்லூர் தெற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர் செல்லையா திருநாவுக்கரசு நேற்று (09.04.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*5, முதலியார் ஒழுங்கை,*
*நல்லூர் தெற்கு,*
*யாழ்ப்பாணம்.*
*T.P.: 222 2467.*
(44077)(35-16-18-30)
தகவல்:
குடும்பத்தினர்.








பரிசுத்த பாப்பரசர் மறைவையொட்டி யாழ். மரியன்னை தேவாலயத்தில் நேற்றுக்காலை இரங்கல் திருப்பலியும் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றன. யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதையும் யாழ். அரச அதிபர், நல்லை ஆதீன முதல்வர், யாழ். [illegible]ராதிபதி, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் போராளிகள், நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், படை அதிகாரிகள், அருட் சகோதரிகள் ஆகியோர் பிரார்த்தனையில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமருக்குத் தெரியாமல் ஜனாதிபதி இந்த விவரங்களைக் கோரிய விடயம் தெரியவந்துள்ளதையடுத்து. பிரதமர் ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு பிரஸ்தாபித்தர் என்று கூறப்படுகின்றது. தனக்குத் தெரியாமலேயே தனது அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விவரங்களைக் கோரியதற்கான காரணத்தைத் தெரிவிக்கும்படி ஜனாதிபதியிடம் பிரதமர் கேட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் நடந்து மறுநாள் பிரதமர் வத்திக்கான் புறப்பட்டுவிட்டார். ஜனாதிபதியும் நேற்றுக்காலை லண்டன் புறப்பட்டுவிட்டார். எதிர்வரும் 18 ஆம் திகதி அவர் நாடு திரும்பிய பின் பிரதமருக்கும் அவருக்கும் இடையிலான முரண்பாடு உச்சக்கட்டத்தை அடையலாம் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை- தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று அதிகாலை லண்டன் புறப்பட்ட ஜனாதிபதி அவர் பயணம் செய்ய இருந்த விமானத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. ஜனாதிபதி புறப்பட முன்னர் பதில் ஜனாதிபதியாக ரத்னசிறி விக்கிரமநாயக்காவையும் கல்வி, உயர்கல்வி பதில் அமைச்சராக தினேஷ் குணவர்த்தனவையும் நியமித்திருந்தார். (ஜ-3)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவிதமான சூழ்நிலையிலும் இலங்கையில் சமாதானம் தொடர்பாக இந்தியா ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது. இலங்கை நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என்று பிரதமர் மன்மோகன் சிங் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார் - என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதுடில்லியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது இருநாடுகளுக்கும் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும் அதன் பின்னர் முன்னெடுக்கப்பட்டுவரும் புனரமைப்பு நடவடிக்கைகள் பற்றியும் இந்தியப் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் கலந்துரையாடினர். இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்புக் குறித்தும் இருவரும் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

தடைப்பட்டுப்போயிருக்கும் சமாதானப் பேச்சுகள் பற்றி கலந்துரையாடியபோது டோக்கியோ பிரகடனத்தின் அடிப்படையில் அரசு எடுக்கும் எந்த முயற்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திறைசேரியின் முன்னாள் செயலாளரும் தூதரக அதிகாரியுமாகிய லால் ஜெயவர்த்தனவின் ஞாபகார்த்தமாக புதுடில்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு வைபவத்தில் கலந்துகொள்வதற்காகவே ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றுள்ளார். அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட, இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் மங்களமுனசிங்க ஆகியோரும் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தனர். (ஜ-3-13)

# இலங்கை - இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா தனது செலவில் பழுதுபார்த்துத் தருவது தொடர்பாகவும் இந்தியா - இலங்கை இடையே இராணுவ ஒத்துழைப்பு உடன்பாடு ஏற்படுத்திக்கொள்வது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

ஆனால், அந்த உத்தேச உடன்பாடு இலங்கைத் தமிழர் நலனுக்கு எதிரானது என்று ஏற்கனவே, எதிர்ப்புத் தெரிவித்திருந்தார் வைகோ. இந்த உடன்பாடு குறித்து, மொறீஷியஸ் பயணத்தின்போது பிரதமரிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது அதுபற்றிய பேச்சு இன்னும் முற்றுப்பெறவில்லை என்று மட்டுமே பதிலளித்தார். அதுபற்றி விரிவாகப் பேசவில்லை.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை பிரதமரைச் சந்தித்த வைகோ, இது குறித்து நீண்டநேரம் பேசியுள்ளார். இலங்கையுடன் இந்தியா இராணுவ உடன்பாடு வைத்துக்கொள்ளாவிட்டாலோ பலாலி விமானத் தளத்தைச் சீரமைத் துக் கொடுக்காவிட்டாலோ சீனாவும் பாகிஸ்தானும் இலங்கையை தங்கள் பக்கம் வைத்துக்கொண்டு இந்தியாவுக்கு எதிராகச் செயற்படும் நிலை உருவாகும் என அதிகாரிகள் தரப்பில் கூறப்படும் வாதங்கள் நியாயமற்றவை என்று வைகோ சுட்டிக்காட்டியதாகத் தெரிகின்றது. பாகிஸ்தானும் சீனாவும் இந்தியாவ[illegible] எல்லையிலேயே இருக்கும்போது குட்டித் தீவான இலங்கையில் இருந்து அவர்கள் இந்தியாவுக்கு எந்த ஆபத்தை ஏற்படுத்திவிட முடியும் என்று கேட்டார் வைகோ.

இலங்கையுடன் இராணுவ ஒத்துழைப்பு உடன்பாடு, இலங்கைத் தமிழர்களின் நலனுக்கு வேட்டுவைப்பதாக அமைந்துவிடும். இலங்கைத் தமிழர்கள் மட்டுமன்றி, தமிழகத்தைச் சேர்ந்த தமிழர்களும் மத்திய அரசின் அப்படிப்பட்ட எந்த நடவடிக்கையையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று வைகோ தனது கவலையை வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

உத்தேச இராணுவ உடன்பாடு நிரந்தரமாகக் கிடப்பிலே போடப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது. இது குறித்து வைகோவிடம் கேட்டபோது, இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசியதாகக் கூறினார். ஆனால், விவரங்களைத் தெரிவிக்க மறுத்துவிட்டார். சோனியாவை அவரது இல்லத்தில் சந்தித்து 30 நிமிடம் பேசினார். அவரிடமும் நதிகள் இணைப்புத் திட்டம் குறித்து வலியுறுத்தினார். அப்போது தமிழக அரசியல் நிலைவரம் குறித்தும் இருவரும் பேசியதாகத் தெரிகின்றது. இது மரியாதை நிமித்தமான சந்திப்பு எனத் தெரிவித்தார் வைகோ. (ஜ-3)

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலை அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் கலந்து கொண்னர்.

பூநகரில் விடுதலைப் புலிகளின் காவலரண் தாக்கப்பட்டு ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம், கடற்படை படகு மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஆகியன குறித்து இருவரும் கலந்துரையாடினர். (ஜ-3-151)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தும், கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம் முன்றிலிருந்தும் இருமுனைகளில் ஆரம்பிக்கும் பேரணி, கிளிநொச்சி அரச செயலகத்தை சென்றடைந்து அங்கு கண்டனக் கூட்டம் நடைபெற்று மனுக்களும் கையளிக்கப்படவுள்ளன. இக்கண்டனப் பேரணிக்கான அழைப்பினை கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ளது. (ஜ-3-13)


IIS

கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

16-04-2005
18-04-2005 } பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வார இறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத்தருகிறோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

யாழ். நகரில் O/L DAY CLASS இற்கு நிகரில்லாத் தனித்துவமான ஆசிரியர் குழுவைக் கொண்ட ஒரே நிறுவனம்

வித்னா கல்வி நிறுவனம்
பிரிவு - 2
O/L DAY CLASS
ஆரம்பம்: 11.04.2005 (8.30-2.30)

★ பிரிவு 2இல் சொற்ப மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
★ கணித, விஞ்ஞான விசேட வகுப்புகள் நடைபெறும்.
★ சென்ற ஆண்டுபோல் இம்முறையும் பிரிவு 6 மட்டுமே.
★ தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்துதரப்படும். (சி-42160)(18-15-30)

N.S.A.
மானிப்பாய் வீதி, உடுவில்
O/L DAY CLASS
ஆரம்பம்:11.04.2005 திங்கள் 7 a.m.
Tam.- S. சுமணன — Sci. - V.குருபரன
Rel -M.ஜேந்திரன் — S.மதி
Eng. - A.நிஷாந்தன — Mat. - பிரபல ஆசிரியா
Soc. / Geo. M.பார்த்தீபன் — Com. - T.சுரேஸ்
SPOKEN ENGLISH WITH GRAMMER
BY: A.நிஷாந்தன்
ஆரம்பம்: 13.04.2005 Wed. 4 a.m.
A/L 2007, 2006
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள் நடைபெறுகின்றன
(44044)(30-18-15) - நிர்வாகி.

யாழ். மாவட்டத்தில் நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையுடன்...
O/L DAY CLASS
பிரிவு - 1 ஆரம்பம்
11.04.2005
(திங்கள்: - 8.30 - 2.30)
அனுமதிக்கு முந்துங்கள்
மாதாந்தப் பரீட்சை.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
(43967)(38-11-45)

கடந்த கால பெறுபேறு சான்றாக
O/L DAY CLASS
தனித்துவமான ஆசிரியர்கள் குழுவுடன்
O/L PAPER CLASS
கணிதம்-திரு. உமாகரன்
Note: இம்முறை இரண்டு பிரிவு மட்டும்
பிரிவு – 1 11.04.2005
திங்கள் 8. 30 – 2. 30 மணி
திசாய் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

LOGIC
A/L 2007
Sat. - 10 a.m.
Sun. - 11 a.m.
BY: P.கமல்
BRIGHTMAN
யாழ்ப்பாணம் (44075)

புதுவருடத்தினை முன்னிட்டு அதிரடி விலைக் கழிவில்
10,500/= 13,500/=
மொபிரெல், டயலொக் மேசைத் தொலைபேசிகள் இணைப்புடன் எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.
◇ உத்தரவாதம் உண்டு.
◇ உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
தொடர்புகளுக்கு :- பவர் செலூலர் டிரேடிங்கம்பனி.
Office :- 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி.
Shop :- 205/01, கஸ்தூரியார் வீதி, யாழ்.
Tel. / Fax :- 021 - 222 - 7070
Mobile :- 0712 - 399220
0714 - 182500
0714 - 182501
(★ இச் சலுகை கையிருப்பு முடியும்வரை மட்டுமே)


## மரண அறிவித்தல்

### பரமேஸ்வரன் புனிதசீலி

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரன் புனிதசீலி (ராணி) அவர்கள் நேற்று (09.04.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரனின் (முன்னாள் அதிபர் - செங்குந்த இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும் லவனின் (மாணவன்) தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

செங்குந்தா வீதி,
கல்வியங்காடு. T.P.0776098729 (44079)(35-15-18-30)

தகவல்:
லவன் (மகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# "2005 Mahagastota Hill Climb"

# மோட்டார் வாகனப் போட்டி

இம்மாதம் 9, 10 ஆகிய திகதிகளில் நுவரெலியாவில் இடம்பெறவுள்ள "2005 Mahagastota Hill Climb" கார் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டப்போட்டிக்கு இலங்கைக் காப்புறுதி நிறுவனம் இணை அனுசரணை வழங்குகின்றது.

"2005 Mahagastota Hill Climb" மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டப்போட்டியானது 1938ஆம் ஆண்டில் இருந்து வருடந்தோறும் நடத்தப்படுகின்றது. இப்போட்டி நிகழ்ச்சியை சிலோன் மோட்டர்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்துகின்றது. இது சம்பிரதாயபூர்வமாக ஒவ்வொரு ஏப்ரல் மாதமும் நடத்தப்படுகின்றது.

இந்தப் போட்டியை நடத்தும் சிலோன் மோட்டர்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப், உலகளாவிய ரீதியில் மோட்டார் வாகனப் போட்டியைக் கட்டுப்படுத்தும் FTA அமைப்பின் அங்கத்துவ நிறுவனமாகும். இதனால் இந்தப்போட்டி சர்வதேசம் தரம் வாய்ந்ததாய் உள்ளது.

இப்போட்டி நிகழ்ச்சிக்கு இலங்கைக் காப்புறுதி நிறுவனம் வழங்கும் இணை அனுசரணையானது நிறுவனத்திற்கு நல்லதொரு விளம்பரமாய் அமையும். இப்போட்டி நிகழ்ச்சியின்போது இலங்கைக் காப்புறுதி நிறுவனத்தின் 'ஸ்டிக்கர்கள்' போட்டியில் பங்கு மற்றும் கார்களில் ஒட்டப்பட்டிருக்கும். அதேபோல் போட்டியை உள்ளடக்கும் பகுதிகளில் நிறுவனத்தின் கொடிகள் பறக்க விடப்படும்.

மார்ச் மாதம் 12ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி வரை வானொலியில் இதுபற்றி விளம்பரப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இதனை விளம்பரப்படுத்த செய்திப் பத்திரிகைகளும் நிறுவனத்துடன் இணைந்துள்ளன. இது நிறுவனத்திற்கும், நிறுவனம் அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ள Formula - Plus வாகனக்காப்புறுதிக்கும் பெரிய விளம்பரமாய் அமையும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

Sri Lanka Insurance Corporation Ltd. கடந்த நாற்பது வருடங்களாக வாகனங்களுக்குச் சிறந்த காப்புறுதிச் சேவையாற்றி வருகின்றது. இது வழங்கிவரும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையின் காரணமாக வாகன உரிமையாளர்களின் நம்பிக்கையை அது வென்றுள்ளது.

இது வழங்கிவரும் வாகனக் காப்புறுதிச் சேவையின் தரத்தை மேலும் உயர்த்தும் வண்ணம் Sri Lanka Insurance Corporation Ltd. நிறுவனம் "Formula - Plus" என்ற புதிய வாகனக்காப்புறுதிக் கொள்கையொன்றை அறிமுகம் செய்துள்ளது.

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் புதிய காப்புறுதிக்கொள்கை வேறெந்த வாகனக்காப்புறுதியும் கொண்டிராத அதிக நன்மைகளைக் கொண்டுள்ளது. இதனால் Sri Lanka Insurance corporation Ltd. நிறுவனத்தில் இந்தக் காப்புறுதியைச் செய்யும் அனைத்து வாகனங்களும் உயர் பாதுகாப்பைப் பெறும்.

இந்த வாகனப்போட்டி நிகழ்ச்சிக்கு நிறுவனம் வழங்கும் இணை அனுசரணை மூலம் Formula - Plus காப்புறுதி மேலும் பிரபல்யமடையும். தமது வாடிக்கையாளர்கள் இக்காப்புறுதி பற்றி மேலும் அறிந்து கொள்ள இது நல்ல தருணமாகும் என நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

FORMULA PLUS
வாகனக் காப்புறுதி







HAYLEYS Consumer
25, ஃபொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு 10. தொலைபேசி: 2688965-9 ஃபக்ஸ்: 2688971
PHILIPS
உங்கள் உலகுக்கு ஒளியூட்டும்
யாழ் குடாநாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள்:
கரன் எலக்ரிக்கல்ஸ்
760A, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-459004



சுப்பிரிவிக்கி
SUPIRIVICKY
Ayurvedic Herbal Toothpaste
மூலிகை
ஆயுர்வேத
பற்பசை
SUMUDU
சுமுது
வாயில் உண்டாகும்
தொற்று நோய்களை
கட்டுப்படுத்தும்.
ஆயுர்வேத மூலிகை எண்ணெய் அடங்கிய பற்பசை
சித்தாலேப
குடும்பத்தின் தயாரிப்பு
வடபுல விநியோகஸ்தர்கள் :-
வனிக்கா மெடிகல்ஸ்
இல. 85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 2226291, பக்ஸ் :- 021 2222445.




ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் நீடித்த பாவனைக்கு
TOSHIBA
கிங் பெரட்ஸ்
கொடிகாமம் வீதி, நெல்லியடி
தொ.பே. : 077 - 6679629
Sierra
இலக்ரோனிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
இல. 15, டிக்மன் வீதி, கொழும்பு - 04,
தொ.பே. : 2553631-2, பக்ஸ் : 2507169
ஈ-மெயில் : selsales@sierra.lk




THE VANNI AGROTECHS
வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தின்
புதிய அறிமுகம் D 2001
கூட்டு அறுவடைப்பொறி
அறுவடை செய்யும் போதே,
நெல்லைப் பிரித்தெடுக்குந் தொழில்நுட்பம்
வைக்கோலைத் தூளாக்கும் பொறிமுறை
தூளாக்கப்பட்ட வைக்கோல் பசளையாகி மண்ணை வளப்படுத்தும் வாய்ப்பு
நீர்ப்பாங்கான நிலத்திலும் அறுவடை
வீழ்ந்த அரிவியையும் அறுவடை செய்யும் வல்லமை
இலகுவான தொழில்நுட்பம்
காலத்தின் தேவைக்கு உகந்தது.
சொந்தமாக்க விரும்புகின்றீர்களா?
உடன் நாடவேண்டிய இடம் :
வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்
கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.
VANNI D200
தொலைபேசி: 021 228 5745
நேரோவம்(Fax): 021 228 5746
உழைப்பால் உயர்ந்திட உறுதுணை
வன்னி வேளாண்ன தொழில்நுட்ப நிறுவனம்

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

10.04.2005

# சமாதான முயற்சிகள் ஊக்கம் பெற அமெரிக்காவின் போக்கு மாற வேண்டும்!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கடந்த வாரம் முக்கிய நிகழ்வு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க காங்கிரஸின் எதிர்க்கட்சியின் உறுப்பினரான டெனி கே.டேவிஸ் மற்றும் அவரது பணிப்பாளர் டெனி கென்ட்ரன் ஆகியோர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் காலடி வைத்ததன் மூலம் முக்கிய பதிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது,

விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் பிரகடனம் செய்தன. அதன் மூலம் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் அந்த நாடுகளில் முடக்கப்பட்டன.

ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்தது முதல், இலங்கை அரசுடன் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றைச் செய்து, யுத்தத்தில் அல்ல, சமாதானத்திலேயே நாம் நாட்டம் கொண்டவர்கள் என விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூறியும், அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் தமது நிலைப்பாட்டில் இருந்து இன்னமும் மாறவில்லை.

இந்த நாடுகளில் இயங்கும் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதி நிதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்கிறார்கள். அங்கு தமது அலுவலகங்களைத் திறந்து மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். ஆனால், தூதரகங்களின் அதிகாரிகளோ, ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளோ அல்லது அரச மட்டத்திலான எவருமே விடுதலைப் புலிகளின் பக்கம் திரும்பிப்பார்ப்பதேயில்லை.

பிரிட்டனைப் பொறுத்தவரையில் சில மாற்றங்கள் காணப்பட்டபோதும், அமெரிக்க நாட்டு அதிகாரிகளின் போக்கில் இன்னமும் மாற்றத்தையும் காணவில்லை.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றும் உயர் மட்ட அதிகாரிகள் படையெடுத்து யாழ்ப்பாணத்துக்கு வந்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளில் தமது நிலைப்பாட்டை வெளியிட்டு வருகின்றனர். பொது மக்கள் பிரதிநிதிகளை, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துத் தமிழரின் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடி வருகின்றனர். ஆனால் இவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் மறந்தும் கால் பதித்து விடுவதேயில்லை. அதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பு என்று கூறி வன்னிப்பக்கமே செல்லாது அமெரிக்க அதிகாரிகள் அந்தப் பிரதேச மக்களைப் புறக்கணித்து வந்தனர்; வருகின்றனர்.

இந் நிலையில் அமெரிக்கக் கட்சிகளின் எதிர்க்கட்சி உறுப்பினரின் வன்னி விஜயம் பெரும் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான பில் கிளின்ரனின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவரும் அவரது சகாவுமான டெனி கே.டேவிஸ் கடந்த 2ஆம் திகதி கொழும்பு வந்து அங்கிருந்து ஏ-9 வீதிவழியே - தரைமார்க்கமாக - கிளிநொச்சி வந்து சேர்ந்தார்.

அவருக்கு அங்கு குதூகலமான வரவேற்பு அளித்த விடுதலைப் புலிகள், தமிழீழ காவல்துறையின் பாதுகாப்புடன் தமது பிரதேசத்தைச் சுற்றிக்காட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் காவல்த்துறைப் பொறுப்பாளரும், அரசியல் உயர்மட்டக்குழு உறுப்பினருமான பா.நடேசனை முதலில் சந்தித்தார்.

இருவருக்கும் இடையில் ஒன்றரை மணி நேரம் சந்திப்பு இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பம், அதன் வளர்ச்சி, தற்போதைய நிலை ஆகியன குறித்து விளக்கமாக- விலாவாரியாக - நடேசன் அவருக்கு எடுத்துக் கூறினார்.

"ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை முதலில் அதிலிருந்து சமாதானத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தினோம்.

"ஐ.தே.கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் செய்து கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாகக் கடைப்பிடித்து வருகின்றோம்" என்றும்நடேசன் எடுத்துக் கூறினார்.

கிழக்கில் ஆயுதக் குழுக்களுடன் படையினர் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தும் நிழல் யுத்தம் போர் நிறுத்த உடன்படிக்கைக்குச் சவாலாக இருந்து வருகின்றது என நடேசன் சுட்டிக்காட்டினார்.

நோர்வேயின் அனுசரணையுடன் ஆறு சுற்றுப்பேச்சுக்களை நடத்தியுள்ளோம். தொடர்ந்தும் சமாதானச் செயற்பாடுகளில் இணைந்து நிற்கின்றோம். இந்த வகையில் சமாதானச் செயற்பாடுகளில் எமது அர்ப்பணிப்பின் பயன் கிட்ட வேண்டுமாயின் அமெரிக்கா எமது அமைப்பின் மீது விதித்துள்ள தடையை நீக்க வேண்டும். அதன் மூலம் சமாதானச் செயற்பாடுகளுக்கு ஊக்கம் அளிக்க முடியும் என்று நடேசன் எடுத்து விளக்கினார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுப்பேன் என்று உறுதி கூறிய காங்கிரஸ் உறுப்பினர், தமிழ்மக்களின் நிலைமை தொடர்பாக விளக்குவதற்காகச் செய்தியாளர் மாநாடு ஒன்றை அமெரிக்காவில் நடத்தவிருக்கிறேன் என்று தெரிவித்தார்.

தமது கட்சி மட்டத்திலும் கறுப்பு இன காங்கிரஸ் உறுப்பினர்கள் சபை மட்டத்திலும் இந்த விடயங்களை எடுத்து விளக்கப்போவதாகவும் அவர் நடேசனிடம் தெரிவித்தார்.

நடேசனுடனான சந்திப்பையடுத்து அவர் முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தார். அதன்பின் முல்லைத்தீவு செயலகத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், அரச அதிகாரிகளையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பகுதியில் மக்களின் மீள்குடியமர்வுப் பணிக்கு அரசின் உதவிகள் கிட்டவில்லை என்றும் -

விடுதலைப் புலிகளின் தலைமையில் அரச அதிகாரிகள், அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கொண்ட செயலணியே மீட்புப்பணிகள் மற்றும் மீள்குடியமர்வுப் பணிகளை முன்னெடுத்துள்ளது என்றும்.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமெரிக்கப் பிரதிநிதியிடம் எடுத்துக் கூறினார்.

புதுக்குடியிருப்பு காந்தரூபன் அறிவுச்சோலையில் சிறுவர்கள் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றனர் எனப் பார்வையிட்ட அவர், சிறார்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார்.

விசுவமடுவில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்துக்கு விஜயம் செய்த அவர் அங்கு மாவீரர்களின் கல்லறைகளைப் பார்வையிட்டார்.

அன்று மாலை அவர் விடுதலைப் புலிகளின் பல்வேறு கட்டமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்தார்.

தமிழீழ காவல்த்றுறை, திட்டமிடல் செயலகம், சுகாதாரத்துறை , மருத்துவத்துறை ஆகியவற்றின் பொறுப்பாளர்களைச் சந்தித்த அவர் அக்கட்டமைப்புக்களின் செயற்பாடுகளைக் கேட்டறிந்தார்.



## காங்கிரஸ் உறுப்பினரின் வருகை ஒரு திருப்பத்தின் அடையாளமா?

விடுதலைப் புலிகள் அமைப்பு அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டிருப்பதை அடுத்து தடைசெய்யப்பட்ட அமைப்பு விடயத்தில் கைக்கொள்ளும் நடைமுறைகளை தூதரக அதிகாரிகளும் வாஷிங்ரனில் உள்ள ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளும் முறைப்படி கடைப்பிடித்து வரும் நிலையில் அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினர் ஒருவர் விடுதலைப் புலிகளின் பகுதிக்கு வந்தது மட்டுமன்றி விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடிச் சென்றமை, அமெரிக்கக் கொள்கையில் மாற்றம் ஏற்படுகின்றதா என்ற ஊகத்தைப் பரவலாக உருவாக்கிவிட்டிருக்கிறது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சுக்கோ, கொழும்பில் உள்ள தூதரகத்துக்கோ தெரியாமல், காங்கிரஸ் உறுப்பினர் இரகசியமாக வன்னிக்கு வந்தாரா? அல்லது இந்த விஜயத்துக்கு மறைமுக ஒப்புதல் இருந்ததா?

இந்தக் கேள்விகள் இனிமேல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தலாம்.

எதுவாக இருந்தாலும் அமெரிக்க அதிகாரி ஒருவர் வன்னிக்கு வந்து புலிகளுடன் மனம்திறந்துபேசியமை புலிகளுக்கு ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளது என்பது உண்மை.

**குகா**



கொக்கி போடும் எஸ்.பியும் தப்பி ஓட முயலும் அம்மையாரும்....

# நெய்தல் நில மக்களை அவர்தம் நிலத்தில் இருந்து பிடுங்குவது நியாயமா?

ஆழிப்பேரலை அனர்த்தம் நேர்ந்து மூன்று மாதங்கள் கடந்து விட்டன. பத்திரிகைகளில் நாளாந்தம் அது தொடர்பான செய்திகள் வெளிவந்த வண்ணமே உள்ளன. வெளிநாட்டு அரச பிரதிநிதிகள் வருகிறார்கள்; சேதங்களைப் பார்வையிடுகிறார்கள்; பாதிக்கப்பட்ட மக்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் சந்திக்கிறார்கள்; செய்தியாளர் மாநாடுகளைக் கூட்டியோ, பத்திரிகை அறிக்கைகளை விடுத்தோ தமது கருத்துக்களை வெளியிடுகிறார்கள்; நம்பிக்கைகளை உருவாக்கி விட்டுச் சென்றுவிடுகிறார்கள். அதுபோலவே வெளிநாட்டு அரசு சாரா அமைப்புக்களும்.

தமிழர் பிரதேசங்களில் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் உரிய அளவில் சென்றடையவில்லை. "தமது வாழ்க்கையை மீளமைத்துத் தரவில்லை" என்ற பாதிக்கப்பட்ட மக்களின் குரலை அநேகமாக ஒவ்வொரு நாளும் ஊடகங்கள் பேசுகின்றன – எழுதுகின்றன அதற்காக எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லையென்றோ, எத்தகைய கட்டுமானங்களும் செய்யப்படவில்லையென்றோ அர்த்தமல்ல. எனினும், பாதிப்பின் கடுமைக்கேற்ப, சடுதியாக நேர்ந்த கட்டுமானச் சிதைவுக்கேற்ப, பேரவலத்திற்கேற்ப உதவிகள் உரியவேகத்தில் உரிய அளவில் வந்து சேரவில்லை. அதைவிட, மக்களின் மனங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் பயத்தை – பீதியை – அகற்றுவதென்பது மிக முக்கியமானது. தன்னுடைய கணவனை, மனைவியை, பிள்ளைகளை, பெற்றோரை என உறவுகளைக் கடல் அள்ளிக் கொண்டு போன திகிலூட்டும் காட்சிகளைக் கண்டவர்கள்; சாவின் விளிம்புவரை சென்று வந்தவர்கள் மனதிலிருந்து அச்சத்தை, விரக்தியை அகற்றுவதென்பது அத்துணை இலகுவானதல்ல.

அதை விட, அடுத்தடுத்துத் திகிலூட்டும் வகையில் வந்து போகும் வதந்திகளும், சம்பவங்களும் கூட அவர்களைச் சதா உலுப்பிக் கொண்டேயுள்ளன. அண்மையில் வெளியான சுனாமி அச்சம் இரண்டு, மூன்று தினங்களுக்கு மக்களை ஆட்டிப் படைத்தது. மேலும் மேலும் இந்தோனேசியத் தீவுகளில் ஏற்படும் நில அதிர்வுகள் இங்குள்ள மக்களின் மனங்களில் அச்சத்தை விதைத்த வண்ணமே உள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வாழிடங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர். இந்த அகற்றல் கூட அவர்களது மனதைக் காயப்படுத்தி இருக்கிறது. சொந்த மண்ணில்– சொந்த வாழிடத்தில் – தான் விளையாடிய முற்றத்தில் இருந்து பிடுங்கப்பட்ட வாழ்வு, மனதைப் பாதிக்கும் சங்கதியே. அதிலும், தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமது வாழிடங்களில் இருந்து அகற்றப்படும் அதே வேளை, அதே வாழிடங்கள் படையினரின் கூடாரங்களாவது அவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் விடயமாகும். ஏற்கனவே, கணிசமான பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இதனால், ஆயிரக்கணக்கானோர் தமது வீடுகளையும், பயிர்செய்த நிலங்களையும், தொழில் செய்த இடங்களையும் இழந்துள்ளனர். இந்நிலையில் சுனாமி காரணமாக ஏற்பட்டுள்ள அச்சம் கருதி நூறு மீற்றர் பிரதேசத்துக்குள் வாழும் மக்களை அப்புறப்படுத்துவது பற்றிச் சிந்திக்கப்படுகிறது.

ஆழி அலைச் 'சுனாமியை' இரண்டாவது சுனாமி என்று தமிழ்த் தலைமை வர்ணிப்பது போலவே, சுனாமியால் மக்கள் வாழக்கூடாது எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளும் இன்னொரு 'பாதுகாப்பு வலயங்களாகவே' பார்க்கப்படுகிறது.

கடலும் கடலுடன் இணைந்த நிலமும் சார்ந்தே நெய்தல் மக்களின் வாழ்க்கை அமைந்தது. கடலோரம் வசிக்கும், கடற்றொழிலை நம்பி வாழும் மக்கள் கடலை நீங்கி, இன்னோர் இடத்தில் வசிப்பதென்பது மனரீதியாகவோ, புவியியல் ரீதியாகவோ, தொழில் ரீதியாகவோ பொருத்தமானதல்ல.


ஏனெனில், 'சுனாமி' அலைகள் தோன்றுவதும், தோன்றும் அலைகள் நமது தேசத்தைத் தாக்குவதும் எப்போது நடக்கும் என யாரும் இலகுவில் ஆருடம் கூற முடியாது. சில வேளை, பலநூறு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் இது ஏற்படலாம். அவ்வாறில்லாமல், மிக விரைவிலேனும் சுனாமி அலைகள் தோன்றி அவை இலங்கைத் தீவைத் தாக்கும் எனில், அதன் தாக்க வேகத்தைப் பொறுத்தே 'நூறு மீற்றர்' என்ற இலக்கு பொருத்தமாயிருக்கும். வேகத்தோடு 30–40 அடி உயரத்துக்கு அலைகள் எழுமானால் அதனால் பாதிக்கப்படும் எல்லை என்பது பெரிதாகவே இருக்கும்.

## யாரோடு நோவோம்...?

ஆக 'நூறு மீற்றர்' என்பது இப்போதைய பாதிப்புக்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் ஒரு முன்னெச்சரிக்கைப் பிரதேசமே. எனினும், இது சரியானதல்ல. கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களில் மிக நெருக்கமான கடற்கரைக் குடியிருப்புக்களை அப்புறப்படுத்தி நிலம் வழங்குவதென்பது பெரும் பிரச்சினையாக உணரப்படுகிறது. அவ்வாறுதான் எல்லாப் பகுதிகளிலும். கரையோரங்களில் பாரிய அலைகளை எதிர்கொள்ளும் தடைகளை ஏற்படுத்துவதையோ, அலைத் தாக்கத்துக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் முன்னெச்சரிக்கையான கட்டுமானங்களைச் செய்வதையோ வரவேற்கலாம். சுனாமியின் பாதிப்புக்கள் உணரப்படும் ஜப்பான் முதலான நாடுகளின் கட்டுமானங்களை நமது தேசத்துக்குப் பொருத்தமான முறையில் கருத்திலெடுக்கலாம். அதை விடுத்து, மக்களை விலக்கி, வேரோடு மக்கள் வாழ்வில் நிம்மதியையோ நாட்டில் அபிவிருத்தியையோ கொண்டும் வரும் என்று எதிர்பார்க்க முடியாது.



ஏகலைவன்



## உலகிலேயே உயரமான கட்டடம்

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் நிர்மாணிக்கப்பட்டுவரும் உலகிலேயே அதி உயர்ந்த கட்டடம் என்ற பெருமையை பெறவுள்ள இக் கட்டடம் 2008 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்படவுள்ளது. 800மீற்றர் உயரம் கொண்ட (2,640அடி) இக்கட்டடம் 160 மாடிகளைக் கொண்டுள்ளது.



## இந்திய நடனம்

இந்திய நடனங்கள் உலகப் பிரசித்திபெற்றவை. இந்திய நடனக் குழுவொன்று வெளிப்படுத்தும் புதுமையான நடனத் தோற்றமே இது. பம்பாயில் நடந்த நடனக் கண்காட்சி ஒன்றின்போது பிடிக்கப்பட்ட படம் இது.

## அபூர்வ பூனைகள்



*பூனை பலரது செல்லப்பிராணி. படத்தில் காணப்படுபவை உலகிலேயே காணப்படும் அபூர்வ பூனைகளாகும். உலகின் பல தரப்பட்ட பூனைகளின் கண்காட்சி ஒன்று அண்மையில் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் இடம் பெற்றது. இக் கண்காட்சியில் காட்சிக்கு நிறுத்தப்பட்டவற்றில் உடலில் உரோமங்களற்றவையும் அகன்ற காதுகளையும் உடைய இவ்விரு அபூர்வ பூனைகளும் பார்வையாளர்களைக் கவர்ந்தன.*

## 80 அடி உயரமான மரத்தில் 8அடி அகலமான கூடு



சுமார் 80 அடி உயரமான மரத்தில் பாரிய தடிகளால் அமைக்கப்பட்டுள்ள இராட்சதப்பறவையின் கூடொன்று தென் பகுதியிலுள்ள கொஸ்கொடப் பிரதேசத்தில் காணப்படுகிறது. பறக்கும் போது சுமார் 8 அடி அகலம் கொண்டதாகக் காணப்படும் இராட்சதப் பறவையொன்று இந்தக் கூட்டுக்கு வந்து செல்வதைத் தாம் கண்ணுற்றதாகத் தெரிவித்துள்ளனர் அப்பிரதேச வாசிகள். கூட்டினுள் இருந்து வெளிவரும் ஓசைகள் கூட்டினுள் அப்பறவையின் குஞ்சுகள் இருப்பதை உணர்த்துகின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அந்த மரத்தின் அடிப்பாகத்தில் நிலத்தில் காணப்படும் மீன்களின் எச்சங்களில் இருந்து பாரிய மீன்கள் குஞ்சுகளுக்கு உணவாக வழங்கப்படுவதாகத் தெரிகிறது எனவும், அப்பறவை பறக்கும் போது பெரும் ஒலியொன்று கேட்பதாகவும் பொது மக்களுக்கு அப்பறவையால் எதுவித இடைஞ்சல்களும் ஏற்படவில்லை எனவும் கூறப்படுகிறது. எனினும், காகத்தைக் கண்டு மாத்திரம் அப்பறவை அஞ்சுவதாகத் தெரிகிறது எனவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்னர் பேருவளை கடற்கரையில் குழந்தையொன்றைக் கவர்ந்து செல்ல முயன்ற இராட்சதக் கழுகின் இனமாக அது இருக்கக்கூடும் எனவும் கருதப்படுகிறது.

# சிங்கப்பூரை கொழும்பு நகர்போல மாற்ற அன்று கனவு கண்ட லீகுவான் யூ...



அன்றைய கொழும்பு நகரம்

இன்றைய சிங்கப்பூர்

லீகுவான் யூ

உலகத்தின் நெற்றித் திலகம் என சிங்கப்பூரைக் குறிப்பிடும் அளவுக்கு அந்நாட்டை குறுகியதொரு கால இடைவெளியில் துரித அபிவிருத்தி அடைய வைத்ததன் மூலம் உலக அரசியல் தலைவர்களில் மிகத் திறமைசாலி எனத் தம்மை நிரூபித்துக் கொண்டவர் சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீகுவான் யூ.

சாதாரண சிறியதொரு மீன்பிடித் துறை முகமாயிருந்த சிங்கப்பூரை உலகின் வர்த்தகக் கேந்திர ஸ்தானமாகவும், சுத்தமும், அழகும் மிக்க தனவந்த நகரமுமாக்கிய பெருமை அவரையே சேரும். சிங்கப்பூரை நிர்மாணித்த சிற்பி என்ற புகழுக்குரிய அவர், அவ்விதம் சிங்கப்பூரை நவீன நகரமாக ஆக்கும் தமது திட்டம் இலங்கையில் முதன் முறையாகக் கழித்த விடுமுறை நாள்களின் போதே தமது மனதில் உருவானதெனக் கூறியுள்ளார்.

அவர் எழுதி வெளிவந்த 'எனது நினைவுக்குறிப்புக்கள்' என்ற 777 பக்கங்கள் கொண்ட சுயசரிதை நூலின் 460 ஆவது பக்கத்திலிருந்து இலங்கை பற்றிய குறிப்புகள் ஆரம்பமாகின்றன. அந்த நூலில் குறிப்பிடப்பட்டதன் படி முன்னாள் பிரதமர் லீகுவான் யூ முதன்முறையாக இந்த நாட்டுக்கு 1956 ஆம் ஆண்டில் விஜயம் செய்யும் வாய்ப்புக் கிட்டியதாகக் குறிப்பிட்டுள்ளார். 1956 இல் அபிவிருத்தியடையாத நிலையிலிருந்த சிங்கப்பூரை இலங்கையின் தலைநகர் கொழும்பைப் போன்ற விதத்தில் அபிவிருத்திச் செய்தாக வேண்டுமென்ற எண்ணம் லீகுவான் யூவின் மனத்தில் உருவாகியது. அவ்விதம் லீகுவான் யூவின் கனவுகளுக்கு முன்னோடியாக அமைந்த எமது நாடோ, அபிவிருத்தி முன்னேற்றம் குறித்த அக்கறையின்றி அபிவிருத்திக்குப் பதிலாக பின்னடைவை நோக்கிச் சென்ற தோடு, அரசியல் காரணங்களில் ஒருவரோடொருவர் கருத்து முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டோம். நாம் பயணித்த அரசியல் என்ற கப்பல் ஆழ்கடலில் மூழ்கும்வரை, அக் கப்பலுக்குள்ளிருந்தவாறே போட்டிபோட்டு மோதல்களில் ஈடுபட்டோம். இன, மொழி மற்றும் மத ரீதியிலான பேதங்களை எமக்கிடையே வளர்த்துக் கொண்டோம். ஆனால் இந்த இடைப்பட்ட காலத்தில் சிங்கப்பூர் எவ்வாறு வியத்தகு முறையில் பல்துறை வளர்ச்சி கண்டது என்பதற்கு 1977 ஆம் ஆண்டில் இந்நாட்டின் பிரதமராகப் பதவியேற்ற ஜே.ஆர். ஜயவர்த்தனா, கொழும்பைச் சிங்கப்பூர் போன்ற நவீன நகரமாக மாற்றத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தமையை உதாரணமாகக் குறிப்பிட இயலும்.

1977 ஆம் ஆண்டை நாம் கடந்து தற்போது 30 வருடங்களை அண்மிக்கின்றோம். அன்றிருந்ததை விட ஒரு சில துறைகளில் நாம் மென்மேலும் பின்னடைவையே சந்திக்க நேர்ந்தது. ஆனால், அதேவேளை சிங்கப்பூர் இத்தனை துரிதமாக பொருளாதார, கைத்தொழில், சமூக முன்னேற்றத் துறைகளில் அபார வளர்ச்சி கண்டுள்ளது. இன்று சிங்கப்பூரின் டொலர் நாணயம் உலகில் பிரபல்யம் பெற்றுத் திகழ்கின்றது. அது மட்டுமன்றி அந்த நாட்டுப் பொதுமக்களின் சாதாரண வாழ்க்கைத் தரம் திருப்தியான வகையில் உயர்ந்து காணப்படுகிறது. நவீன தொழில் நுட்பத்துறை வளர்ச்சியால் அந்த நாட்டின் பொருளாதார, சமூகத் துறைகளில் அதிவேக அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. உலகின் நவீன கட்டடக் கலையுடன் போட்டி போடும் அளவுக்கு சிங்கப்பூரின் கட்டடக் கலைத்துறை முன்னேற்றம் கண்டுள்ளது. நெடுஞ்சாலை அமைப்புத் துறையில் தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

லீகுவான் யூ தமது சுயசரிதை நூலில் நமது நாட்டை பற்றி நினைவு கூருகையில்...

## அவரது நினைவுக் குறிப்பிலிருந்து........

"1956 ஆம் ஆண்டில் லண்டனுக்குச் செல்லும் வழியில் முதன்முதலாக இலங்கையில் தரித்து நிற்கக் கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. அந்த வேளையில் இலங்கை 'சிலோன்' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. கொழும்பு நகரின் 'ஹோல்பேஸ்' ஹோட்டலில் எனக்குத் தங்குமிட வசதி செய்து தரப்பட்டிருந்தது. இந்து மாகடலின் ஓரத்தில் அமைந்திருந்த அந்த அழகிய ஹோட்டல் எனது மனதை மிக வசீகரித்து விட்டது. நான் காலிமுகத்திடலில் காலாற நடந்தேன். சில்லென்ற அந்தக் கடற்காற்றின் தழுவல் மனதுக்கு இதமளிக்கவல்லது. கொழும்பு நகர வீதிகளில் நடந்தே சுற்றி வந்தேன். கொழும்பு நகரில் அப்போது காணப்பட்ட கட்டடங்கள் மிக நேர்த்தியும் அழகும் கொண்டவையாகக் காணப்பட்டன. மவுண்ட்பேட்டன் பிரபுவின் கட்டளைத் தலைமையகம் கொழும்பு நகரிலேயே அமைந்திருந்தது. இரண்டாம் உலகப் போரின்போது கொழும்பு மாநகர் மீது குண்டுத்தாக்குதல் மேற் கொள்ளப்பட்டமையால் நகரிலிருந்த கட்டடங்களுக்குப் பெரும் தேசம் விளைந்திருக்கக் கூடுமென நான் எண்ணியிருந்தேன். ஆனால், நான் எண்ணியிருந்தது போலன்றி கொழும்பு நகரம் இடிபாடுகளெதுவுமின்றிச் சுத்தமாகவும் அழகாகவும் காணப்பட்டது.

சிங்கப்பூரை விட இலங்கை நாடு பொருளாதார ரீதியில் மேல் நிலையில் இருந்ததாக நான் முன்னர் கேள்விப்பட்டிருந்தேன். 1956 ஆம் ஆண்டில் நான் கொழும்பில் தரித்து நின்ற வேளையில் அதனை நேரடியாகக் கண்டுணரச் சந்தர்ப்பம் வாய்த்தது.

நான் முதன் முதலில் இலங்கைக்குச் சென்ற வேளையில் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ பண்டார நாயகா இலங்கையின் பிரதமராகவிருந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான அவர் பொதுத் தேர்தலின்போது பொதுமக்களுக்கு இரு தேர்தல் வாக்குறுதிகளை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தார். சிங்கள மொழியை அரச கரும மொழியாக்குவதும், பௌத்த மதத்தை நாட்டின் தேசிய மதமாக ஆக்குவதும் அவ்விரு வாக்குறுதிகளாகும்.

பண்டார நாயகா ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவராயிருந்தார். 'கறுப்பு, வெள்ளையர்' என்ற அடைமொழியால் அடையாளப்படுத்தப்பட்டார். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் இனவாதப் போக்குடனான கொள்கையை முன்வைத்த காரணத்தால் அவர் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டார். ஆங்கில மொழிப் பிரயோகத்தைத் தவிர்த்து பொதுமக்கள் மத்தியில் சிங்கள மொழியில் பேசி அவர்களது அபிமானத்தைப் பெற்றுக்கொண்டார். இவ்விதம் மொழி, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் இனவாத உணர்வைத் தூண்டி, தேர்தலில் பொது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்த முயன்றமையே பின்னர் இலங்கையின் வீழ்ச்சிக்கும் நலிவுக்கும் முக்கிய காரணமாய்மைந்தது.

> "....மொழி, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் இனவாத உணர்வைத் தூண்டி தேர்தலில் வாக்குறுதிகளை வழங்கி அவற்றை நடைமுறைப்படுத்த முயன்றமையே இலங்கையின் வீழ்ச்சிக்கும் நலிவுக்கும் காரணமாகின...."
>
> – லீகுவான் யூ.

அவ்வேளையில், சிங்கப்பூரின் பிரதமராயிருந்த லிம் சிங்கொக் ஒரு தடவை இலங்கைப் பிரதமருக்கு இரவு உணவளித்துக் கௌரவித்தார். அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பண்டார நாயகா கவர்ச்சியும் கம்பீரமும் மிக்கவராய் - அனைவரது கவனத்தையும் கவரும் தன்மை கொண்டவராய் - காணப்பட்டதை நான் அவதானித்துள்ளேன். அவர் நேர்த்தியான கவர்ச்சியான முறையில் ஆடை அணிந்தவராகக் காணப்பட்டார். அவரது பேச்சும் சகலரையும் கவரத்தக்கது. சிங்கள பௌத்தர்களின் எழுச்சியை ஊக்குவிப்பதாக அவரது கருத்துக்கள் அமைந்ததை அவதானித்தேன். இலங்கையின் தேசியத்தைப் பாதுகாக்கவும், சிங்கள மொழியை அரச மொழியாக்கவும், பௌத்த மதத்தைத் தேசிய மதமாக்கவும் அவர் கடும் அக்கறை கொண்டிருப்பதாக தனது பேச்சில் குறிப்பிட்டிருந்தார். கறுப்பு, வெள்ளையர்களின் மனோபாவத்துக்கெதிராக நாட்டின் தேசிய இன, மத உணர்வை வளர்க்கும் நோக்கில் செயற்படும் வகையில் அவரது கொள்கை அமைந்து காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

'கறுப்பு வெள்ளையர்கள்' போன்ற மேற்குலக கலாசாரச் சிந்தனை கொண்டவராகக் கருதப்பட்ட சேர் ஜோன் கொத்தலாவலையைத் தேர்தலில் தோற்கடித்தே பண்டார நாயகாவால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது. அவரது இன, மத துவேஷப்போக்குடனான கொள்கையைத் தமது திறமையான கவர்ச்சிப் பேச்சின் மூலம் பொது மக்களுக்கு எடுத்துக் கூறி அவர்கள் மனதில் உணர்ச்சிகளைத் தூண்டியே பண்டார நாயகா அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டார்.



பண்டார நாயக்கா

இவ்விதம் தமது சுயசரிதை நூலில் விவரித்திருக்கும் லீகுவான் யூ, பண்டார நாயகா கடைப்பிடித்த கொள்கை குறுகிய நோக்கம் கொண்ட அதிகார வாய்ப்பைக் கைப்பற்றும் நோக்கிலமைந்த செயற்பாடெனவும் விமர்சிக்கத் தவறவில்லை.

நாட்டின் அரச கரும மொழியாக சிங்களத்தைப் பிரகடனப்படுத்துவதன் மூலம் யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களுக்கும் நாட்டின் ஏனைய சிறுபான்மை மக்களுக்கும், ஏற்படக்கூடிய சிரமங்களையோ, அதிருப்திகளையோ பண்டார நாயகா பொருட்படுத்தவில்லை. இலங்கையின் தேசிய மதமாக பௌத்த மதத்தைச் சட்டபூர்வமாக்குவதன் மூலம் நாட்டில் வாழ்ந்த இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தோரின் உணர்வுகள் குறித்தோ அசௌகரிய நிலை குறித்தோ பண்டார நாயகா சிறிதும் கவனம் செலுத்தவில்லை.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் வேளையில் பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவராகவிருந்த பண்டார நாயகா பேச்சாற்றல் மிக்கவர். தர்க்க ரீதியாக வாதாடும் திறன் கொண்டவர். தனது அரசியல் கொள்கையை நியாயப்படுத்தும் வகையில் அவர் தர்க்க ரீதியாக என்னுடன் உரையாடியதை நினைவு கூருகிறேன்.

இத்தகைய அணுகுமுறைகளால் நாட்டின் அரசியல் தலைமைத்துவத்தைக் கைப்பற்றிய பண்டார நாயகா மூன்று ஆண்டுகளின் பின்னர் பௌத்த பிக்கு ஒருவரால் கொலை செய்யப்பட்டமை எனது மனதில் நிழலாடுகின்றது. பௌத்த மதத்தை தேசிய மதமாகப் பிரகடனப்படுத்துவதில் பண்டார நாயகா தாமதம் காட்டுவதாகக் கருதி குழப்பமடைந்த பௌத்த துறவியின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி பண்டார நாயகா உயிரிழக்க நேர்ந்திருக்கலாம் என்றே நான் எண்ணினேன்.

இவ்வாறு தமது சுயசரிதை நூலில் முன்னாள் சிங்கப்பூர் பிரதமர் லீகுவான் யூ இலங்கையின் அரசியல் வரலாறு குறித்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

தொகுப்பு: விஜயெஸ்ரீ



# “எந்த அலைக்கும் பயப்படாமல் தொழிலுக்குப் போறவன் என்ர மகன்...”

**கோசலையம்மா – மணற்காடு**

எனக்கு ஒன்பது பிள்ளையள். ஏழு பேர் திருமணம் செய்திட்டினம். ரெண்டு தம்பிமார்தான் இருக்கினம். என்ர அவர் தொழில் செய்யமாட்டார். நான் மீன் யாவாரம் செய்துதான் சீவியம் நடத்திறன். எங்கட வீடு எல்லாம் வந்துதான் போனது. ஆனா எங்கட வீடு கிடக்குது. நான் இண்டைக்குப் போய் பாத்துக்கொண்டு வந்தனான். எங்களுக்குப் பிள்ளையள் உந்த வீடு, வாசல், சொத்து எல்லாம் பெரிசில்ல; உயிர்தான் பெரிசு. நாங்கள் உயிர் தப்பி வந்ததே போதும். உயிரோட இருந்தா உது எல்லாத்தையும் தேடலாம் தானே. என்ர மகனையும் மகனின்ர பிள்ளைகளையும் கடல் வந்து அள்ளிக் கொண்டு போட்டுது. இப்ப மருமகளையும் அவாவின்ர ஆக்கள் வந்து கூட்டிக்கொண்டு போட்டினம். நானும் என்ர கணவனும் தான் இஞ்சை இருக்கிறம். ஒண்டில் என்ர பிள்ள என்னோட இருக்கனும். இல்லை எண்டா மகன்ர பிள்ளையளில ஒண்டெண்டாலும் இருக்கோனும். இருந்தலாவது அவன்ர நினைவுக்கு பிள்ளையையாவது வைச்சு வளக்கலாம். இது ஒண்டும் இல்லையே. மருமகள் இஞ்சை நிக்கேக்க ஓரளவு ஆறுதலா இருந்தது. இப்ப அவவும் போனதோட ஆகக் கவலையா கிடக்குது. என்ர மகன் பிள்ளை எந்தளவு தையிரியமும் துணிவும் உள்ளவன். எப்பிடித்தான் கடல் அடிச்சாலும் பயப்பிடாமல் தொழிலுக்குப் போவான். எங்கட அந்த மணற்காட்டில அவன் ஒராள்காணும். அப்பிடியானவன். அவனே அந்த வெள்ளத்தைத் தாண்டமாட்டாமல் போட்டான் எண்டா எப்பிடியான வெள்ளம் எண்டு நினைச்சுப் பாருங்கோ. விடியற்காலமை வலை வீசிக்கொண்டு நிண்டவன். அண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை எண்டதாலதான் இவ்வளவு சேதம். வேற நாளெண்டா எவ்வளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கும். வீடுகளில் உள்ள முழுப்பேரும் கடற்கரையிலதான் நிப்பினம். குமர்ப்பிள்ளையள் கூட வந்து நிற்பினம். எங்கட கிராமம் பிள்ளை எந்தளவு வளந்து கொண்டு வந்தது. ஓலைக்குடிசையள் எல்லாம் இப்ப குறைஞ்சு எல்லாரும் கல் வீடுகட்டி நல்லா முன்னேறிக் கொண்டு வந்தது.

இப்படி முன்னேறுறதுக்கு அள்ளித் தந்தது கடல்தான். இப்ப அள்ளி அள்ளித் தந்த அவளே எல்லாத்தையும் வந்து அள்ளிக் கொண்டுபோட்டாள். ஆனா அள்ளினவள் இந்த வீடுவாசல் சொத்துக்களை அள்ளிக்கொண்டு போயிருக்கலாம். ஆனா அவள் அதைமட்டும் அள்ளாமல் எங்கட உறவுகளின் உயிர்களையும் கொண்டு போட்டாள். இந்த சொத்துக்களை திரும்பத் தேடுவம். ஆனால், இந்த உயிர்களை இனி நாங்கள் எங்க தேடுறது?

# கதவைத் திறந்ததும் கடலே வந்தது வீட்டுக்குள்!

பெயர் :- தவமணி
வயது :- 62
இடம் :- சக்கோட்டை
அல்வாய்

இனி என்னத்தைப் யோசிச்சு காரியம் ஆகப்போகுது. இப்பதான் வீட்ட போட்டு வந்தனான். என்ன மாதிரி கிடக்கு எண்டு பார்க்கப்போனன். சுடுகாட்டை விட கேவலமாக எல்லோ கிடக்கு–இந்தப் பள்ளிக்கூடத்தில எனக்கு பிரச்சினை இல்லை. எல்லாம் தாறாங்கள். நெடுகலும் இஞ்ச இருக்கேலாது தானே. இனி பள்ளிக்கூடம் துவங்கப் போதாம். நாங்க வாழ்ந்து முடிச்சனாங்கள். இனி மிஞ்சியிருக்கிற பிள்ளையள் எண்டாலும் நல்லாய் இருக்கனும். இனி என்ன செய்கிறது எண்டுதான் யோசனையாய் இருக்கு. பிள்ள குட்டியெல்லாம் கலியாணம் செய்து தங்கட குடும்பமும் தாங்களும். பக்கத்தில இருந்தா ஏலாது எண்டு படுத்திருந்தாலும் சாப்பாடு எண்டு கொண்டு வந்து தருமல்லோ. (வீட்டை போய்) இன்னும் தான் கடல் பற்றிய பயம் போகுது இல்ல. என்ன பிள்ள ஏதோ ஆமின்ர செயின்பிளக் இரையிற மாதிரி ஒரு சத்தம் கேட்டிச்சு. நான் நினச்சன் பிரச்சினை வரப்போகுது எண்டு. கதைச்சவங்க தானே தொடங்கிட்டுதாக்கும். எடுக்கிறதை எடுத்துக்கொண்டு போவம் எண்டு. வாசற்கதவை மெல்லமாய் திறந்து பார்த்தன். அம்மா! தள்ளிக்கொண்டு வந்திச்சு பெரிய அலை. அலையெண்டு சொல்லேல கடல் வந்திச்சு. ஐயோ! கடலும் கடல்தானப்பா. என்னை இழுத்துக் கொண்டுபோய் உருட்டி எடுத்திச்சு. நான் இப்பிடி உருண்டெழுந்ததை நினைக்க பயமாய் கிடக்கு. என்ர மனுசன் எண்டா அதில செத்தே இருக்கும். என்ர அப்பா! ஒரு அடிதான் அலை. முழுக்கடலுமே எல்லாம் வீட்டுக்க தான் கிடந்திச்சு. ஏதோ உயிரை கொண்டு வந்திட்டம் ரெண்டு பேரும். இப்ப என்ர வீட்டை பார்க்க முடியாம இருக்கம்மா. ஆனா மலசலகூடம் மட்டும் ஓரளவு தப்பியிருக்கு (சிரித்தார்.) வீட்டை பார்க்கேலா ஒரே கஞ்சலும் குப்பையுமா கிடக்கு. தண்ணியெல்லாம் பழுதாப் போச்சு. புழுத்த மணமாய் இருக்கு. இப்ப இவங்க சொல்லியிருக்கினம் ஏதோ மருந்து போட்டு இறைச்சுத் தாறம் எண்டு. எங்க ஊர் புள்ள முருகைக்கல் தானே கூட . அதால பாதிப்பு கொஞ்சம் குறைவு அம்மா. ஒரு கதை சொல்லுறன் கேளுங்கோ. கதையென்ன 95 ஆம் ஆண்டு இருக்கும். ஒரு புரட்டாதி மாதம் இரவு ‘கும்’ எண்டு இருட்டு, சரியான மழையும். இரவு 8மணி இருக்கும். உடனே வீட்டை விட்டு வெளியேறச் சொல்லிச்சினம். ஆமி வருகுதாம் எண்டு. பிறகு நெல்லியடியில வந்து இருந்தம். அப்பிடி இரவு நேரத்தில வந்திருந்தால் என்ர கடவுளே! என்னாலே நம்பவே முடியாது. கடவுள் இருக்கிறார். கடல்மாதா ஓரளவு காப்பாற்றிக் போட்டா. பின்ன? இரவு எண்டா என்ன செய்திருக்குங்கள்.

## ஆழிப்பேரலை அனர்த்த அவலக் கதைகள்

பெயர்:- வள்ளியம்மை
இடம்:- கற்கோவளம்
வயது:- 60

எங்களுக்கு அங்க போயிருக்கப் பயமாயிருக்கு. கடலடிச் சத்தம் கேட்குது. இனியும் இது வரக்கூடாது என்டு நினைக்கிறம். அண்டைக்கு நடந்ததை நினைக்க இப்பவும் பயமாயிருக்கு. எங்கட இடத்தை இண்டைக்கும் போய்ப்பாத்து விட்டு வந்தனாங்கள். இடமெல்லாம் கறுப்பாயிருக்கு, சேறும் தண்ணியுமா இருக்கு. இப்படி இயற்கை அழிவு வரும் என்று எதிர்பாக்கவே இல்ல.

ஆம்பிளையாட்கள் கூலி, கடல்தொழில்தான். கடல் தொழிலுக்குப் போறதெண்டால் எவ்வளவு காலம் எடுக்கும். போர்க்காலங்களில அந்தரப்பட்டு ஓடி, முகாமில இருந்து, வீட்டை போறது. ஆனா இது அதைவிட மோசம். இந்தக் கவலையிலிருந்து மீளப் பெறவேணும். மருந்தெடுக்கிற டொக்ரர் சொல்லுவினம் யோசிக்க வேணாம் எண்டு.

அரசாங்கம் உதவி செய்யேல்ல என்று நினைக்கக் கவலையாயிருக்கு. பொடியங்கள் எவ்வளவு ஆறுதல். நாங்கள் அழ நீங்க அழாதீங்க வாகனத்தில ஏத்தி இன்ன இடத்திலபோய் இருங்க எண்டு அனுப்பி வைச்சினம். ஜே.வி.பி. ஆட்கள் வந்தவை. பொடியள் எல்லாம் சிங்கள நாயளே ஓடுங்க, ஓடுங்க எண்டு கலைச்சு விட்டாங்கள். அரசாங்கம் இப்படித்தான் எங்களப் பாக்க 5நாளைக்குப் பிறகா வரவேணும். இந்த அரசாங்கம் இருந்தென்ன இல்லாட்டி என்ன. எங்கட இடத்துக்குப் போகலாமோ வரலாமோ எண்டு யோசிக்கிறம். எங்கட அவலமென்ன கடல் வந்து மூழ்கடிக்க வந்திருக்கு. கடற்கரை 50யார் தூரமிருக்கும். 9.30 இருக்கும் அலையெல்லாம் கண்டம்.

ஒரு பனை உயரத்துக்குகூட வந்திருக்கும். சடபுட ... சடபுட.... எண்டு சத்தம் கேட்குது. நாங்கள் நினைச்சம் ஆமியும் பொடியளும் சண்டை பிடிக்கிறான்கள் எண்டு. ஆமிக்காரன் அடிச்ச வேலியள்ள தான் கன சனம் சிக்குப்பட்டுச் செத்துப்போனது. நாங்கள் கன பொம்பிளையள பிச்சு எடுத்தனாங்கள். ஆக்கள் ஆக சாகிறதுக்கு காரணம் ஆமியின்ர வேலிகள்தான். இண்டைக்கும் வீட்டுக்குள்ள கம்பியோடதான் ஒரு பொடி எடுத்தது.

நாங்கள் எங்கட ஊருக்க தள்ளி இருக்கலாம் என்று யோசிக்கிறம். அப்ப நாங்கள் சின்னல்ல தொழில் செய்த கடல் மாதிரி இப்ப இருக்கு. ஆமி சென்றி இல்லாமல் இருக்கு. ஆமி இல்லாம பழையபடி இருக்கவேணும். இண்டைக்கு 70 பேரைக் காவுகொடுக்க வேண்டி இருந்தது ஆமியாலதாலதான். நாங்க ஊருக்குப்போய் சத்தம் போட்டு ஆமியை தூர அனுப்ப வேணும். இஞ்ச கடற்கரையில் சென்றி போடவிடக்கூடாது. காம்ப் போடக்கூடாது என்று சொல்லப் போறம். சனங்கள் எல்லாம் கதைச்சுக் கொண்டு இருக்கிறம். எங்கட கிராமம் சின்னக் கிராமம். அதில 3 இல் ஒரு பங்கு முடிஞ்சு. 2 பங்க நாங்க காப்பாற்ற இந்த பிடியையும் நாங்க விடக்கூடாது. சின்ன சந்ததி குடுத்திற்றம் – என்ர தமிழன்ர சரித்திரமே சரி. இப்படியே இருந்தமெண்டால் தமிழனே அழிஞ்சு போடுவான்.

எங்கட தலைவர் எத்தினயோ கோடி ஒதுக்கியிருக்கிறார். இவை இப்பத்தான் வருகினம். அவர் எல்லா மக்களுக்கும் தான் ஒதுக்கி இருக்கிறார். எந்த வேற்றுமையும் இல்லாம எல்லாத்துக்கும் ரக்ஸ் எண்டு எங்கட சனம் பேசிச்சுது. நாங்கள் கட்டின வரி எங்களுக்கே உதவுவது எண்டு இப்பத்தான் தெரியுது. இந்தப்பெரிய அரசு 9 கோடிதான் ஒதுக்கியிருக்கு, ஆனா பயங்கரவாதி எண்டு சொல்லுற இயக்கம் 30 கோடி ஒதுக்கியிருக்கு. தலைவர் தங்கட சனத்திற்றையே எடுத்தார். தன்ர சனங்களுக்கே திருப்பிக் குடுக்கிறார். நாங்கள் எங்கட கடற்கரையில கம்பியே இல்லாமல் சுதந்திரமாய் இருக்க வேணும். மக்கள் முன்னுக்கு வந்தால் இயக்கம் பாதுகாக்க பின்னால வரும். அவங்க இராணுவ அழிவைப் பாக்கத்தான் வந்தது. எங்களப்பாக்க வரேல்ல. சர்வதேசத்துக்குக் காட்டத்தான் வந்தவை.

மணற்காட்டில ஒண்டுமே இல்ல. போட், வலை ஒண்டுமே இல்ல. ஒரு போட் வலை ஒண்டரை லட்சம் பெறுமதி வரும். வீடுகள் உடைஞ்சு போச்சு. இப்ப எங்கட மணற்காடு சுடுகாடாய் இருக்கு. பொடி எல்லாம் தாக்க ஒண்டாய் இருந்த மக்கள் இல்ல எண்டு வேதனையா இருக்கு. இப்ப வெள்ளத்தோட மண் பதிஞ்சு கடல் உயர்ந்திட்டுது. கடலும் தரையும் சமனாகிவிட்டுது. முந்தி நேவி அடிச்சா பிட்டிய நம்பி இருப்பம். இனி சண்ட தொடங்கினால் ஆபத்து. ஆமிய இருக்க விடாமல் பண்ண வேணும். அவை தங்களுக்கு பாதுகாப்பிற்கு இஞ்ச இருக்கினம். எங்களுகில் இருந்தால் தங்களுக்குப் பாதுகாப்பு எண்டு இருக்கினம். மணற்காட்டில் இராணுவம் நாயமா முடிஞ்சுது. எங்களுக்கு கணக்குச் சொல்லேலாது. எங்களுக்கு முன்னால பொடிய ஏத்த மாட்டான். எங்கட பாதுகாப்புக்கு தமிழ் இராணுவம் எங்களுக்கு காணும் தானே. எங்களுக்கு இராணுவம் எ[illegible]மா தேவை? எங்களுக்கு இருக்கிற தலைவற்ற அரசு எங்களுக்கு காணும். ஜே.பி.வி எங்களுக்கு வந்த சாமான் லொறியத் தடுத்திருக்கினம்.

எங்கட வளம் கடல்தான். எங்களுக்கு சாமான் வருகுதெண்டு நினைக்கினம். நாங்கள் கையக்கால அடிச்சு வாழுறதப் போல வராது. கடலுக்குப் போக வேணும். நாங்க எந்த நேரம் போனா மீன் நாறுமோ நாறாதோ என்டு எங்களுக்குத் தெரியும். 6 மணிக்குத்தான் போக வேணும் எண்டால் எங்களுக்கு இந்த இராணுவத்தால் பாதிப்புத்தான். ஆமி இல்லா விட்டா மீன் பிடிக்கிற கரையானுக்குத் தெரியும் தானே எந்த நேரம் மீன் பிடிக்கிறதெண்டு. கரையில இருந்து இஞ்சின் பழுதாப் போனாக் கூட வரேலாது. அப்பிடிப்பட்ட இராணுவம் எங்களுக்கு ஏன் பாதுகாப்பு? இராணுவம் தேவையில்ல. நாகர் கோயிலில் இருந்து மக்கள் அந்த இடங்களப் பிடிக்கோணும். நாங்கள் இந்த விஷயத்தை உடனே சொல்ல வேணும். எங்களுக்கெண்டு ஒரு அரசு உருவாகியிருக்கு. நாங்கள் ஊர்வலமாய் போய்ச் சொல்ல வேணும். ஒரு ஆமி சொல்லுறான் இதுக்குப் பிறகு நாங்கள் எங்கள் நாட்டுக்கே போறது நல்லது. இதோட இந்தப் பிடியப் பிடிக்கோணும்.

## “ஆமியின்ர கம்பி வேலியில சிக்கித்தான் பலர் செத்தினம்...”

# எனக்கெண்டு ஒருத்தருமில்லை...!

பெயர்:- வின்சன்
இடம்:- கள்ளப்பாடு
வயது:- 44

என்னெண்டா நான் இப்ப தனிய. அம்மாவை, அப்பாவை , என்ர ஒரேயொரு தம்பிய எல்லாரையும் குடுத்திட்டன். ஆனா இதில இல்ல. அம்மா வந்து முதலே லூசாக்கி றோட்டில லொறி அடிச்சுச் செத்திற்றா . உங்களுக்குத் தெரியும் எண்டு நினைக்கிறன். (1998-1999 -2000) யுத்தத்திலதான் அப்படி வந்தது. புதுக்குடியிருப்பில திருஞ்சிருப்பா. பேபி எண்டு அவதான் என்ர அம்மா. அப்ப அவா செத்திட்டா. மற்றது அப்பாவை முதலே குடுத்திட்டன். மற்றது என்ர தம்பி. தம்பி இயக்கத்தில போய் வீரச்சாவு. இப்ப நான் தனிய. என்ர மனக்கஸ்ரத்த சொல்லியழ எனக்கு ஒருவருமில்லை. நீங்கள் பாத்திருப்பியள் அல்லது அறிஞ்சிருப்பியள். கள்ளப்பாடு, வண்ணான்குளம், மணற்குடியிருப்பு, செல்வபுரம் எண்ட இடங்களில குடும்பத்தில ஒராள் தப்பினதும் குடும்பமே இல்லாமல் போனதும் எண்டு இருக்கு. அப்ப அதுகளப் பாக்க ச் சீ...தலை வெடிச்சிடும். இப்பிடி இருக்கேக்க நான் என்ர குடும்பம் எண்டா எந்தளவு சீரழிவு என அந்தத் தாய் தேப்பனை இழந்த சின்னதுகளையும் மனுசனை இழந்த மனிசியும் மனிசியை இழந்த மனுசனும் குடும்பமே கடல் கோதாரி விழுத்த மிஞ்சினவனையும் பாக்கேக்க நான் ஓரளவு தெம்படையிறன்.

....ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் மனநிலைகளை மனந்திறந்து வெளிப்படுத்துகிறார்கள். அரங்க செயற்பாட்டுக் குழுவின் (TAG) ஆற்றுப் படையாளிகள் திரட்டிய இந்த அனுபவக் கதைகள் சூரியகாந்தியில் தொடர்ந்து வெளியிடப்படும்.

# இப்படி அலையைக் கண்டதேயில்லை!

பெயர்:- யோகராசா
இடம்:- செல்வபுரம்
வயது:- 56

கடல் தண்ணி வர முதல் பெரிய சத்தம் ஒண்டு கேட்டது. சத்தம் கேட்டபிறகு தான் வந்திச்சப்பா தண்ணி. சரியோ அப்படியே சுழண்டு ,உருண்டு எழும்பித்தான் வந்திச்சு. நல்ல உயரம், என்ர அனுபவத்தில கடலிலேயே பிறந்து வளந்துவந்த எங்களுக்கு என்னண்டு இத்தின பேரையும் கொண்டு போனது எண்டு பயமா இருக்கு. என்னப்பா...கடல் சூரன் எண்டு சனம் கூப்பிட்டவனையே சாக்காட்டிப்போட்டுது. இப்ப கனக்கச்சனம் நினைக்குது ஆமிதான் வாறான் எண்டு. ‘மிக்’ தான் வாறான் எண்டு. ஏனெண்டால் ஆர் நெச்சது எங்கட கடல் இப்பிடி வரும் எண்டு. இப்பபோய் கடலைப் பார்க்க அப்பாவியா இருக்கிறார். பாவமாய் இருக்கு. ஆனா கடல் வந்ததை நினைச்சா அந்தப்பக்கமே போகப் பயமாய் இருக்கு.

இனி நாங்கள் திரும்பப் போறதெண்டால் ஆராவது என்னவாவது உதவி செய்வீனம் எண்டா பரவாயில்ல. எங்கட வள்ளம்,இஞ்சின், வலை எல்லாம் கடலோட போட்டுது. இதெல்லாம் தந்தால் குடும்பத்த இஞ்ச விட்டு தொழிலை செய்து, பிறகு குடும்பத்த பாக்கலாம். எங்களிற்கு குடும்பத்தில இழப்பு என்றது இல்ல. அதால நாங்கசொல்றம், ஆனா சனம் எல்லாம் என்ன செய்யுதுகள் எண்டு தெரியேல்ல.

# மனப் பாரத்தை இறக்கி வைக்கும் களம்!

பெண்களின் ஆளுமை வெளிப்பாடு என்பது இன்று மழுங்கடிக்கப்பட்டு, மறைக்கப்பட்டு வருகின்றது. தனித்துவத்தைப் பேணமுடியாத அளவில் பெற்றோர் சொல்வதைக் கேட்க வேண்டும் கணவன் சொல்வதைக் கேட்கவேண்டும் என்ற நிலையிலேயே பெண்கள் இன்னமும் வாழ்கின்றார்கள்.

அவ்வாறு கேட்பது தவறல்ல. ஆனால், அடிமைப்பட்டுப் போகும் நிலையே நம் பெண்களின் ஆளுமையை மழுங்கடிக்கின்றது.

ஆளுமையின் மறைப்பு என்பது வெளியிலிருந்து வருவதால் மட்டுமல்ல– அதாவது சூழவுள்ள உறவுகளால் ஆளுமை அடக்கப்படுவது மட்டுமல்ல - தமக்குத் தாமே ஒரு திரையைப் போட்டுத் திரைக்குப் பின்னால் இருப்பதைப் பார்க்க மறுக்கும் தன்மையிலும் பெண்களின் ஆளுமைகள் மறைக்கப்படுகின்றன.

அவற்றை வெளிக்கொணர வேண்டும். ஒவ்வொரு பெண்களுக்கும் - ஒவ்வொருவருக்கும் - இறைவன் ஏதோ ஒரு தனித்தன்மையை, விருப்பத்தைப் படைத்திருப்பார். சமூகத்தின் கட்டமைப்பால் தம் தனித்தன்மையை, விருப்பத்தை வெளிப்படுத்தப் பெண்கள் தயங்குகின்றார்கள்.

உதாரணத்திற்கு மிக மிக வறுமைப்பட்ட குடும்பத்தின் அங்கத்தவரான ஒரு மாணவிக்கு, தான் ஒரு மருத்துவராக வரவேண்டும் என்ற ஆவலும், அதில் மிகுந்த ஈடுபாடும் இருக்கும். ஆனால், அப்பிரிவில் இணைந்து கல்வி கற்பதற்கு ஏற்படும் செலவைக் கருத்தில் கொண்டு தன் ஆசைகளைத் தனக்குள்ளேயே புதைக்கின்றாள். இது பொருளாதாரத்தால் ஏற்பட்ட தடை.

இதைத் தவிர சமூகத்தின் பார்வைக்கும் கருத்திற்கும் பயந்து தம் தனித்தன்மைகளை எத்தனையோ பெண்கள் மழுங்கடிக்கின்றார்கள்.

இந்தப் பயத்தை, தாழ்வு மனப்பான்மையைத் தங்களின் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தித் தம்மைத் தாமே ஆற்றுப்படுத்தல் என்பது இன்று மிக அவசிய தேவையாகவுள்ளது.


இந்த ஆற்றுப்படுத்தலுக்கு ஓர் அரங்கக் களமாக அண்மையில் பெண்கள் பண்பாட்டு மையத்தின் உயிர்ப்பூக்குனர்களின் ஒழுங்குபடுத்தலின் கீழ் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இடம்பெற்ற 'அரங்காலயம்' திகழ்ந்தது.

அங்கு பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் வெகு தொலைவிலிருந்தும் - பேதமைகளை மறந்த இருநூறுக்கும் மேற்பட்ட பெண்கள் ஒன்று கூடியிருந்தனர்.

வயது வேறுபாடு இன்றி -12 வயதுச் சிறுமிகள் முதல் 70 வயது வயோதிப மாதுக்கள் வரை - அங்கு கூடியிருந்தனர். வயதுவேறுபாட்டை மறந்தவர்களாய் ஒருவருடன் ஒருவர் அளவளாவுவதைக் காணக் கூடியதாகவிருந்தது.

'அரங்காலயம்' ஆரம்பிக்கும் போது சிறிது ஒதுங்கல் பலரிடம் காணப்பட்டது. முதல் தடவையாக வந்தவர்கள் தம்மை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தி ஒதுங்கி நின்றனர்.

அழைக்கப்பட்டவர்கள் வந்ததும் நிகழ்வுகள் ஆரம்பித்தன. ஆரம்ப நிகழ்வாக அறிமுகப்படுத்தல் இடம்பெற்றது. ஒவ்வொருவரும் தம் விவரங்களைக் கூற ஊக்கப்படுத்தப்பட்டன.





தொடர்ந்தும் அறிமுகப்படுத்தும் நிகழ்வே இடம்பெற்றது. ஆனால், வித்தியாசமான முறையில் நடைபெற்றது. அனைவரும் அந்த மண்டபம் முழுவதும் அசைந்து திரிய அறிவுறுத்தப்பட்டது. இடையில் வாத்திய ஒலிகேட்டதும் நின்று தம் எதிர்ப்பட்டவரிடம் தம்மைப் பற்றிய விவரங்களைக் கூறியும் எதிர்ப்பட்டவரின் விவரங்களைக் கேட்டும் அறிந்து கொண்டனர்.

இந்த அறிமுக நிகழ்வின் மூலம் அநேகமானவரின் விவரங்கள் ஏனையோருக்குத் தெரிய வந்தது. தொடர்ந்து சிறு கலந்துரையாடல். அறிமுக நிகழ்வின் பலன்கள், தன்மைகள் பற்றிக் கலந்துரை யாடப்பட்டது.

தொடர்ந்து பங்கு கொள்ளல் நிகழ்வு இடம்பெற்றது. அதாவது வாத்தியக் கருவிகள் இசைக்கப்படும். அப்பொழுது எந்தவித வழிநடத்தலோ, கட்டுப்பாடோ, திணிப்போ இல்லாது தம் மனதில் தோன்றியபடி தம் இயல்புக்கேற்ப அசைவுகளை ஏற்படுத்தவேண்டும். முதலில் ஒரு சில குறிப்பிட்டவர்கள் மட்டுமே பங்கு கொண்டனர். பின்பு இருவர் மூவராகத் தாமும் இணைந்து கொண்டனர். இறுதியில் ஒருசிலரைத் தவிர அனைவருமே பங்கு கொண்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

பங்கு கொண்டவர்களிடம் அந்த நேர உணர்வுகள் தொடர்பாக வினவினோம். அவர்கள் கூறிய பதில்களை இவ்விடத்தில் தொகுத்துத் தருகின்றேன்.

"ஆரம்பத்தில் நான் ஆடுவதா? இல்லையா? என்ற கேள்வியே எம் மனதில் இருந்தது. நான் ஆடினால் என்னை ஆட்டக்காரி என்று சொல்லமாட்டார்களா! பக்கத்தில் நிற்பவர் ஊரில் போய் சொல்லுவாரா? ஊரில் தெரிந்து என்னைக் கேலி செய்ய மாட்டார்களா? என்ற கேள்விகளும் எம் மனதைக் குடைந்தன. ஆனால், அந்தத் தாளயம் தானாகவே எம் கால்களை இயக்கியது. எம் உடலை அசைந்தாடச் செய்தது.

ஆடியவர்களுடன் நாமும் இணைந்து கொண்டோம்.

"ஆடிய பின்தான் உணர்ந்தோம் அந்த நேரத்தில் எம் துன்பங்கள் மறக்கப்பட்டன. எம் ஏக்கங்கள் மறக்கப்பட்டன. எம் உடலிலும் ஒரு லேசான தன்மை ஏற்பட்டது.

"தாளலயம் நின்றதும் ஏன் தான் நிற்பாட்டுகின்றார்களோ என்ற ஏக்கம் தான் மிஞ்சியது" - என்றார்கள்.

**-தீபா, கங்கா**

அரங்காலயத்தில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய இன்னுமொரு அம்சம் செய்துகாட்டல்.

இன்று வீதிகளில் பெண்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் தொடர்பாகச் செய்துகாட்டல் இடம் பெற்றது. தொடர்ந்து அது தொடர்பாகக் கருத்தாய்வும் இடம்பெற்றது.

பெண்களுக்கான அரங்காலயம், பெண்கள் தான் பங்கு கொள்ள வேண்டும் என்று கருதும் சகோதரவர்க்கத்தின் மத்தியிலிருந்தே இந்த அரங்காலயத்திற்கான தலைமை இடம்பெற்றது. அதாவது அரங்காலயத்திற்குத் தலைமை தாங்கியவர். யாழ்.பல்கலைக்[illegible] நுண்கலைத் துறைத் தலைவர் சிதம்பரநாதன். பெண்களின் நலனில் பெண்களுக்குள்ள அக்கறையின் அளவிற்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல ஆண்களின் அக்கறை என்று அந்த இடத்தில் அவர் நிரூபித்துக் காட்டினார்.

இவரைத் தவிர வேறு சில சகோதரர்களும் அங்கு நிற்கக் கண்டோம்.

அரங்காலயமானது பெண் வெளிப்பாட்டிற்கு ஓர் களமாகத் தூண்டு கோலாகத் திகழ்ந்தது. ♦

---

## உருக்குலைந்த என் கவிதைகள்!

கவிதை எழுதிடும் ஆசை
மனவெளியெங்கும் உட்கார்ந்து
தன் கால்களை நடப்பித்து
எம்பிக் குதித்து எக்காளமிட்டு
தனதிருப்பை நிறுவிப்பதிலேயே
ஆர்வத்தைக் கொண்டிருக்கிறது.

கவிதைக்கான கருக்கள்
ஒவ்வொரு பயணங்களிலும்
ஒவவொரு நிகழ்வுகளிலும்
ஒவ்வொரு நினைவுகளிலும்
ஒவ்வொரு கனவுகளிலும்
ஏதோவொரு வகையில்
கிடைத்தபடியே இருக்கிறது

காகிதத்தில் எழுத முனைகையில்
கருவை மறந்து போகும் துர்ப்பாக்கியம்
சிலவேளைகளில் நிகழ்ந்து விடுகிறது
மறத்தலைத் தவிர்க்க
கருவை நினைக்கும் உடனேயே
கரு கிடைக்கும் உடனேயே
உள்ளங்கையிலோ... அகப்படும்
சின்னக் காகிதத்திலோ...
குறித்து வைப்பேன்.

சிலவேளைகளில் வியர்த்து
உள்ளங்கையில் எழுதியது
என்னவென்றே தெரியாமல்
உருக்குலைந்து போயிருக்கும்
பொக்கற்றில் இருந்து எடுக்கும்
காசோடோ வேறு பொருள்களோடோ
சின்னக் காகிதமும்
வழிமாறித் தொலைந்திருக்கும்

எப்படியோ எழுதிவைத்த கவிதைகளைச்
சேகரித்து வைத்திருந்தேன்

ஒரு கடும் மழைநாளில்
ஒருநாளும் ஒழுகாத என் அறையிலும்
மழை ஒழுகி...
என் கவிதைக் காகிதங்கள்
உருக்குலைந்து போயின.

**த.அஜந்தகுமார்**

---

## வேரில் இருந்தொரு நிமிர்வு!

ரணங்கள், மரணங்கள்
இராத்திரிகளின் நீளங்கள்
துப்பாக்கிகளின் சத்தங்கள்
இவற்றின் ஏக்கங்கள்
எங்கள் முகங்களில் அப்பியபடி...

யாதுமறியாத சுவரோவியம் போல
இப்போதும் யுத்த அழுக்குப்
படிந்தபடி...

மலையைக் காற்று
என்ன செய்ய முடியும்?
யுத்தத்தை அகதியாக்க
எங்களால் முடியும்!

நாங்கள் வலிந்தாலொளிய
எதிர்கால புன்னகையில்லை
எங்கள் புன்னகையை தனித் தனியே
புதைத்து வைத்திருக்கிறார்கள்

வாயிதழ்களில் முட்கம்பித் தையல்
காதுகளில் சீழ்க்கை வடியல்
விழிகளில் கிழிக்கப்பட்ட கலண்டர்களின்
இலக்கங்கள்

ஆதிக்க வெறியர்களின் தூரிகையில்
இப்படி ஒரு ஓவியம்
தோல்வியில் முடிந்திருக்கிறது.

ஏதிலிகளாய் இருந்த நாம்
யாதுமாகி நிற்போம் வாருங்கள்

தேசப்படத்தில்
எதிரியின் சமாதியை
தோட்டாக்களால் வரைவோம்

எதிரி
இதுவரை ஆட்டியது
எங்களது விழுதுகளைத்தான்
வேர்களை அல்ல!

– சுதேசிகன்

---


## நம் தமிழ்ப் பண்பு போச்சு

சந்தியால் வந்த நாலும்
சரிவர மதுவை மாந்தி
நந்திபோல் நடுத்தெருவில் ஒன்றாய்
நகர்ந்திட சயிக்கிள் ஒன்றில்
வந்த பேருந்தில் மோத
வழிப்போக்கர் திரண்டார் ஒன்றாய்
எந்தக் குற்றமும் இளைத்திடாத
ஏதையாம் சாரதியைத் தாக்க
பிந்தி வந்த கும்பல் ஒன்று
பெரு நெருப்பதனை மூட்ட
சந்தியில் 'தீ' பரவியோங்க
சரிவரப் புகை கிளம்ப
அந்தமில் அடி உதையால் நொந்து
அச்சாரதி துடி துடிக்க
மாந்திய மதுவெறி முறிய
மதி கெட்ட நாலும் வந்து
சந்தியில் கூடி நின்று
சரசங்கள் பலவும் செய்ய
வந்தனர் பொலீசார் அங்கே
வரிசையாய் பார்த்து நின்றார்
நந் தமிழ்ப் பண்ப தெல்லாம்
நடுத் தெருவினில் பறிபோச்சுதம்மா!

- விகடகவி

---

## வசந்த தேவதையே வா!



காதலில்லாமல்
காதலிக்கிறோம்
வேறெதுவும் அறியாமல்
வார்த்தைகள் பேசுவதில்லை

ஒருவரை ஒருவர்
கடந்து போகையிலும்
நிசப்தமே நிகழும்.

ஆனாலும்,
மனசுக்குள் மௌனமாய்
பேசவே தோன்றும்

இருவரும்
ஈர்ப்பை நோக்கிய –
காந்தத் துண்டுகள்
பிறகேன் காவலிகளாய்
தூங்க வேண்டும்...?

புறமும் எனது மனசை
[illegible] போட
[illegible] முடியாது காதலி

[illegible]
[illegible]
[illegible]

[illegible] தேவதை[illegible] வா!
[illegible] நிலைக்
கடலில்லை [illegible]
காதல் [illegible]மாய்
நீண்ட உலாப் போவோம்


என்றும்
வலிகளை [illegible]
[illegible] இல்லை
[illegible] அறியாத
எந்த ஜீவனும் இல்லை

உனது இதயத் துடிப்பிலே

விசித்ரா

# “...நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கலைகள் வளர்ந்துள்ளன...”

*நாட்டுச் சூழல், பொருளாதாரப் பிரச்சினைகளால் எமது கலைஞர்கள் கஷ்டப்பட்டபோதும் யாழ்ப்பாணத்தில் இசைக்கலை வளர்ச்சியடைந்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது. வெளிநாடுகளில் பல்வேறு வசதிகள், பொருளாதார வளங்கள் உண்டு. இங்கு அப்படியில்லை. இந்த நிலையிலும் கூட கலை முன்னேற்றம் அடைந்துள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே. நீண்ட இடைவெளிக்குப் பின் யாழ்ப்பாணம் வந்துள்ளீர்கள். இன்று இசைத்துறையின் வளர்ச்சி இங்கு எவ்வாறு உள்ளது என இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கத்திடம் கேட்டபோது அவர் முன் கண்டவாறு பதிலளித்தார். புலம் பெயர்ந்து கனடாவில் வசிப்பவர் இன்னிசை வேந்தன் பொன்.சுந்தரலிங்கம். அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த சமயம் ‘சூரியகாந்திக்கு’ வழங்கிய செவ்வி இது.*



–பொன்.சுந்தரலிங்கம்

❑ *கேள்வி* :- நீங்கள் சினிமாவில் பாட இருப்பதாகச் செய்திகள் அடிபடுகின்றன. அதுபற்றிக் கூற முடியுமா?

◆ *பதில்*:- சினிமாவில் பாடவேண்டும் என்ற எண்ணம் கிடையாது. ஆனால் ‘கைதட்டத்தான் கைகள்’ படத்தில் பாடவுள்ளேன். காசி ஆனந்தன், பிறைசூடி ஆகியோரின் பாடல்கள், எம்.எஸ்.விஸ்வநாதனின் இசை அமைப்பில் பாட்ல்கள் இடம்பெறுகின்றன. தவிர்க்க முடியாததால் ஒப்புக் கொண்டிருக்கிறேன். மற்றப்படி சினிமாவில் பாடவேண்டும் என்பது எனது நோக்கமல்ல.

❑ *கேள்வி* :- இன்றைய இளம் சந்ததியினர் பெரும்பாலும் சினிமாப் பாடல்களிலேயே ஈடுபாடு காட்டுகிறார்கள். இதனால், கர்நாடக சங்கீதத்தின் எதிர்காலம் அடிபட்டுப்போக வாய்ப்புகள் ஏற்படலாமல்லவா?

◆ *பதில்*:- கிடையாது. கர்நாடக சங்கீதம் கட்டுக்கோப்பான ஒன்று. அதை யாராலும் அசைக்க முடியாது. பெரிய கூட்டங்கள் என்று வராவிட்டாலும் கூட அது நிலைத்து நிற்கும். அதனால், நாங்கள் முயற்சி இல்லாமல் இருக்கக் கூடாது.

❑ *கேள்வி* :- உலகளாவிய ரீதியில் எமது கலைகளுக்கு இருக்கக் கூடிய மதிப்பு?

◆ *பதில்*:- நிச்சயமாக இருக்கிறது. வெளிநாடுகளில் எமது கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் நிறையவே மதிப்பு உண்டு. எங்கள் நாட்டுக் கலைஞர்களான காலஞ்சென்ற எம்.கே. பத்மநாதன், தட்சணாமூர்த்தி போன்றவர்கள் இந்தியக் கலைஞர்களாலேயே நன்கு மதிக்கப்படுபவர்கள். ஹரித்துவாரம் பழனிவேல் என்பவர் ‘எனது குருநாதர் தெட்சணாமூர்த்தி தான்’ என ரொறன்ரோவில் பேசும் போது கூடக் கூறினார்.

❑ *கேள்வி* :- நீங்கள் இசைக் கலையைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம்?

◆ *பதில்*:- நான் சிறுவயதில் பள்ளிசாலையில் படிக்கும்போது தேவாரம் பாடும் நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதுண்டு. இசை பயில எனது உறவினர்களும் முழு உதவியையும் வழங்கினார்கள். கர்நாடக இசையைக் கேட்கும் போது அதில் ஒரு வகைப்பிடிப்பு ஏற்பட்டுக் கொண்டது. இதனால், பின்னர் அண்மையில் பல்கலைக்கழகத்தில் இசை பயிலத் தொடங்கினேன். எனது அரங்கேற்றம் மறைந்த நீதியரசர் எச்.டபிள்யு.தம்பையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

❑ *கேள்வி* :- வெளிநாட்டில் வாழும் எமது பிள்ளைகள் எமது கலைகளில் நாட்டமுடையவர்களாக இருக்கிறார்களா?

◆ *பதில்*:- ஆம், என்னிடத்தில் கூட இப்போது இருநூறு பிள்ளைகள் இசை பயிலுகிறார்கள். நடனம், இசைக் கருவிகளை வாசித்தல் போன்ற பயிற்சிகளிலும் அநேகம் பிள்ளைகள் ஈடுபட்டுள்ளனர். எமது கலைகளிடத்தில் அவர்களுக்கு பிடிப்பு இருப்பதைக் காணமுடிகிறது?

❑ *கேள்வி* :- வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் எமது கலைகளை எவ்வாறு பார்க்கிறார்கள்?

◆ *பதில்*:- அவர்கள் இதனை வெகுவாக ரசிக்கிறார்கள். நிகழ்ச்சிகளைப் பார்க்க வரும்போது எமது பண்பாட்டுக்கமைய பொட்டுவைத்து. சுடிதார் அணிந்து வருகிறார்கள். எங்களது பிள்ளைகள் ஜீன்ஸ்ும் ரீட்டேடும்தான் அணிந்து வருகிறார்கள்.

டொச்சில் எனக்கு மிருதங்கம் வாசிப்பவர் கூட வெள்ளையர்தான். சஞ்சய் என்று பெயர். இந்தியாவில் நாகே ஸ்ரீராம், நெய்வேலி வெங்கடேசன், வி.சி முரளி போன்ற பெரிய வித்துவான்கள் வாசித்துள்ளனர்.

❑ *கேள்வி* :- கனடாவில் நீங்கள் எவ்வாறு இசைப் பணியாற்றுகின்றீர்கள்?

◆ *பதில்*:- பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதுடன் கோவில்களில் தேவாரம், பத்திப் பாடல்களைப் பாடுதல் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளுதல் மூலம் இந்தப் பணியைத் தொடர்கின்றேன்.

❑ *கேள்வி* :- உலகின் எல்லாப் பாகங்களிலும் உங்களது கச்சேரிகள் இடம்பெற்றிருக்கிறனவா?

◆ *பதில்*:- ஒரு சில நாடுகளைத் தவிர அநேகமாக எல்லா இடங்களிலும் செய்திருக்கிறேன்.

❑ *கேள்வி* :- இளங்கலைஞர் மன்றத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படக் காரணம்?

◆ *பதில்*:- இது நான் விரும்பிய துறை என்பதால் ஏனைய கலைஞர்களையும் ஒருங்கிணைத்து ஓர் அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் அதனை வளர்க்க முடியும் என்று கருதினேன். திவ்யஜீவன சங்க மண்டபம் மற்றும் சில மண்டபங்களில் கச்சேரி செய்யும் போதெல்லாம் இசைக் கலைக்கென ஒருமன்றம், மண்டபம் என்றிருந்தால் நல்லது என எண்ணுவதுண்டு.

இது பற்றி வழக்கறிஞர் கேசவன், அவரது தந்தையார், மகாராணி நிறுவன அதிபர் சோமசேகரம் போன்ற பெரியார்களுடன் தொடர்பு கொண்டபோதுஅவர்களின் ஆதரவும் ஏனைய கலைஞர்களின் ஒத்துழைப்பும் தாராளமாக இருந்தது. மன்றமும் உருவானது.

❑ *கேள்வி* :- மன்றத்தின் எதிர்காலம் பற்றி?

◆ *பதில்*:- இந்த இடைக்காலத்தில் அது தன்னுடைய பணியை நன்கு செய்திருக்கிறது. அதன் தலைவராக இருக்கும் சோ.பத்மநாதனும் ஏனைய உறுப்பினர்களும் இங்குள்ள கலைஞர்களும் தங்களது முயற்சியால் வழமை போன்று நிகழ்வுகள் நடத்திவருகின்றனர். முன்பு நாங்கள் வர்த்தகர்களைத் தேடிப்போனோம். இப்போது அவர்கள் தாங்களாகவே முன் வந்து உதவுகிறார்கள்.

இளங்கலைஞர் மன்றம் தொடர்ந்தும் தனது பணியைச் செய்யும் இசைக் கல்லூரியாக இயக்கவும் ஏற்பாடுகள் செய்துவருகின்றோம். வெளிவாரி பட்டப் படிப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாக தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களுடனும் யாழ்.பல்கலைக்கழகத்தினதும் உதவியைக்கேட்டிருக்கிறோம். தகுதியான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால் குறைவு. இவர்களுக்கான வேதனத்தை வழங்க வெளிநாட்டில் உள்ளவர்கள் பலர் முன்வந்துள்ளனர்.

❑ *கேள்வி* :- வெளிநாட்டில் நீங்கள் ஏதாவது இறுவட்டுக்களைத் தயாரித்துள்ளீர்களா?

◆ *பதில்*:- ஆம். முத்துச் சிரிப்பு, யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை(சிறப்பான முறையில் செய்யப்பட்டுள்ளது) கர்நாடக நாதசங்கமம் (தெலுங்குப் பாடல்கள் அதிகம்) தமிழிசை அமுதம் (இசையாலும் உலகாளலாம்) போன்றவை சீ.டி யில் உருவாக்கப் பட்டுள்ளன. உரிய நேரத்தில் இவை வெளியிடப்படும்

❑ *கேள்வி* :- உரிய நேரம் என்பது?

◆ *பதில்*:- சந்தர்ப்பம் கிடைப்பதைத்தான் சொன்னேன்

❑ *கேள்வி* :- இவைதவிர தனிப் பாடல்கள், எழுச்சிப்பாடல்கள் பாடியது பற்றிக் கூற முடியுமா?

◆ *பதில்*:- கவிஞர் வைரமுத்துவின் ‘வரம் கேட்கிறேன்’ இது தமிழைப் பற்றியது. புதுவை இரத்தினதுரை, சோ.ப. போன்றவர்களின் தேசிய எழுச்சிப் பாடல்கள், நாடுதழுவிய பாடல்களாக ஒரு நூறு பாடல்கள்வரை பாடியுள்ளேன். ‘ஈழம் மலர்கிறது’ இந்தியக் கலைஞர்களின் உதவியுடன் உருவானது.

❑ *கேள்வி* :- இசை, பரதம் போன்ற கலைகளைப்பயிலும் மாணவர்கள் தமது அரங்கேற்றத்துடன் அதை மறந்து விடுவதுபோல் தெரிகிறது. இது கலை வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதல்ல என்பது எமது கருத்து. நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

◆ *பதில்*:- சரியானதுதான் அதை ஒரு ‘பஷன்’ னாகக் கொண்டுள்ளனர். இது தவிர்க்கப்படவேண்டும். அரங்கேற்றம் செய்வதற்காக மட்டும் பயின்றதாக இருக்கக் கூடாது. கலைஞர் முடிந்தவரை தன்னை அர்ப்பணிக்கவேண்டும். அல்லாவிடில் அதனால் பிரயோசனமில்லை. உத்தியோகம் பெறுவதற்காகப் பயின்றதாகவும் அமையக்கூடாது.

❑ *கேள்வி* :- இசைக் கலையை மட்டுமன்றி பரதக் கலை மற்றும் வாத்தியக் கலைகளை வளர்க்க என்ன செய்யலாம்?

◆ *பதில்*:- நூல் நிலையங்கள் இருப்பது போன்று சிறந்த பாடகர்களினதும் பரத, வாத்தியக் கலைகளைக் கொண்டதுமான கலைத் துறைக்கான நிலையங்கள் இருத்தல்வேண்டும். ஒருவர் எம்.எஸ்.சுப்புலட்சுமி, மதுரை சோமு மற்றும் புகழ் பெற்ற வாத்தியக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், பரதநாட்டிய மேதைகளின் ஆடல், பாடல் இசைகளைக்கொண்ட சீ.டிக்கள் மற்றும் தனிப்பதிவு நாடகங்கள் கேட்டவுடன் கிடைக்கத்தக்க வகையில் அமையவேண்டும். கலைஞர்கள் தங்களுடைய நிகழ்ச்சிகள் முடிவுற்றவுடன் அரங்கைவிட்டு வெளியேறுவது தவிர்க்கப்பட வேண்டும்? முன்பு சங்கீதம் ஒரு குடும்பச் சொத்தாக பலருக்கு மேடை கிடைக்காத நிலை இருந்தது. இப்போது அப்படியல்ல. எல்லோருமே வாய்ப்புகளை பயன்படுத்தினால் அது வளர்ச்சியடையும்.

நாதஸ்வரம், தவில் வாத்தியக் கலைகளை வளர்க்க உதவி செய்யவுள்ளோம். சம்பந்தப்பட்ட கலைஞர்கள் முன்வந்தால் நாங்கள் உதவுவோம். அதற்கென ஒரு பாடசாலையைக் கூட அவர்கள் நிறுவலாம். அந்தக் கலையும் அழியாது பாதுகாக்கப்பட வேண்டும் . இதற்கு அந்தக் கலைஞர்கள் ஒத்துழைக்கவேண்டும்.

❑ *கேள்வி* :- நீங்கள் புங்குடுதீவைச் சேர்ந்தவர். இது தொடர்பாக அங்கு ஏதும் பணிகளை மேற்கொண்டுள்ளீர்களா?

◆ *பதில்*:- தீவுப்பகுதி மக்கள் வைராக்கியத்துடன் வாழ்பவர்கள். ஒவ்வொரு துறைகளிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்கள். புங்குடுதீவில் அம்பலவாணர் கலையரங்கு இருக்கிறது. நாட்டுப் பிரச்சினைகள் காரணமாக சேதமடைந்த அந்த அரங்கைப் புனரமைக்க முயற்சிகள் செய்கிறோம். இதற்காக கனடாவில் வசிக்கும் புங்குடுதீவு மக்கள் ரூபா இரண்டு லட்சம் வழங்கியுள்ளனர். அதன் வளர்ச்சிக்கு உதவ எமது மக்கள் எப்பொழுதும் தயாராகவே இருக்கிறார்கள்.

❑ *கேள்வி* :- சுனாமி தொடர்பாக ஏதாவது பாடல் பாடியிருக்கிறீர்களா?

◆ *பதில்*:- ஒரு பாடல் பாடியுள்ளேன் . பெயர் சரியாகத் தெரியவில்லை.

❑ *கேள்வி* :- புலம்பெயர்ந்த மக்களின் மனநிலை என்ன மீண்டும் சொந்த மண்ணிற்குத் திரும்பும் எண்ணங்கள் உண்டா?


◆ *பதில்*:- ஒரு சமாதானச் சூழல் ஏற்படுமெனின் அங்குள்ள பிள்ளைகளில் தொண்ணூறு வீதமானவர்கள் இங்கு திரும்பி வருவார்கள். இங்கு உண்மையில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதையே எல்லோரும் எதிர்பாக்கின்றனர்.

❑ *கேள்வி* :- எமது கலைஞர்களுக்கும், இளைஞர்களுக்கும் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

◆ *பதில்*:- கலைஞர்கள் தங்களுக்குள் எவ்வித மனக்கசப்புகளோ கோபங்களோ அற்றவர்களாக ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். அதன் மூலம் எமது கலைகளில் தொய்வு ஏற்படாதவாறு பாதுகாக்கலாம். அர்ப்பணிப்புடன் செயற்பட்டு எங்களது பாரம்பரியக் கலைகளை அழிய விடாது பாதுகாக்கவேண்டும்.

இளம் தலைமுறையைப் பொறுத்தவரை தங்கள் கல்வியுடன் கலைத்துறையிலும் முழு ஈடுபாடு கொண்டு கற்பதுடன், அரங்கேற்றம் செய்தால் போதும் என்ற எண்ணத்தை விடுத்து அதிலும் முழுமையான செயலாக்கம் கொள்ளவேண்டும் என்பதே எனது விருப்பம்.

**செவ்வி:**
*நெடுந்தீவு லஷ்மன், சுதேசிகன்*



# மன நோய்கள் மூளையில் அல்ல...!

மனது என்றவுடன் எல்லோருக்கும் நினைவிற்கு வருவது நெஞ்சுக்குள் இருக்கும் இருதயம் தான். தன்னையும் அறியாமல் மனது என்றவுடன் கை மூளையைத் தொடுவதில்லை; தன் இருதயத்தைத் தான் தொட்டுக் காட்டுகிறது.

'மனதாரப் பாராட்டுகிறேன்', 'பெரிய மனசு வேணும்'; 'மனதைத் தொட்டுச் சொல்லுகிறேன்' என்னும் வார்த்தைகளை நாம் பல இடங்களில் கேட்பதுண்டு. அவ்வாறு சொல்பவர்கள் அவர்களையும் அறியாமல் இருதயத்தை தொட்டுப் பேசுவதை நாம் கவனித்திருக்கிறோம்.

ஆனால், டாக்டர்களிடம் மனசு சரியாக இல்லை என்று கூறினால் போதும். உடனே தூக்க மாத்திரை; மூளையை மந்தப்படுத்தும் மாத்திரைகள் டென்ஷன் மாத்திரைகள்; B.P மாத்திரைகள் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும். எல்லா மாத்திரைகளுமே மூளையைத் தாக்கும் மாத்திரைகள். தூக்கம் வருவது போல இருக்கும்; ஆனால், தூக்கம்வராது. காலையில் எழுந்ததும் தூக்கம் கலைந்தது போல இருக்கும். ஆனால், தூங்கிய திருப்தி இருக்காது. பாதிமயக்கத்தில் ஆளை வைத்திருக்கும். இதுதான் மன நோயாளிக்கான மருந்து.

மனது எங்கிருக்கிறது? மூளையில் இருக்கிறதா? அல்லது உடலின் பல உறுப்புகளிலிருந்து உருவாகும் நோய்கள் மூளையில் பிரதிபலிப்பை ஏற்படுத்துகிறதா? என்பதை நாம் பார்ப்போம்.

மீன்குஞ்சு பிறந்தவுடன் நீந்த ஆரம்பித்துவிடுகிறது. குதிரைக் கன்று ஈன்ற உடன் எழுந்து நிற்கிறது. நடக்க ஆரம்பிக்கிறது. ஆனால், குழந்தை நிற்பதற்கோ, நடப்பதற்கோ பல மாதங்கள் ஆகிவிடுகின்றன. மனிதனின் மூளைக்கு எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். மீண்டும், மீண்டும் மூளையில் பதிவு செய்யவேண்டும்.

நெருப்பைத் தொட்டால் தான் சூடு என்பது என்ன என்பது நன்றாகத் தெரிந்து கொள்ளமுடியும். அதைப்போல் குளிர்ச்சியானது, மிருதுவானது, கடினமானது போன்ற எல்லாவற்றையும் தொட்டுத் தான் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. பலமுறை விழுந்து எழுந்தால்தான் நடை என்றால் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. பிறந்தவுடன் மூளையில் எதுவும் பதிவாவதில்லை. ஆரம்பத்தில் மூளை எதையும் கிரகிக்கும் தன்மையில் இருக்கிறதேயன்றி எதுவும் மூளையில் பதிவாகிப் பிறப்பதில்லை.

குழந்தை பிறந்தவுடன் அழுகின்ற காரணத்தால் நுரையீரல் விரிவடைகிறது. உடனுக்குடன் குழந்தையில் முதல் மலம் (காட்டுப் பீ) கழியும் தன்மை ஏற்படுகிறது. நுரையீரலும் மலக்குடலும் முதலில் இயங்குவதன் மூலம் ஐம்புலன்களில் ஒன்றான தோல் முதல் முதலில் ஸ்திரத்தன்மை பெற ஆரம்பிக்கிறது. இதனால், தொடு உணர்ச்சிகள் ஒன்றாகத் தூண்டப்பட்டு, வாசனைகளை உணரும் சக்திகள் யாவும் மூளையில் பதிவாகின்றன. எந்தக் குழந்தை தொட்டதற்கெல்லாம் தொட்டாச்சுருங்கி போல் அழுது கொண்டே உள்ளதோ நாம் உடனே தெரிந்து கொள்ள வேண்டும் - குழந்தை நுரையீரல் (அ) மலக்குடல் நல்ல நிலையில் இல்லை என்பதை மலக்குடலில் பூச்சிகள் அதிகமாக இருந்தாலும் குழந்தை எதற்கெடுத்தாலும் அழுது கொண்டே இருக்கும். அக்குபஞ்சர் வைத்தியத்தின் மூலம் நுரையீரல் சோர்வுற்று உள்ளதா? அல்லது மலக்குடலில் தொந்தரவுகள் உள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டும். தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், அலர்ஜிகள், கொசு கடித்தாலும் சொரிந்து கொண்டே இருக்கும் நிலை, தடிப்பாகி விடுதல், சிவந்து விடுதல், எளிதில் புண்கள் உண்டாகுதல் யாவும் தொடு உணர்ச்சிகளில் தேக்கம் ஏற்பட்டு மூளையில் சரியாகச் செயல்பட வைக்காத காரணத்தால் உண்டாகும் நோய்களே.

நுரையீரலையும், மலக் குடலையும் ஸ்திரப்படுத்துவதன் மூலம் எல்லாவற்றிற்கும் அழும் தன்மை உள்ள மனிதனை சரிப்படுத்தி விடலாம். பெரியோர்களைக் கூட சில சமயங்களில் பார்த்திருக்கிறோம் தனது கஷ்டங்களைச் சொல்லிக்கொண்டு வரும் போது அழுவார்கள். பெண்கள் பலர் அழுது கொண்டே தன் நிலையைக் கூறுவார்கள். இப்படிப்பட்டவர்கள் மன நிலைகோளாறு உள்ளவர்கள். ஆனால், மூளைக்கோளாறு உள்ளவர்கள் இல்லை. இந்த மன நிலைக்குக் காரணம் நுரையீரல் (அ) மலச்சிக்கல் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள தடைதான் காரணம்.

ஒரு சிலருக்கு பெரிய கூட்டத்தைப் பார்த்தவுடன் மூச்சு வாங்க ஆரம்பிக்கும். ஏதோ மூச்சை அடைப்பது போல் இருக்கும். அவர்கள் மனிதர்கள் குழுமி இருக்கும் இடங்களான பொதுக் கூட்டங்கள், கல்யாண மண்டபம், திருவிழாக்கள் போன்ற இடங்களைப் பார்த்தவுடன் மூச்சு விடமுடியாமல் கஷ்டப்படுவார்கள். இதை ஆங்கில வைத்தியம் மனநிலைக் கோளாறு என்று வர்ணிக்கும். (அ) தனக்குத் தெரியவில்லை என்று கையை விரித்துவிடும். ஆனால், அக்குபஞ்சர் வைத்தியமோ இது நுரையீரல் முழுமையாக சக்தி பெறாமல் இயங்கக்கூடிய நிலையால் தனக்கு சுவாசிக்கக் காற்றுப்பற்றாமல் போய்விடுமோ என்ற மனநிலையை உருவாக்குகிறது. நுரையீரலை முழுமையாக அக்குபஞ்சர் வைத்தியத்தில் இயங்க வைப்பதன் மூலம் மூளையில் உண்டாகாத இந்த மன நோயைச் சரிப்படுத்திவிடலாம்.

வேறு சிலருக்கோ அறைக்குள் நுழைந்தவுடன் எல்லாக் கதவுகளும் திறந்து இருக்கின்றனவா? என்று நோட்டம் விடுவார்கள். அப்படி திறந்து இல்லாவிட்டால் எல்லா ஜன்னல்களையும் திறந்துவிடுவார்கள். பிறகுதான் அவர்களுக்கு அந்த அறையினுள் இருக்க முடியும். இல்லாவிட்டால் அந்த அறையிலிருந்து எவ்வாறு வெளியேறுவது என்னும் எண்ணத்துடன் இருப்பார்கள். அதைப்போல குளியலறையில் கதவைத் தாழ்பாள் போட மாட்டார்கள். ஏனெனில், மூச்சு முட்டும்படியான சந்தர்ப்பங்களில் உடனே கதவைத் திறக்கும் ஆயத்தமான நிலையில் இருப்பார்கள். நுரையீரலில் போதியளவு சுவாசத்தன்மை இல்லாததால் ஏற்படும் விளைவுகளே இந்த விதமான மனநோய்கள்!

எவருக்கு உணவுப் பதார்த்தங்களைப் பார்த்தவுடன் பசி ஏற்பட்டு அதை சாப்பிடவேண்டும் என்று துடிக்கிறாரோ அவருக்கு வயிறு அளவுக்கு அதிகமாக இயங்குகிறது என அர்த்தம். அளவுக்கு அதிகமாக இயங்குவதால் நல்லதுதானே உடலுக்கு நன்மைதானே ஏற்படும் என நாம் நினைக்கலாம். ஆனால், உண்மை அதுவல்ல, அளவுக்கு மீறி உண்பதும் உணவுப் பொருள்கள் ஒழுங்காக ஜீரணிக்கப்படாமல் உடலுக்கு உபயோகப்படுத்த முடியாத பொருள்களாக மாற்றப்படுகிறது. நாளடைவில் மற்ற உறுப்புகள் போதிய சக்தி கிடைக்கப்பெறாமல் பழுதடைகின்றன. இதனால், வயிறு உப்புசம், வயிறு அல்சர், அஜீரணக்கோளாறுகள், உடல் பருமன் போன்றவைகள் ஏற்படுகின்றன.

வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் கொண்டவர்களின் மனோநிலை எப்படி என்றால் உணவகத்தில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே இன்னும் உணவு கொண்டுவரச் சொல்லி உணவை அதிகமாக வரழைத்துச்,சாப்பிட முடியாமல் திக்கு முக்காடிப் போவார்கள். எப்பொழுதும் விதம்விதமாக சாப்பாட்டைப் பற்றியே யோசனைக் கொண்டவர்களாகவும், நிறைய உணவு உண்ண வேண்டும் என்னும் மனோநிலை கொண்டவர்களாக வும் இருப்பார்கள். ஒரு காலத்தில் அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு விட்டு பழக்கப்பட்டவர்கள் வயிறு கெட்டுப்போனவுடன் எதையும் சாப்பிடமுடியாமல் கவலையில் வாடி உயிரையே விட்டவர்கள் எண்ணற்றோர் இருக்கிறார்கள். பத்தியச்சாப்பாட்டை சாப்பிட்டு பைத்தியமாவதை விட உயிரை விடுவதே மேல் எனக் கருதுபவர்களும் உள்ளார்கள்.

கவலை என்னும் மனோ நிலையும் வயிறு, மண்ணீரல் பாதிப்பினால் மேலும் அதிகமாக கவலையே வாழ்க்கையாகிவிடும். எந்த விஷயத்திற்கும் கவலைப்படுவார்கள், கவலையிலிருந்து மீள நினைத்தாலும் மீளமுடியாமல் இருக்கின்ற மனோநிலை வயிறு, மண்ணீரல் உபாதைகளால் உண்டாகிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மேலும் தேவையில்லாத நினைவுகள் சதா மனதை வருத்திக் கொண்டே இருக்கும். உதாரணமாக வீட்டை ஒழுங்காகப் பூட்டி விட்டு வந்தோமா? சமையற்கட்டில் நெருப்பை அணைத்து விட்டோமா? அறைகளில் 'லைட்' பொத்தான்களை அணைத்துவிட்டோமா? 'ஆபிசுக்கு' வேண்டிய சாமான்களை எடுத்துவைத்து விட்டோமா என்றும் திருப்பித் திருப்பி அதை எண்ணிய வண்ணம் இருப்பார்கள். கடைகளில் சில்லறை வாங்கிக்கொண்டு திரும்பத் திரும்ப அது சரியாக உள்ளதா? என்று எண்ணுவார்கள். இதற்குக் காரணம், வயிறு, மண்ணீரல் இயல்பாக இயங்காததால் உண்டாகும் நிலை. இவற்றை இயங்கவைப்பதன் மூலம் மேலே கூறிய மனநோய்களை அகற்றிவிடமுடியும்.

ஆங்கில வைத்தியத்தில் இதற்குள்ள வைத்தியம் மூளையைத் தூங்க வைக்கும், மந்தப்படுத்தும், நினைவாற்றலை மழுங்க வைக்கக் கூடிய மாத்திரைகளே! அது மட்டுமல்லாது வயிற்றை மேலும் மேலும் மோசமாக்கி மாத்திரைகளுக்கு நிரந்தர அடிமைகளாக்கிவிடும் நிலையையும் ஏற்படுத்திவிடும். அரை மயக்கத்தில், (அ) அரைத்தூக்கத்தில் இருந்தால்தான் நோயின்தன்மை தெரியாமல் இருக்கும். அதனால், மருந்தைப் பழக்கப்படுத்துவதற்காக மாதக்கணக்கில், வருடக்கணக்கில் நிறுத்தாமல் சாப்பிடவேண்டும் என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுவார்கள்.

*நன்றி:– பமிலி ஹெல்த்*

## கால் உருவ சொக்லேட்



சொக்கிலேட் மிகவும் உருசியானது படத்தில் காணப்படுவது கால் உருவில் தயாரிக்கப்பட்டுள்ள சொக்கிலேட் ஆகும். ஜேர்மனியின் 'கொலொஹேறனே' நகரில் இடம்பெற்ற சொக்கிலேட் தயாரிப்புக் கண்காட்சியில் அமெரிக்க கைவினையாளரொருவரால் தயாரிக்கப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்ட இந்தச் 'சொக்கிலேட் கால்' பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது.

## தங்கக் கழிப்பறை




கழிப்பறை உபகரணங்கள் தங்கத்தில் உருவாக்கப்பட்டுள்ளன என்ற செய்தி உங்களுக்கு ஆச்சரியம் தரக்கூடும். படத்தில் காணப்படுவது தங்கத்தால் உருவான கழிப்பறை ஏனைய உபகரணங்களும் தங்கத்தால் ஆனவையே. சீனாவின் ஹொங்ஹொங் நகரிலுள்ள ஆபரண விற்பனை நிறுவனமொன்று தயாரித்துள்ள இந்த உபகரணங்களை உருவாக்க 4.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகியுள்ளது.

## உலகை உலுக்கிய இயற்கை அனர்த்தங்கள்

சூரியகாந்தி வாரமலரில் மு.சிவநேசன் வரையும் 'உலகை உலுக்கிய இயற்றை அனர்த்தங்கள்' என்ற தொடர் கட்டுரை இந்த வாரம் தவிர்க்க முடியாத காரணங்களால் வெளியாகவில்லை. அடுத்தடுத்த வாரங்களில் அது தொடர்ந்து வெளிவரும்.

## பறக்கும் விமானத்தின் மீது ஏறி நின்று சாகசம்



ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகருக்கு மேலாக ஆகாயவெளியில் பறக்கும் விமானத்தின் இறக்கை ஒன்றின் மீதேறி நின்றவாறு ஒருவர் பயணம் செய்வதைக் காண நாமெல்லோரும் ஒரு கணம் ஆச்சரியத்தில் மூழ்க வேண்டியுள்ளதல்லவா?




## பறத்தலில் சாதனை

ஆகாய விமானமொன்றில் தனித்து ஒரேயடியாக உலகைச் சுற்றிவலம் வருதல் இலேசான காரியமல்ல. ஸ்டிச் பொசெட்ஸ் என்பவர் 80 மணிநேரத்தில் இடையீன்றி உலகைச் சுற்றி வந்து புதிய சாதனை படைக்கும் முயற்சியில் ஈடுபட்ட வேளையில் மொரொக்கோ வான்வெளியில் வைத்துப் பிடிக்கப்பட்ட படம் இது.

# நிழல் யுத்தம் நிஜ யுத்தமாகுமா?

"உண்மையில் சிங்கள அரசிற்கு சமாதான முயற்சிகளிலும் நாட்டமில்லை. அரசியல் தீர்விலும் நம்பிக்கை இல்லை. அதன் நாட்டமும் நம்பிக்கையும் போரிலேயே உள்ளது. போர்மூலம் புலிகளை வென்று தமிழர்களை நெருக்கவேண்டும் என்பதே சிங்கள அரசின் நோக்கமாகும்" என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' தனது 2005 மாசி - பங்குனி இதழில் 'சிங்கள அரசின் நிழல் யுத்தம்' என்று அதன் முன்பக்கப் பிரதான தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

"சிங்கள அரசு விரும்புவது போலப் புலிகளுக்கு எதிராக அது நடத்தும் நிழல் யுத்தம் அதற்கு நன்மைகளைக் கொடுக்க மாட்டாது. சிங்கள அரசின் சூழ்ச்சிகர அரசியலை சமாதான முயற்சிகளின் பங்காளி நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. நாசகார நோக்கம் கொண்ட இந்த நிழல் யுத்தத்தை சிங்கள அரசு உடனடியாக நிறுத்த முன்வரவேண்டும். இன்றேல் அது ஒரு நிஜப்போராக பரிணாம வளர்ச்சி அடைவதை எவராலும் தடுக்கமுடியாது போகும்" என்று விடுதலைப் புலிகள் இதழில் பிரதான செய்தி நிறைவு காண்கிறது.

கொழும்பிலிலுந்து வெளிவரும் ஆங்கில வாரப் பத்திரிகையான 'சண்டே லீடர்' அண்மையில் வெளியிட்டிருந்த இராணுவச் செய்தி புலனாய்வு விவகாரங்களைக் கொழும்புச் செய்தி ஊடகங்களும் யாழ்ப்பாண செய்தி ஊடகங்களும் முக்கியத்துவப்படுத்தி வெளியிட்டிருந்தன. அந்த ஆங்கிலப் பத்திரிகை அம்பலப்படுத்தியதாகக் கூறும் இராணுவ விவகாரங்களை 'விடுதலைப்புலிகள்' இதழும் சுட்டிக்காட்டித் தனது செய்தியை வடிவமைத்துள்ளது.

"தமிழ் - முஸ்லிம் மக்களை ஒழித்துக்கட்ட இந்த நிழல் யுத்தம் அரங்கேற்றப்படுகின்றது" என்று விவகாரங்களை மீள வலியுறுத்துகிறது புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகை.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து அவ்வியக்கத்தின் முன்னணித் தளபதிகளில் ஒருவராக, முன்னொருகாலத்தில் இலங்கை இந்தியப் படைகளுக்கு எதிராக அவ்வியக்கத்தின் சார்பில் படை நடத்திய கருணா அவர்கள் பிரிந்து சென்றதும் அவர் வெளியேற்றப்பட்டுள்ளார் என்று அவ்வமைப்பின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை ஊடாக அறியத்தந்ததும் ஈழ விடுதலைப் போரியல் வரலாற்றில் சுமைதாங்கிகளாக வலியும் வேதனையும் அனுபவிக்கும் யுக்திகள் அறியாத சாதாரண தமிழ் மக்களுக்கு வியப்பூட்டிய நிகழ்வுகள் தான். அதிர்ஷ்டமற்ற அத்தியாயங்கள் தான். இந்த அத்தியாயங்கள் தான் நிழல் யுத்தமென்று சொல்லப்படும்.– மானிட வேட்டையின் - வெளித்தெரிந்த முதல் அறிகுறிகள்.

"இந்த நிழல் யுத்தத்தின் பலியாடுகள் படைமுகாம்களுக்கு உள்ளேயே பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கொலைக்கான ஆயுதங்களும் படையினராலேயே வழங்கப்படுகின்றன. படைத்தரப்பின் உதவியுடன் படைமுகாம்களுக்கு அருகாமையில் இந்தக் கொலைத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. பல சமயங்களில் சிங்களப் படையாள்களே சிவில் உடைதரித்துக் கொலைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். ஆயுதக் குழுவொன்றை உருவாக்கி அதற்குக் கொலைக் கருவிகளையும் வழங்கி அதை இயக்குவது போர்நிறுத்த உடன்பாட்டிற்கு விரோதமானது" - என்றும் 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை விளக்குகிறது.

'தமிழீழ விடுதலை' என்ற அசைக்கமுடியாத அமைப்புக் குறிக்கோளுடன் (Organizational Goal) கட்டியெழுப்பப்பட்டு வடிவமைக்கப்பட்டதே தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற இயக்கம் என்பதை அதன் தலைமையும் தத்துவாசிரியரும் அவர்களது அனைத்து ஆவண வெளியீடுகளில் நூல் வெளியீடுகளிலும் தெட்டத் தெளிவாகத் தெரிவித்தே வந்துள்ளனர். 'தமிழீழ விடுதலை' என்ற அதன் மூல உபாயத்திற்கு ஏற்பவே புலிகளின் மனிதவளங்கள், பௌதீக வளங்கள், புவியியல் ரீதியாகக் கிடைக்கும் இயற்கை வளங்கள் முதலியன திட்டமிடப்பட்டு அதன் கட்டமைப்பு ரீதியான பிரிவுகள், தொழிற்பகுப்புக்கள் என்பன தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன என்பதை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அதற்கு ஏற்பவே மிக உக்கிரமான யுத்த உபாயங்களை விடுதலைப்புலிகள் இயக்கம் கடைப்பிடித்து வந்துள்ளது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

புலிகள் அமைப்பு தனது மக்களின் நலன்கள் கருதியும் ஏறத்தாழ மூன்றாண்டுகளுக்கு தனது கருவிகளுக்கும் தனது போராளிகளுக்கும் ஓய்வு ஒன்றைக் கொடுத்துள்ளது. ஆனால், இது அதன் அமைப்புக்குறிக்கோளை எவ்வளவு தூரம் சவால்கரமான சூழ்நிலைக்கு நகர்த்தியுள்ளது என்பதை அந்த அமைப்பின் உட் சூத்திரத்தை (Internal Formula) விளங்கியுள்ள நெருக்கமான 'உள்ளாள்' ஒருவரைத்தவிர 'வயிற்றுப்பிழைப்புக்காக' எழுதும் எந்த இராணுவ ஆய்வாளர்களாலும் சொல்லிவிட முடியாது. விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது நவீன இராணுவ அரசியல் வரலாற்றுக்குப் 'புரியாத ஒரு நவீன புதிர்' என்பதை ஓரிரு அரசியல் இராணுவ ஆராய்ச்சியாளர்களைத் தவிர ஏனைய அனைவரும் ஒத்துக்கொள்கின்றனர். அந்த நவீன புதிர் உலகப் பொலீசுக்காரத் தனத்துக்கும், பிராந்திய வல்லரசுச் சண்டித்தனத்துக்கும் ஈடுகொடுக்கும் என்றும் நம்பப்படுகிறது . எது எவ்வாறாயினும், ஐரோப்பாவும் அமெரிக்காவும் அரசுகள் என்ற அடிப்படையிலும் அரச சார்பற்ற, அவற்றின் அமைப்புகள் என்ற வகையிலும் விடுதலைப்புலிகளை அண்மைக்காலமாக நேசிக்கத்தொடங்கியுள்ளன என்பதுபோல் தெரிகிறது.

வலைப்பின்னலுடன் கூடிய சந்தைப் பொருளாதார பொறிமுறை, கேந்திரமுக்கியத்துவம் மிக்க இலங்கைத் தீவில் இனிமேல் வெடித்து விடக்கூடிய போர் ஒன்றினால் சேதப்படுத்தப்பட்டுவிடாதபடி 'காவாந்து' பண்ணிக்கொள்வதே இவ்வாறான 'செயற்கைத்தனமான நேசத்தின்' (Artificial Love) முக்கிய நோக்கம் என்பதை இப்பொழுது யாழ்ப்பாணத்துக் கோவில்களில் கடலைக் கொட்டை விற்பவனும் நன்கு விளங்கிக்கொள்கிறான்.

யார் யார் எந்த எந்த நலன்களின் அடிப்படையில் செயற்பாட்டாலும் இத்தனை காலமும் ஈழத் தமிழர்கள் சிந்திய கண்ணீருக்கும் இரத்தத்துக்கும் மதிப்புக்கொடுக்காமல் நகரமுடியாது என்பதை அம்மக்களின் சார்பில் தெளிவாகப் பிரகடனம் செய்யக் கூடிய அரசியல் இயக்கம் ஒன்று உள்ளது என்றால், அது தமிழீழ விடுதலைப் புலிகள் தான் என்பதை விடுதலைப் புலிகளைத் 'தாறுமாறாக' விமர்சிப்பவர்களே ஏற்றுக்கொள்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் அமைப்பு தமிழர்களின் அரசியல் இராணுவ இயல்பாக (Politico - Military Movement) உள்ளமை தமிழர்களின் வரலாற்றுப் பரிமாண நிர்ப்பந்தம் என்பதை உள்ளூர், சர்வதேச வரலாற்றாசிரியர்கள் முற்றிலும் ஏற்றுக்கொள்கின்றனர்.

தமது வல்லமையால் ஏக பரிமாணம் பெற்றுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பு, தமது பலமான யுத்திகளின் அடிப்படையில் ஏக பிரதிநிதித்துவம் கோருவது என்பது 'வல்லது நீடித்துச் சீவிக்கும்' அல்லது, 'வல்லது தப்பி வாழும்' என்ற டார்வினின் கூர்ப்புக் கோட்பாட்டுக்கு அப்பாற்பட்டதல்லவே என்கிறார் இய்றகை விஞ்ஞான ஆர்வலர் ஒருவர். சமூக விஞ்ஞானக் கோட்பாடுகள் இயற்கை விஞ்ஞான அணுகுமுறைகளின் மூலம் முற்றிலும் வெற்றிகரமாக அடையமுடியாதவை எனினும், ஈழத்தமிழர்களின் வரலாறு பரிணமித்த எந்த விளைவையும் அவர்கள் வரலாற்று இயங்கியல் விதிக்கு உட்படுத்தியேதான் பார்க்கவேண்டும். அவ்வாறே உள்ளூர் சர்வதேச சக்திகளும் புரிந்தாக வேண்டும்.

டன்ஸ்ரன் லூயிஸ்

# மூத்த பத்திரிகை ஆளர்கள்

"■கைவண்டி போய், டீசல் இயந்திர ரயில் வந்து... தபால் ரயிலுடன் யாழ்.தேவி, உத்தரதேவி போன்ற கடுகதி ரயில்கள் வந்து... அதற்குப்பின்னர் இன்னும் அதிவேக இன்ரர்சிற்றி வந்து... அதன் பின்னர் அந்தோ, எல்லாமே போய்விட்டது..."

முன்னொரு சமயம் இதுபோன்றதொரு பத்தியிலே அப்படி எழுதியிருந்தேன். இப்பொழுது அதனோடும் ஓரளவு தொடர்பு கொண்டிருந்ததான இன்றைய விவரத்துக்கு வருகிறேன்.

தபால் விநியோகிப்பவர்கள் போலவே அப்பொழுதெல்லாம் பத்திரிகைகளை வீடுகள் தோறும் சென்று விநியோகிப்பவர்கள் என்றும் பலர் இங்கெல்லாம் இருந்தனர். ஆனால், ரயில் எப்படியோ அப்படியே அத் தொழிலும் போய்விட்டது...

கொழும்பு கோட்டையிலிருந்து வருகின்ற இரவுத் தபால் ரயிலிலிருந்து (Mail train) தபால் பொதிகள் வருவதுபோல பத்திரிகைப் பொதிகளும் வரும். கொழும்பில் அன்றாடம் விற்பனைக்கு வருகின்ற பத்திரிகைகள் நகரப் பதிப்பு (City edition) என்றும், இங்கு அருத்த நாள் விற்பனைக்கென அன்றிரவு ரயிலில் அனுப்பப்படும் பத்திரிகைகள் மாகாணப்பதிவு (Provincial edition) என்றும் வழங்கப்படும். மாகாணப் பதிப்பு முன்பக்கத் தலைப்புச் செய்திகள் நகரப் பதிப்புடன் அல்லது பிந்திய பதிப்புடன் (Late edition) ஒப்பிடும் போது 'சுடச்சுட' என்றில்லாமல் 'ஆறிய கஞ்சி' யாகத்தான் இருக்கும்.

பத்திரிகைப் பொதிகள் முகவர்களுக்கென்று மட்டுமல்லாது மேலே குறிப்பிட்ட அங்கீகரிக்கப்பட்ட பல தனிப்பட்டவர்களுக்கும் அனுப்பப்படும் பொதிகளின்மேல் அவர்களின் பெயர் முகவரிகள் ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில் அச்சில் பொறிக்கப்பட்டிருக்கும். கூடவே பத்திரிகை முகவர் (News Agent) என்பதும் தான்!

முக்கியமான ரயில் நிலையங்களிலே தபால் பொதிகளைப் போலவே பத்திரிகைப் பொதிகளையும் ரயில் தள்ளிவிட்டுச் செல்லும். அங்கே அதனை எதிர்பார்த்து அதிகாலை முதல் காத்திருக்கும் 'பேப்பர்'காரர்கள் தங்களுக்குரியதைப் பெற்றுக்கொள்வார்கள். பொதியைப் பிரித்துச் சரி பார்த்துக்கொண்டதும் தங்கள் சைக்கிள்களில் அவைகளைக் கட்டிக்கொண்டும் தேவைக்கேற்ப முன் கூடையில் அடுக்கிக்கொண்டும் அங்கிருந்து சாரி சாரியாகப் புறப்பட்டுச் செல்வார்கள். தபால் நிலையங்களில் தபாற் சேவகர்கள் தரம் பிரித்த கடிதங்கள் பொதிகளுடன் புறப்பட்டுச் செல்வதை ஒத்த காட்சிதான் அதுவும்...

பின்னர் பத்திரிகை நிறுவனங்கள் தங்கள் கிளை அலுவலகங்களை இங்கே நிறுவியதும் அங்கிருந்தும் அந்தப் பணிகள் தொடர்ந்தது. குறிப்பாக அசோசியேட்டட் நியூஸ் பேப்பர் ஒவ் சிலோன் லிமிட்டெட் (லேக் ஹவுஸ்) தங்கள் பத்திரிகைப் பொதிகளை வானில், தங்கள் கிளைகளுக்கு அனுப்பத்




தொடங்கின. அவர்கள் கொழும்பிலிருந்து கதிர்காமம் வரையிலான தங்கள் பத்திரிகைப் பொதி விநியோகத்தை ஒரு சொகுசுப் பேருந்து மூலமே செய்கிறார்கள். கதிர்காமம் செல்ல விரும்பும் பயணிகள் விரும்பினால் அந்த பேருந்தில் இடம்பிடித்துக் கொள்வதற்காக முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம். தினமும் முன் இரவில் கொழும்பிலிருந்து புறப்பட்டு அருத்த நாள் அதிகாலை கதிர்காமத்தை அடையுமாம் அந்தக் கடமையே கண்ணான பேருந்து.

இந்தச் சம்பவங்களை நினைவு கூர்ந்து எழுதுகின்ற அந்தக் குறிப்பிட்ட பொற் காலத்திலே குடா நாட்டிலே ஒரேயொரு தமிழ்த் தினசரியாக 'ஈழநாடு' வெளிவந்து கொண்டிருந்தது. அதன் விலை பத்துச் சதமாக இருந்தது. தினகரன், வீரகேசரி மற்றும் ஆங்கிலத் தினசரிகள் பதினைந்து சதமாகவும் அவைகளின் ஞாயிறு பதிப்புக்கள் இருபதோ இருபத்தைந்து சதமாகவோ இருந்திருக்கவேண்டும். அந்தப் பேப்பர்காரர்கள் – அப்பொழுதெல்லாம் ஆங்கிலப் பத்திரிகைகள் தான் அதிகமாக விற்பனையாகிவந்தன – பெரிய வார்த்தைகளைச் சொல்லி இடர்ப்படாதிருப்பதற்காக அவர்கள் 'டெயிலி', 'ரைம்ஸ்', 'மிரர்' என்ற வாறாகத்தான் சொல்லிக்கொள்வார்கள்.

வாடிக்கைக்காரர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் ஆனந்தவிகடன் தொடக்கம் இலஸ்ரேட்டற், வீக்லி, அம்புலிமாமா வரையிலான பருவ வெளியீடுகளையும் எடுத்துவந்து கொடுத்தனர். பின்னணியில் இவர்கள் பத்திரிகை விநியோகத்துக்காகத் தங்கள் வாடிக்கையாளர்களிடமிருந்து விநியோகக் கட்டணம் (Delivery charge) என்றும் தனியாகப் பெற்றுக்கொண்டனர்.

மேலிடத்திலிருந்து இவர்களுக்கு ஒரு கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது. அதாவது தங்கள் வெளியீடுகளுக்கு விநியோகிப்பவர்களாக இருப்பவர்கள் போட்டிப் பத்திரிகைகளைத் தொடக்கூடாது என்பதுதான் அது. இருந்தாலும் சிலர் ஒன்றாகப் புறப்பட்டுப் பிரியும் இடங்களில் சில பத்திரிகைப் பரிமாற்றங்களும் செய்வதுண்டு.

தபாற் சேவகர்கள் 'விசில்' ஊதித் தங்கள் வருகையைத் தெரிவிப்பதுபோல இவர்கள் 'அப்பம்மா' கோர்ண் அல்லது பற்றிக் கோர்ணை ஒலிக்கச் செய்வார்கள். அல்லது, அவர்கள் பெல் அடிக்கும் விதத்திலிருந்தே 'பேப்பர் வருகிறது' என்பதைப் புரிந்துகொள்ளவும் முடியும்.

ரயில் போய் விட்டதாலும் நாட்டிலே இயல்பு வாழ்க்கை சீர் குலைந்ததாலும் அந்தத் தொழில் போய் விட்டதெனினும் அந்த நினைவு போய்விடவில்லை. அந்தச் சைக்கிள் பத்திரிகை விநியோகிப்பர்வர்களுக்கு தபாற்சேவகர்களைப் போலவே சமூகத்திலே ஒரு மதிப்பு இருந்தது. அதற்குக் காரணம் அவர்கள் நியூஸ் ஏஜென்டுகளல்லவா? அவர்களது இல்லங்களும் நூல்நிலையங்கள்போலத்தான் இருக்கும். அயலிலுள்ள பலருக்குப் படிக்கும் பழக்கத்தை அவர்களும் தான் ஏற்படுத்தினார்கள், அவர்களும் படித்தார்கள். எனக்குத் தெரிய கதிரவேலு, நல்லதம்பி, நடராசா, துரைராசா, துரைசிங்கம் என்றெல்லாம் வயதானவர்களே அநேகமாக அத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவர்களை இன்னொரு கோணத்தில் '**மூத்த பத்திரிகை ஆளர்கள்**' என்று சொன்னாலும் மிகப் பொருத்தமாகவே இருக்கும் போலிருக்கிறது.

– சண் அங்கிள்